கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(04.02.2018 - 04 மாசி 2018 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 08, கதிர் - 177, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2018

## திருத்தந்தையின் இம்மாத கருத்து

பருப்பொருள் (உடைமைகள்) அரசியல் ஆன்மிகம் ஆகியவற்றின் மீது அதிகாரம் கொண்டவர்கள் ஊழலுக்கான எந்த தூண்டுதலையும் எதிர்க்கும்படியாக திருத்தந்தையுடன் இணைந்து செபிப்போம்.

# ஞான ஒளி

ඥාන ඔළි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05




பக்கம் 03 உண்மையான சுதந்திரம்



பக்கம் 14 சிலுவைப்பாதை



பக்கம் XVIII உண்ணா நோன்பிருப்போம்

## எமது நாட்டின் 70வது சுதந்திர தினம்



மரியன்னையின் அன்பு பிள்ளைகளாகிய நாம், நமது நாட்டின் சுதந்திர தினத்தை கொண்டாடும் இவ்வேளையில் மரியா பாடிய பாடலில் காணக் கிடக்கும் அக, புற மதிப்பீடுகளை வாழ்வாக்கி, கடவுளுக்கு அஞ்சி, தாழ்வுற்ற மக்களைத் தூக்கி விட்டு, பசித்தவரை புசிக்கச் செய்து, ஒடுக்கப்பட்டவருக்கு உரிமையும், நீதியும் கிடைக்கச் செய்து எமது நாட்டில் உண்மையான விடுதலையும் சமத்துவமும், சாந்தியும் நிலவ உழைப்போம்.

**அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துக்கள்.**

# உயர்மறைமாவட்டத்தில் ஓய்வுபெற்ற குருக்களுக்கான வதிவிடம் ஆசீர்வதிப்பு

கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் ஓய்வுபெற்ற குருக்களுக்காக, தேவத்தையில் வதிவிடம் ஒன்று அமையப்பெற்றுள்ளது. இவ்வதிவிடமானது புனர்நிர்மானம் செய்யப்பட்டு அனைத்து வசதிகளுடன் காணப்படுகின்றது. இவ்வதிவிடம் தை மாதம் 29ம் திகதி, கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில், துணை ஆயர் மேதகு மெக்வல் சில்வா ஆண்டகை, ஓய்வுபெற்ற ஆயர்களான அதிமேதகு ஆயர் நீக்கலஸ் மார்க்கஸ் ஆண்டகை, மேதகு ஆயர் ஒஸ்வல் கோமிஸ் ஆண்டகை மற்றும் மறைமாவட்ட குருக்கள் அனைவரது முன்னிலையிலும் ஆசீர்வதிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.



படம் மற்றும் தகவல் : திரு. சுனில்

# குருத்துவம் என்பது பதவியல்ல, அது இறை அழைத்தலாகும்



காலி மறைமாவட்டத்தில் 6 தியாக்கோண்மார்கள் தேவத்தை இலங்கை நாயகி பேராலயத்தில் காலி மறைமாவட்ட ஆயர் மேதகு ரேமன்ட் விக்கிரமசிங்க ஆண்டகையினால் குருத்துவத் திருநிலைப்படுத்தப்பட்டார்கள். அருட்பணி. மாலக்க லெனாட் அடிகளாரும், அருட்பணி. வஜீர சில்வா அடிகளாரும் இணைந்து இக்கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்....

15




"இப்பொழுது உண்ணா நோன்பிருந்து அழுது புலம்பிக் கொண்டு உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்" (யோவே 2:12)

| | |
|---|---|
| விபூதிப் புதன் | : 14.02.2018 |
| குருத்தோலை ஞாயிறு | : 25.03.2018 |
| பெரிய வியாழன் | : 29.03.2018 |
| பெரிய வெள்ளி | : 30.03.2018 |
| அல்லேலூயா சனி | : 31.03.2018 |
| உயிர்ப்பு ஞாயிறு | : 01.04.2018 |



## கொழும்பு திறந்தவெளி சிலுவைப் பாதை

### தவக்காலத்தின் நான்காம் வாரத்தில்



கொழும்பு, யோசேவ்வாஸ் மன்றம் 22வது தடவையாக தமிழ் மொழியில் ஒழுங்கு செய்யும், திறந்தவெளி பெரிய சிலுவைப்பாதையானது இவ்வருடம் தவக்காலத்தின் 4வது வாரமாகிய பங்குனி 11ம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலய முற்றத்திலிருந்து ஆரம்பமாகி, கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம், செக்கடித்தெரு வேளாங்கண்ணி ஆலயம் வழியாக கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயம் வந்தடையும். அனைவரையும் இச்சிலுவைப்பாதையில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

**தகவல் : அருட்தந்தை கிளேரியன் பர்னாந்து**

**கொழும்பு யோசேவ்வாஸ் மன்றம்**

## தேவத்தையில் லூர்து அன்னை ஆலய திறப்பு – 03.02.2018

தேவத்தையில் புதிதாகக் கட்டப்பட்ட புனித லூர்த்து அன்னை ஆலய திறப்பு விழாவானது இம்மாதம் 3ம் திகதி சனிக்கிழமை நடைபெறுகின்றது. அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலைத் தியானமும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் இடம்பெறும், திருப்பலியின் பின் 6.15 மணிக்கு மெழுகுதிரி பவனியும், குணமளித்தல் வழிபாடும், அதனைத் தொடர்ந்து ஆசீர்வாதமும் நடைபெறும்.

அனைத்து பங்குகளிலிருந்தும் குறைந்தது ஒரு பஸ்சுக்கான மக்கள் வீதம் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

## இலங்கை அன்னை திருவிழா

### தேசிய பேராலயம் தேவத்தை

### மாசி 04ஆம் திகதி (04.02.2018)

இலங்கை அன்னையின் வருடாந்த திருவிழா இம்மாதம் 04ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேவத்தை தேசிய பேராலயத்தில் கொண்டாடப்படுகின்றது. அன்று நண்பகல் 12.45 மணிக்கு தமிழில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

## கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தல திருவிழா - 2018



**23.02.2018 – 24.02.2018**

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தல வருடாந்த திருவிழாவும், தவக்கால...

15

**உடைந்த உள்ளத்தோரை ஆண்டவர் குணப்படுத்துகிறார் (தி.பா 147)**



2018ஆம் ஆண்டு புதுவருடத்தில், நல்லாயன் ஆண்டை முன்னிட்டு நீர்கொழும்பு புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் அமைந்த ஆலயத்தில், பங்குத்தந்தை அருட்பணி சந்திரசிறி பெரேரா அவர்களின் அழைப்பில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நல்லாயனின் திருசுருபமானது ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

**தகவல் : திரு. கல்தேர**

## "செத் சரண" (நிறுவனம்) இப்போது ஆயரில்லத்தில்...



"செத் சரண" நிறுவனத்தின் காரியாலயமானது இப்போது, கொழும்பு உயர்மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் யூபிலி மண்டபத்தின் இரண்டாவது மாடியில் அமைக்கப்பெற்றுள்ளது. இவ் நிறுவனத்தின் ஆரம்ப கர்த்தாவாக இருந்த அருட்தந்தை இன்றைய கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையே இவ் அலுவலகத்தை திறந்து வைத்தார். அத்துடன் கொழும்பு மறைமாவட்ட துணை ஆயரான மெல்ஸ்வல் சில்வா ஆண்டகையினால் ஆசீர்வாதம் வழங்கப்பட்டது.

**இந்நிறுவனத்தின் புதிய முகவரியானது:**
**"செத் சரண கரிதாஸ் கொழும்பு",**
**இல 20, ஆயர் இல்லம்,**
**கொழும்பு – 08**
**தொலைபேசி இலக்கம்:– 0112688999**
**வெள்ளிக்கிழமை மக்களின் தரிசிப்பு தினமாகும்.**

## கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம்



கிறிஸ்தவ ஒன்றிய வாரத்தை முன்னிட்டு இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் மேதகு. க்ளீட்டஸ் சந்திரசிறி பெரேரா ஆண்டகையின் தலைமையில் வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலயத்தில் கடந்த மாதம் 21ந் திகதி இவ்வைபவம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதனை தேசிய கிறிஸ்தவ ஒன்றியத்தவர்கள் மற்றும் தேசிய கத்தோலிக்க பல்சமய தொடர்பாடல் அங்கத்தவர்கள் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் கருப்பொருளானது


**"ஆண்டவரே, உம் வலக்கை வலிமையில் மாண்புற்றது, ஆண்டவரே, உமது வலக்கை பகைவரைச் சிதறடிக்கின்றது" (வி.ப 15:6)**

**தகவல் : திரு. மைக்கல் பர்னாந்து புள்ளே**

# இலங்கை வேதாகம சங்கத்தின் புதிய செயலாளர் நியமன வைபவமும் திருப்பலியும்







இலங்கை வேதாகம சங்கத்தின் புதிய செயலாளராக மதிப்பிற்குரிய பிரியன்த்த விஜேகுணவர்தன அவர்கள் நியமிக்கப்பட்டார். இந் நிகழ்வும், திருப்பலியும் 2018ல் தை மாதம் 13ம் திகதி, கொழும்பு - 07, பொளதாலோக மாவத்தையில் அமைந்துள்ள கிறிஸ்து அரசரின் ஆலயத்தில் நடைபெற்றது. இத்தினத்தில் 2018ம் ஆண்டை இளைஞர்கள் மற்றும் பிள்ளைகளின் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டது.

இலங்கையிலுள்ள அனைத்து கிறிஸ்தவ சபைகளும், இலங்கை வேதாகம சங்கத்துடன் ஒன்றுபட்டு செயற்படுவதால், அச்சபைகளின் தலைவர் உள்ளிட்ட அங்கத்தவர்களின் பங்களிப்பானது சிறப்பாக காணப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க அம்சமாக இந்நிகழ்வு அமைந்தது.

இந்நிகழ்வில் நன்றியுரை வழங்கிய அதிமேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தம் உரையில் இவ்வாறு குறிப்பிட்டார்: "வேதாகம சங்கம் உட்பட எம் அனைவரின் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலத்தில் இறைவனால் கிடைத்த, கிடைக்கப்பெற்ற, கிடைக்கப்போகும் நன்மைத்தனம், இரக்கம் போன்ற உயரிய ஆசீர்வாதங்களுக்கு நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம்" எனத் தெரிவித்தார்.

மேலும் அதிமேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையும், அனைத்து சபையின் தலைவர்கள் மற்றும் அங்கத்தவர்கள், புதிய செயலாளரை வரவேற்கும் திருப்பலியில் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இலங்கை வேதாகம சங்கத்தின் தலைவரான ஸ்ரீயன்த சேனாரத்ன அவர்கள், திருப்பாடல்கள் 133 வாசித்து புதிய செயலாளர் அவர்களை வரவேற்றார். மேலும் இவ்வரவேற்புரையிலே 2018ம் ஆண்டு இளைஞர்கள் மற்றும் பிள்ளைகளின் ஆண்டாக அறிவித்தார்.

திரு பிரியன்த விஜேகுணவர்த்தன அவர்கள் அவரது உரையில் இவ்வாறு குறிப்பிட்டார். கிறிஸ்தவ சமூகத்தில் இருக்கும் வளங்களை ஒன்றுதிரட்டி, இலங்கை குடிமக்களுக்காக, பரிசுத்த வேதாகமத்தின் தேவையை பயனுள்ள விதத்தில் நிறைவு செய்வதற்காக, சேவையை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், இச் சபைகள் ஒவ்வொன்றுடனும் பரஸ்பர உறவை கட்டியெழுப்பவேண்டும் என்பதன் அவசியத்தையும் குறிப்பிட்டார். மேலும், 205 வருட பயண வரலாற்றைக் கொண்டுள்ள இலங்கை வேதாகம சங்கத்தின் வளர்ச்சிக்கு, மற்றைய சபைகளின் பங்களிப்பு தொடர்ந்தும் அவசியம் என அவர் வலியுறுத்தினார். அதேபோல் இவ் அனைத்து சபைகளின் வளர்ச்சிக்கு, இலங்கை வேதாகம சங்கத்தின் பங்களிப்பு எப்போதும் இருக்குமென அவர் தெரிவித்துக்கொண்டார். "எம் நாட்டு மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ இலங்கை வேதாகம சங்கத்தில் அங்கம் வகிக்கும் நாம், இறைவனின், மகிமைக்காக, எம் நாட்டு மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக உதவும் சங்கமாக, இலங்கை வேதாகம சங்கத்தின் அங்கத்தவர்களாக இருக்க வேண்டும் என்பது, எமது செபமாக இருக்க வேண்டும்" என்று அவரது உரையின் இறுதிக் கருத்தாக அமைந்தது.

மேலும் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள பிள்ளைகளுக்காக விசேடவிதத்தில் உருவாக்கப் பெற்ற புனித லூக்கா நற்செய்தி பற்றிய வீடியோ இறுவெட்டு அன்றைய தினம் வெளியிடப்பட்டது. மேலும் இவ்வாறான சேவைகள் இலங்கை வேதாகம சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் என்பது எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறுவதோடு, புதிய செயலாளரின் பணிக்கான வாழ்த்தும் ஆசீரும் வேண்டி நிற்கின்றோம்.

**தகவல் : இலங்கை வேதாகமச் சங்கம்**

# இரத்தினபுரி மறைமாவட்டத்தில் புதிய ஆலயவளவில் புதுவருடத் தினத்தன்று திருப்பலி நிகழ்வு







இரத்தினபுரி பேராலய சகோதர ஆலயமொன்று புனித அன்னை ஆரோக்கிய மாதாவுக்கு புது ஆலய கட்டுமாணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்க சிங்களகொட தோட்ட இறைமக்களின் ஆசையும், ஆதங்கமும் ஆலய முன்வளவிலே புது வருடத் திருப்பலி ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று பங்கு ஆலய பங்குத் தந்தையின் அனுமதியுடன் நடைபெற்ற திருப்பலியில் கலந்துகொண்ட மக்களையும், குழந்தைகளையும், அருட்தந்தை சவேரியார் (கார்மேல்) திருப்பலியின் போது அருளுரையாற்றுவதையும் படத்தில் காணலாம்

**தகவல் : மேரி இருதயநாதன், மறையாசிரியர், பேராலயம், இரத்தினபுரி**








மத்துகமை அருத்கலகந்த தோட்டத்தில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் புனித செபஸ்தியார் ஆலயத்தின் திருவிழா தை மாதம் 18ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 20ந் திகதி திருவிழா கொண்டாடப்பட்டது. இத்திருவிழா திருப்பலியானது அருட்பணி. கலன பீரிஸ், அடிகளார், அருட்பணி. தேவ சீலன் அடிகளார் ஆகியோரின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத் தோட்டத்தில் இருக்கும் கத்தோலிக்க, கிறிஸ்தவ, இந்து மக்கள் அனைவரும் இணைந்து இத்திருவிழாவினை சிறப்பாகக் கொண்டாடினர்.

**தகவல் : அருட்பணி. ஒனாசிஸ் பர்னாந்து.**

## இறைபதம் அடைந்தார்.



அருட்பணி. ஒலிவ வீரக்கொடி

இவர் 1965ம் ஆண்டு குருவாக....

15

ஞான ஒளி
GNANA OLI
ඥාන ඔලි
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
04 மாசி, 2018 ஞாயிற்றுக்கிழமை.

# பாவத்தைக் கைவிட்டால்தான் வாழ்க்கையின் பொருளைப் புரிந்து கொள்ள இயலும்.

எமது நாடு 70வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இவ்வேளையில் நாட்டையும், நாட்டு மக்களையும் இலங்கையின் அன்னையின் பாதத்தில் ஒப்படைக்கின்றோம். அத்தோடு எமது நாட்டில் அமைதி உருவாகவும், வளங்கள் பெருகவும், நாட்டின் அனைத்து மக்களும் சகோதரத்துடன் வாழவும் அன்னையிடம் வேண்டிநிற்கின்றேன். உங்கள் அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இம்மாதம் 14ம் திகதி மீண்டும் ஒரு தவக்காலத்தில் காலடி எடுத்து வைக்கின்றோம். இத்தவக்காலம் ஒவ்வொரு கத்தோலிக்கரையும் தமது வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்க அழைத்துநிற்கின்றது. இத்தவக்காலத்தில் செபம், தபம், நோன்பு, பகிர்வு போன்ற தவக்காரியங்களில் ஈடுபடுவோம். **“இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து அழுது புலம்பிக்கொண்டு உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள். நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம் இதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்” (யோவேல் 2:12-13).**

பாவத்தைக் கைவிட்டால்தான் வாழ்க்கையின் பொருளைப் புரிந்து கொள்ள இயலும். இதற்கான தகுந்த காலந்தான் தவக்காலம். உலகம் முழுவதும் மீட்படைய வேண்டும் என்ற எண்ணத்தால்தான் இறைமகன் மனிதனாக இம்மண்ணுலகிற்கு வந்ததும் சிலுவைச் சாவை ஏற்றுக்கொண்டதும் உயிர்த்தெழுந்ததும் என்று திருத்தூதர் யோவான் கூறுகின்றார். யோவான் 1:29 இவ்வாறு கூறுகிறது இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர். ஆம் நாம் நல்லாயன் ஆண்டில் வாழ்ந்துக்கொண்டிருக்கின்றோம். நல்லாயன் இயேசு 99 ஆடுகளை விட்டுவிட்டு காணாமல் போன அந்த ஒரு ஆட்டைத் தேடிச் சென்றார். தேடிச் செல்வது என்பது ஒருவர் எம் மீது கொள்ளும் அளவற்ற அன்பும் கனிவும் பற்றும் இருப்பதால்தான். இக்காலத்தில்தான் நாமும் இறைவனோடு ஒன்றிக்க அழைக்கப்படுகின்றோம்.

தவக்காலம் இறை இரக்கத்தின் காலம். செபத்தோடும் தவத்தோடும் அன்பு செயல்பாடுகளோடும் இப்புனித காலத்தை ஆரம்பிக்க திருச்சபையானது எம்மை அழைத்து நிற்கின்றது. செபம், நோன்பு, அன்புச் செயல்கள் இவை மூன்றும் யூத கலாச்சாரத்தின் ஆன்மீக படிகளின் மூன்று முக்கியத் தூண்களாக இருந்தவை. எனவே இதே படிமுறையை நாமும் பின்பற்றி தவக்காலத்தை ஆரம்பிப்போம். நாம் பாவ வாழ்வைவிட்டு மனமாற்றமடைய மீட்படைய புது வாழ்வுப் பெற இறைவனால் நமக்கு தரப்படும் மிகச்சிறப்பான காலந்தான் தவக்காலம். மனமாற்றம் என்பது உள்ளத்தை இறைவனுக்கு முழுமையாக கொடுப்பதாகும். மனமாற்றம் என்பது உள்ளார்ந்த மனமாற்றத்தை, இதய மாற்றத்தை குறிக்கிறது. நமது வாழ்வு முழுவதையுமே கிறிஸ்துவின் மனநிலையின் அடிப்படையில் அமைத்தல், முழு உள்ளத்துடன் இறைவனிடம் திரும்புதல், பாவத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தல், தீமைகளிலிருந்து விலகுதல், நாம் செய்த தீச்செயல்களை வெறுத்துத் தள்ளுதல், புதிய வாழ்வு வாழ உறுதியான நிலைப்பாடு எடுத்தல். மனந்திரும்புவோரின் செயல்களில் முதலிடம் பெறுவது மனத்துயராகும். அது செய்த பாவத்தின் மீது உளமார்ந்த வேதனையும் வெறுப்பும் அத்துடன் இனிமேல் பாவம் செய்வதில்லை என்ற மன உறுதியுமாகும். இறையரசை அணுக ஒரே வழி முழு மனிதனின் ஆழமான மனமாற்றம். மனமாற்றம் உண்மையாக இருப்பது இந்த இதயப்பூர்வமான துயரைப் பொறுத்துள்ளது. மனமாற்றம் ஒவ்வொரு மனிதனையும் உள்ளிருந்து பாதிக்க வேண்டும். மனத்துயருக்கு இன்றியமையாத தேவை பாவ உணர்வு. தான் பாவி என்பதை ஏற்றுக்கொள்ளும் மனநிலை, மனப்பக்குவம் ஆகும்.

இன்று பலர் சமூக அநீதிகளை அடையாளம் காட்டுகின்றனர். அவைகளைக் களைய முனைப்பாகச் செயல்படுகின்றனர். ஆனால் அவர்களில் பலர் தங்களின் அநீதிகளை கண்டுகொள்வதில்லை. இவர்கள் தாங்கள் யாரென்பதை இனங்காண இடமளிக்க விரும்பாதவர்கள். ஏந்நேரமும் அடுத்தவர் பற்றிய தீய எண்ணமும் தீச்செயலுமே இவர்கள் உள்ளத்தில் பற்றியெரியும். இத்தகைய எண்ணங்களும் செயல்களும் எம்மை விட்டு நீங்கவும் இறைவனுடன் நல்லுறவை ஏற்படுத்தவுமே இந்த தவக்காலம் தரப்பட்டிருக்கின்றது. எனவே நாம் மனம் மாறவும்இ இறையுதவியை நாடவும் இத்தவக்காலத்தை பயன்படுத்துவோம். நிச்சயம் இறைவன் எம்மை மீட்க இரு கரங்களை விரித்து காத்துக் கொண்ருக்கின்றார்.

**இறையாசீருடன் ஆசிரியர்**



# மனித உரிமைகளோடு கூடிய மக்களின் இயல்பு வாழ்வே உண்மையான சுதந்திரம்

**அருட்தந்தை . யா. றமேஸ் அ.ம.தி**

இருபத்தோராம் நூற்றாண்டில் வாழும் வாழ்ந்து கொண்டிருக்கும் எம் எல்லோருக்கும் “மனித உரிமைகள்” ஒரு பழக்கப்பட்ட சொல்லாக காட்சி தருகிறது. ஆட்சி புரிவோர், பெரும் செல்வந்தர், தொழிலாளர்கள், ஏழைகள், குழந்தைகள் எல்லோரும் மனித உரிமைகள் பற்றி தத்தம் தளங்களில் நின்று பேசுகிறார்கள். எனவே வளரும் நாடுகளை அடிமைப்படுத்த வளர்ச்சியடைந்த நாடுகள் மறைமுகமாக பிரயோ-கிக்கும் ஒரு அஸ்திரமாக இதனைப் பார்ப்பதா? அல்லது மக்கள் தமது அடிப்படை உரிமைகள் நிறைவு செய்யப்படுவதற்காக எழுப்பப்படும் கூக்குரலாக இதனைப் பார்ப்பதா? மேலாக மாறுபட்ட கருத்துக்கள் நிலவி வரும் சூழலில் உரிமைகள் பறிக்கப்பட்டு, ஓரங்கப்பட்ட மக்கள் குறிப்பாக தங்கள் குரலை இழந்து போன மக்கள் (Voiceless) தாங்கள் மாண்போடு வாழ எழுப்பும் உரிமைக் குரலே என்றால் அது மிகையாகாது.

மனிதன் அதிசயமானவன், அவனது தவறுகளும் தடுமாற்றங்களும் அதிக கவனம் பெறுவது உண்மையே. ஆனால் அக வாழ்விலும் சரி புற வாழ்விலும் சரி முழுமையும் நிறைவும் தேடுகிற உள்ளாந்த விருப்பமும் உந்துதலும் அடிப்படையான ஓர் இயங்கியல் விதியாகவே இருக்கிறது. தனி மனிதர்களைப் போலவே சமூகங்களுக்கும் குழுக்களுக்கும் ஆளுமையுண்டு. ஆனால் யதார்த்தத்தில் மனிதர்கள் சமமாக இல்லை, சமமாக நடத்தப்படவில்லை என்பது வரலாற்றில் கண்கூடு. மனிதனாகப் பிறந்திருக்கும் ஒவ்வொருவருக்கும் உரித்தானவை மனித உரிமைகள் என்பதனால் சாதி, மதம், மொழி, பாலினம் போன்ற வேறுபாடுகளால் எவர் ஒருவருக்கும் மனித உரிமைகள் மறுக்கப்படக் கூடாது. கொக்கின் நிறம் தனக்கில்லை என காகமும், சிறுத்தையின் வேகம் தனக்கில்லை என்று நத்தையும் கவலைப்படக் கூடாதுதான். ஆனால் வலுவாக இருப்பதால் மட்டும் தன் எண்ணப்படி காட்டை ஆளும் உரிமை சிங்கத்திற்கு உண்டா என்று புள்ளிமான் கேட்குமானால் அக்கேள்வியிலும் பொருளுண்டு.

மனித உரிமைகள் தொடர்ந்து பரிணா-மித்துக் கொண்டிருப்பவை, மனிதர்களோடு ஒன்றிணைந்தவை, பிரிக்க முடியாதவை. மனித உரிமைகள் இயற்கையிலேயே இருப்பவை இயற்கை அதற்கு தொடர் உத்தரவாதம் கொடுத்துக் கொண்டுதான் இருக்கும். ஆனால் தொடர்ச்சியாக மனித உரிமைகள் உலகின் பல்வேறு மூலைகளிலும், பல்வேறு வடிவங்களிலும் மீறப்பட்டு வருவது வெளிப்படையுண்மை. குறிப்பாக நாம் வாழும் எமது நாட்டில் நிலவி வரும் கொடிய யுத்தமும் அதனால் மீறப்பட்டுவரும் மனித உரிமைகளும் எம்மை மேலும் சிந்திக்க வைக்கும் என்பதில் ஐயமில்லை.


வரலாற்றில் நிலபிரபுத்துவம் அதாவது அடிமைகளை வேலைவாங்கி அவர்கள் உழைப்-பைச் சுரண்டிய பிரபுக்களின் ஆளுகையும், ஐரோப்பியர்கள் கீழைத்தேசங்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து நடத்திய காலணிய ஆட்சிமுறையும் மனித உரிமை மீறல்களைத் தோற்றுவித்தன. காலப்போக்கில் மக்களுடைய கலாச்சார சமூகப் பழக்க வழக்கங்கள், படிப்பறிவின்மை என்பவை இவற்றி-ற்கு வலுச்சேர்த்தன. மக்களுடைய வாழ்வை வாட்டி வதைக்கின்ற வறுமை மனித உரிமை மீறலுக்கான முக்கிய காரணியாக அமைந்தாலும் தற்போது இவற்றில் முக்கியமாகத் துணைபோவது அரசியல்வாதிகளின் நியாயமற்ற செயற்பாடுகள் என்றே கூற முடியும். அதாவது தமது தனிப்பட்ட சுகபோகங்களிற்காகவும், சுயலாபத்திற்காகவும், தற்புகழுக்காவும் குறுகிய மனப்பான்மையுடன் வாழும் நியாயமற்ற தலைவர்களின் அராஜகங்-களினாலே இன்று மனித உரிமைகள் மீறப்படு-கின்றன. கடவுளுக்கு மேலான மனிதனின் சிந்தனைகளும், நவீன கண்டுபிடிப்புக்களும், நவீன தொழிநுட்ப பயன்பாடுகளும், அணு உலகும் இதற்கு துணை போகின்றன எனலாம்.

இத்தகைய மனித உரிமை மீறல்களிலி-ருந்து மக்களைப் பாதுகாக்க, அவர்களது உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க, ஒடுக்கப்படு-பவர்களுக்காக குரல் கொடுக்கவென மனித உரிமை அமைப்புக்கள் தோற்றம் பெற்று “எல்லா மனிதர்களும் சுதந்திரமானவர்கள்....” எனும் சாசனத்தை உறுதிப்படுத்தியுள்ளது. ஆனால் இன்றைய உலகில், எமது சமூகங்களில் நடைபெறுவது எமக்கு தெரியாமல் இல்லை. குழந்தைகளுக்கு கல்வி கற்கும் உரிமையுண்டு என்ற சுவரொட்டி பள்ளிக் கூடச் சுவரில் மட்டும் தான். ஆனால் ஏராளமான சிறுவர்கள் வறுமையில் இருந்து தப்புவதற்காக சொற்ப கூலிக்காக வேலைத் தளங்களில் துன்பப்படுவது சாதாரணமாகிவிட்டது. “மானிடருக்கு உழைக்கும் உரிமையுண்டு”...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## உண்மை உறைக்கும்

கமிலஸ்






## 1) உவமையின் பின்னணி

ஆடு மேய்க்கும் தொழிலைச் செய்து வந்த இஸ்ரயேல் மக்கள் அத்தொழில் அடிப்படையிலான உருவகங்களைப் பயன்படுத்தி வந்தனர். கடவுளையும் (தொ.நூ 49:24, திபா. 23, 78:52) குறிப்பாகத் தம் அரசர்களையும் (1அர. 22:17, எரே. 10:21, 23:1-3) ஆயராகப் பார்த்தனர். ஓர் ஆயருக்கு இருக்க வேண்டிய பண்புகளைத் தம் அரசர்களில் தலைவர்களில் - எதிர்பார்த்தனர்.

தி.பா 23 மற்றும் 34 இவ்வுவமையின் பின்னணியாக அமைந்துள்ளன. திருப்பாடல் 23 நல்ல ஆயரைப்பற்றிப் பேசுகிறது. நல்ல ஆயர் ஆடுகளை மேய்க்கும் போது அங்கே குறையேதும் இராது. ஏனெனில் நல்ல ஆயர் பாதுகாப்புத்தருவார் (வச.2,4), உணவும் நீரும் மிகுதியாக உள்ள நல்ல மேய்ச்சல் நிலத்திற்குக் கூட்டிச் செல்வார் (வச.2), புத்துயிரும் புது ஆற்றலும் தருவார் (வச.3), அவர் நேரிய வழியில் நடத்திச் செல்வார். எனவே பாலை நிலத்தில் பாதை தவறிப் பாதிப்பு ஏற்படாது (வச.3). அவரது கோல் நெருங்கிய, நட்பு நிறைந்த, அன்பு தோய்ந்த உறவுக்கு அடையாளம். அவரது நெடுங்கழி ஆயரின் அதிகாரத்திற்கும் நோய்களைக் கண்டுபிடித்து, ஒழுங்குபடுத்தி, ஆபத்திலிருந்து பாதுகாக்குகிறது.

எசே. 34இல் ஆடுகள் மீது கவலையற்ற ஆயர்கள் காட்டமான தாக்குதலுக்கு உள்ளாகிறார்கள். இறைவன் ஆயர்களை - தலைவர்களை - பார்த்து, “நீங்கள் கொழுப்பானதை உண்டு, ஆட்டு மயிராடையை உடுத்தி, மந்தையில் சிறந்தவற்றை அடிக்கிறீர்கள், மந்தையையோ மேய்ப்பதில்லை. நீங்கள் நலிந்தவற்றைத் திடப்படுத்தவில்லை, பிணியுற்றவற்றிற்குக் குணமளிக்க-வில்லை, காயமுற்றவற்றிற்குக் கட்டுப்போடவில்லை, வழி தப்பியவற்றைத் திரும்பக் கூட்டி வரவில்லை, காணாமல் போனவற்றைத் தேடவில்லை” (எசே. 34:3-4). எனவே தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே: என்மேல் ஆணை. என் மந்தை கொள்ளையிடப்பட்டது, எல்லாக் காட்டு விலங்குகளுக்கும் இரையானது. என் ஆயர்கள் “என் மந்தையை மேய்க்காமல் தாங்களே மேய்ந்து கொள்கிறார்கள்” (எசே 34:6-8). எனவே “ஆயர்களுக்கு எதிராக இருக்கிறேன். என் மந்தையை அவர்களிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொள்வேன். மந்தை மேய்ப்பினின்று அவர்களை நீக்கிவிடுவேன்” (எசே. 34:10).

## 2) உவமையின் விளக்கம்

யூத மக்கள் செய்து வந்த முக்கியமான ஒரு தொழில் ஆடு மேய்த்தல். இந்த ஆடு மேய்த்தல் பின்னணியில் இவ்வுவமை அமைந்துள்ளது.

### 1. ஆட்டுக் கொட்டில்

ஆடுகளை யூதர்கள் வீட்டில் வளர்ப்பதில்லை. ஒவ்வோர் ஊரிலும் ஆடுகளுக்கென்று ஆட்டுக் கொட்டில்கள் அமைந்திருந்தன. ஓர் ஆட்டுக் கொட்டிலில் ஏறக்குறைய 30 குடும்பங்களின் ஆடுகள் பராமரிக்கப்-பட்டன. மக்கள் அதிகம் வாழும் ஊர்களில் மக்கள் தொகைக்கேற்ப அதிக ஆட்டுக்கொட்டில்கள் இருந்தன.

### 2. வேறுவழியாக ஏறிக் குதிப்போர்

வாயில் வழியாக வராமல் சுவர் ஏறிக் குதிப்போர் போன்றே அன்றைய தலைவர்கள் இருந்தனர். அவர்கள் “முறையாகத்” தம் பதவிக்கு வராமல் “குறுக்கு வழிகளில்” வந்தவர்கள். பெரும்பாலும் அவர்கள் பெருந்தொகை கையூட்டுக் கொடுத்துத் தம் பதவிக்கு வாயில் வழியாக வராமல் சுவரேறிக் குதித்து வந்தவர்கள் என இயேசு கூறுகிறார்.

### 3. சொந்த ஆடுகளைப் பெயர் சொல்லிக் கூப்பிடுதல்

ஆயனுக்கும் ஆடுகளுக்குமிடையே நெருங்கிய உறவும் அன்பும் இருந்தன. ஆயன் தம் ஆடுகள் ஒவ்வொன்றையும் நன்கு அறிந்திருந்தான். அவற்றின் தனிப் பண்புகளுக்கேற்ப அவன் ஒவ்வோர் ஆட்டையும் பெயர் சொல்லி அழைத்தான். கருப்பன், வெள்ளையன், குள்ளையன், துடுக்கானவன், சோம்பேறி என்று பல பெயர்களால் அவற்றை அழைத்தான். ஆடுகளும் அடிக்கடி தம் பெயர் சொல்லி அழைக்கப்படுவதைக் கேட்டுக் கேட்டு அதனைப் புரிந்து கொண்டு அவன் சொல்லுக்குச் செவிசாய்த்தன.

### 4. ஆடுகளுக்கு வாயில் நானே

ஊர்களிலுள்ள ஆட்டுக் கொட்டில்களில் பராமரிக்கப்படும் ஆடுகள் வேனிற்காலத்தில் உணவுக்காக மலைப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்படும். ஆடுகள் இரவில் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்படத் தற்காலிகத் தங்குமிடம் அமைக்கப்பட்டது. மூன்று பக்கமும் கற்களை அடுக்கி வைத்துவிட்டு நுழைவாயிலில் ஆயனே படுத்துக்கொள்வான். அவனைக் கடந்தே ஆடுகள் உள்ளே செல்லவும் வெளியே வரவும் முடியும். இவ்வாறு அவனே ஆடுகளுக்கு வாயில் ஆகிறான். அதுபோன்றே இயேசு தாமே ஆடுகளுக்கு - இறையாட்சியின் மக்களுக்கு - வாயிலாக இருப்பதாகக் கூறுகிறார்.

### 5. எனக்கு முன்வந்தோர் திருடர், கொள்ளையர்

அக்காலச் சமயத் தலைவர்கள் பணம் குவிப்பதில் குறியாய் இருந்தனர். கி.மு 170ஆம் ஆண்டிலிருந்து பெரிய குருக்கள் ஆட்சியாளருக்குப் பெரும் தொகை கொடுத்துதான் தம் பெரிய குருத்துவப் பதவியைப் பெற்றுக்கொண்டனர். இயேசு காலம் வரை இது நடைமுறையில் இருந்தது. அது மட்டுமல்ல, தம் பதவியைத் தக்க வைப்பதற்காகப் பெரிய குரு ஒருவர் - யாசோன் - கையூட்டுக் கொடுத்துத் தலைமைக் குரு பீடத்தைக் கைப்பற்றினார் (2மக்.4:7-9). மெனலாவு “யாயிசோன் கொடுத்ததைவிட பன்னிரண்டு டன் வெள்ளி மிகுதியாகக் கொடுத்துத் தலைமைக் குரு பீடத்தைத் தனக்கென்று கைப்பற்றிக் கொண்டார்” (2மக். 4:24). இதனால்தான் இயேசு “எனக்கு முன் வந்தவர் அனைவரும் திருடரும் கொள்ளையருமே” என்றார்.

### 6. திருடிக் கொன்று அழிக்கும் தலைவர்கள்

பணம் கொடுத்துப் பதவியைப் பெற்றுக்கொண்ட தலைமைக் குருக்கள் பல வேளைகளில் தம் போட்டியாளர்-களையும் எதிரிகளையும் மக்களையும் அழித்துக் கொன்றனர். முன்பு குறிப்பிடப்பட்ட எசே 34ஆம் அதிகாரப் பின்னணியில் இயேசு இவ்வாறு பேசுகிறார்.

## 3) இயேசுவின் பார்வையில்

தலைமைக் குருக்கள் போன்ற மக்களின் தலைவர்கள் நெறிகெட்ட அரசியல்வாதிகளாகச் செயல்பட்டனர். அரசர்களுக்குப் பணம் கொடுத்தே அவர்கள் தம் பதவியையும் பெற்றிருந்தனர். திருடிப் பணத்தைப் பெருக்குவதிலும் அழிப்பதிலுமே பெரும்பாலும் அவர்கள் குறியாய் இருந்தனர். எசே. 34இல் குறிப்பிடப்பட்டது போல் அவர்கள் மந்தையை மேய்ப்பதில்லை, நலிந்த-வற்றைத் திடப்படுத்துவதில்லை, பிணியுற்றவற்றிற்குக் குணமளிப்பதில்லை, காயமுற்றவற்றிற்குக் கட்டுப்போடுவ-தில்லை, வழிதவறியவற்றைத் திரும்பிக் கூட்டி வரவில்லை, காணாமல் போனவற்றைத் தேடவில்லை” (எசே. 34:3-4). எனவே அவர்கள் ஆடுகளை - மக்களை - வழிநடத்தத் தகுதி இழந்துவிட்டார்கள். அவர்கள் இனியும் தலைமைப் பணியாற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

எனவே அவர்களை நீக்கிவிட்டு இறைவன் தாமே தம் மந்தையை மேய்க்கப் போவதாக எசாயா கூறிய (எசே. 34:11-31) உறுதிமொழியை இயேசு நினைவு கூர்கிறார். தம் சார்பில் மக்களை வழிநடத்தத் தாவீதின் மரபிலிருந்தே நல்ல ஆயன் தோன்றப் போவதாக இறைவன் அளித்த உறுதிமொழியையும் தெளிவாக உணர்கிறார் (எசே. 34:23-24). அந்த ஆயனே மெசியா (எசா. 40:11). அவரே ஆயனில்லா மக்களைப் போலிருந்த (மாற். 6:34) மக்கள் மீது இரக்கம் கொள்வார், காணாமல் போன ஆட்டைத் தேடிக் கண்டுபிடிப்பரும் அவரே. இறைவனே அனுப்புவதாக வாக்களித்த “புதிய ஆயன்” தாமே எனத் தெளிவாக உணர்கிறார் இயேசு. இறைவன் விரும்பும் வகையில் அப்பணியைச் செய்யப் போகிறவரும் தாமே என்னும் தெளிவும் அவருக்குக் கிடைக்கிறது. ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டுத் தாம் வந்துள்ளதாகவும் பணியாற்றப் போவதாகவும் உறுதிபடக் கூறுகிறார். தாம் நிறுவிய இறையாட்சிச் சமூகத்தில் இப்படிப்பட்ட, தம்மைப் போன்ற தலைவர்களே பணியாற்ற வேண்டும் எனப் பணிக்கிறார்.

## 4) நற்செய்தியாளர் யோவானின் பார்வை

இறையாட்சிச் சமூகத்தை ஒரு புதுமைச் சமூகமாகப் பார்க்கும் யோவான் இச்சமூகத்தின் புதுமைத் தன்மைகளைப் பட்டியலிடுகிறார். அவரது பார்வையில் இறந்து உயிர்தெழுந்து வாழும் இயேசுவே புதிய ஆலயம் (அதி. 2). இன அடிப்படையில் அன்று, மாறாக நீரினாலும் தூய ஆவியினாலும் புதுப்பிறப்பு அடைந்தவர்களே இறையாட்சியின் மக்கள் (அதி.3). இறைவனை வழிபட குறிப்பிட்ட இடங்களை மையப்படுத்தாது, உண்மையிலும் ஆவியினாலும் (இறைவனை அவர் இருப்பதுபோலக் கண்டு உள்ளத்தில்) வழிபடுவோரே இறையாட்சியின் உறுப்பினர்கள் (அதி.4). அவர்கள் வாழ்வை மேம்படுத்தும் சட்டங்களையே இறைவனின் சட்டங்களாக ஏற்றுக்கொண்டு (அதி.5), இயேசுவின் உடலையும் இரத்தத்தையும் உணவாக அருந்துபவர்கள் (அதி.6). உலகின் ஒளியாம் இயேசுவின் ஒளியைப் பிரிதிபலிக்கும் அவர்கள் (அதி.7-8) இறையாட்சியின் புதிய பார்வையைக் கொண்டு வாழ்பவர்கள். அவர்களின் தலைமையும் புதியது. அது வாழ்வில் சுமைகளைத் திணிக்கும் தலைமை. அது தம்மையே மக்களுக்காகப் பலியாக்கும் தலைமை. இயேசுவைப் போன்ற அப்படிப்பட்ட தலைவர்களே இறையாட்சிச் சமூகத்திற்கு தேவை என்கிறார் யோவான்.

## 5) இன்றைய பார்வை

இறையாட்சி தலைவர்கள் கொண்டிருக்க வேண்டிய மூன்று பண்புகளை இவ்வுவமை அழுத்தமாகக் கூறுகிறது.

### 1. மக்களை நன்கு அறிதல்

தலைவர் மக்களை நன்கு அறிந்தவராய் இருக்க வேண்டும். பெயர் சொல்லி அழைத்தல் (10:3) என்பது மக்களை முழுமையாக அறிந்திருப்பதைக் குறிக்கிறது. இங்கு மக்களின் பெயர்களைத் தெரிந்து வைத்திருப்பது முக்கியமல்ல, மக்களின் அனைத்துப் பின்னணிகளையும் பிரச்சனைகளையும் சூழ்நிலைகளையும் தலைவர் தெரிந்து வைத்திருக்க வேண்டும். மக்களைப் பாதிக்கின்ற சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு, சமயப் பிரச்சனைகள் அனைத்தையும் பற்றி அவர் தெளிவும் நிலைப்பாடும் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் தலைவர் மக்களை அறிந்துள்ளார் என்று கூறமுடியும்.


### 2. பாதை தெளிவாய்த் தெரிதல்

மக்கள் வழிநடக்க வேண்டிய பாதை தலைவருக்குத் தெளிவாய்த் தெரிந்திருக்க வேண்டும். பாலை நிலத்திலே பாதை தெளிவில்லாது ஆடுகளை நடத்திச் சென்றாலும், அவைகள் பெரும் பாதிப்புக்கு-ள்ளாகும். தண்ணீரும் பசும்புல்லும் இன்றி அவை சாக நேரிடலாம். அதுபோல பார்வையும் பாதையும் தெளிவில்லாத தலைமை ஆபத்தானது எல்லாவற்றையுமே பரிசோதித்துப் பார்த்து செய்தால் தலைமையில் நம்பிக்கை வராது. தெளிவான, தீர்க்கமான, திட்டவட்டமான செயல்முறைகளே தேவை.

### 3. பாதுகாக்க முன்வரல்

மக்கள் பாதிக்கப்படும்போது தலைவர் மக்களைப் பாதுகாக்க வல்லவராக இருக்க வேண்டும். ஆடுகளுக்கு ஓநாயும் வேறு பல்வகையான ஆபத்துக்களும் (1சாமு 17:34-36, எசா. 31:4) பாதிப்பு ஏற்படுத்துவது போல மக்கள் வாழ்வைப் பல்வேறு புதிய புதிய தீய சக்திகள் பாதித்துக்கொண்டே இருக்கின்றன. அவற்றை இனம் கண்டு, அவற்றால் ஏற்படும் பாதிப்பை உணர்ந்து, அவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டியது தலைவரின் தலையாய பொறுப்பு. இப்பணி ஆபத்தான ஒன்று. ஆடுகளைப் பாதுகாக்கும் ஆயரை ஓநாய்களும் கொடிய விலங்குகளும் தாக்குவது போல, தீய சக்திகளும் தலைவரைத் தாக்கலாம், அவருக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம், அவர் உயிரையே பறிக்கலாம். ஆடுகளுக்காக எந்தத் தியாகத்திற்கும் தலைவர் தயாராய் இருக்க வேண்டும். இயேசுவைப் போல நல்ல ஆயர் - நல்ல தலைவர் - தம் ஆடுகளுக்காக - தம் மக்களுக்காக - தம் உயிரையே கொடுப்பார் (10:11, 15).

# அமைதிக்கு ஓர் அன்னை
# புனித அன்னை திரேசா




## அன்னைக்கு கிடைத்த பரிசுகளும் விருதுகளும்

1964ஆம் ஆண்டு மார்கழி திங்களில் திருத்தந்தை ஆறாம் பவுல் நம் நாட்டுக்கு விஜயம் செய்தார். பம்பாயில் நடந்த அனைத்துலக நற்கருணை மாநாட்டில் கலந்து கொண்டார். அவருக்குப் பயணம் செய்ய அளிக்கப்பட்ட வெண்ணிற லிங்கன் காரை அவர் அன்னைக்கு அன்பளிப்பாக அளித்துச் சென்றார். அந்தக் காரை ஒரு தடவை கூட அவர் பயன்படுத்தியவரல்லர். அதை லாட்டரிச் சீட்டு மூலம் விற்றதில் கிடைத்த ரூ 4,60,000யும் தொழுநோயாளர் குடியிருப்பு ஒன்று கட்ட பயன்படுத்தியுள்ளார்.

1971ஆம் ஆண்டு தை 6ம் திகதி, திருத்தந்தை ஆறாம் பவுலிடமிருந்து அன்னை மற்றோர் பரிசைப் பெற்றுக்கொண்டார். ஆறாம் பவுலுக்கு முன்பு திருத்தந்தையாக இருந்தவர் இருபத்துமூன்றாம் ஜோன். அவரது பெயரால் ஆண்டுதோறும் ஒரு பரிசு உலக அமைதிக்காக உழைத்த உத்தமர் ஒருவருக்கு வழங்கப்படுகிறது. அன்னைக்குக் கிடைத்த 25,000 டாலர்களையும் தமது பணிகளுக்காகப் பயன்படுத்தினார்.

அதே ஆண்டு ஐப்பசி திங்களில் ஜோசப் பி. கென்னடி அறக்கட்டளையின் சார்பாக மற்றொரு பரிசும் அன்னைக்கு வழங்கப்பட்டது. இதை வழங்கியவர் செனட்டர் எட்வார்டு எம்.கென்னடி. கென்னடி குடும்பத்தில் ஊனமுற்று பிறந்த ரோஸ்மேரி என்னும் சிறுமியைப் போல எத்தனையோ குழந்தைகள் ஊனமுற்று பிறக்கின்றனர். அவர்களது நலனுக்காக ஏற்படுத்தப்பட்டதே இப் பரிசு. அன்னைக்கு வழங்கப்பட்ட பரிசுத்தொகை 50,000 டாலர்களையும் கல்கத்தாவின் டம்டம் விமான நிலையத்துக்குப் பக்கமாக அமைந்திருக்கும் "நிர்மல் கென்னடி" விடுதிக்காக அன்னை பயன்படுத்தினார்.

1973ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்ற "டெம்பிள்டன்" அறக் கட்டளைப் பரிசை முதல் முதலாகப் பெற்றவர் அன்னை தெரசா. இங்கிலாந்தில் ஜான் டெம்பிள்டன் தம்பதியினர் தங்களது செல்வத்தின் ஒரு பகுதியை இறை உணர்வைப் பரப்புவதற்கென ஒதுக்கிவைத்தனர். அதிலிருந்து இறை உணர்வைப் பரப்ப உதவிய சான்றோர் ஒருவருக்கு ஆண்டுதோறும் பரிசுத்தொகை ஒன்றைக் கொடுக்கத் தீர்மானித்தனர். பல்வேறு சமயங்களிலிருந்து 9 நடுவர்களை வைத்து அப்பரிசைப் பெறத் தகுதியுடையவரைத் தேர்ந்தெடுத்தனர். இவ்வாறு 1973ல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் அன்னை தெரசா.

1975ஆம் ஆண்டு ஐப்பசி 24ம் நாள் அன்னைக்கு ஆல்பர்ட் சுவைட்சர் நினைவுப் பரிசு அளிக்கப்பட்டது. ஆர்பர்ட் சுவைட்சர் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்தவர். ஆப்பிரிக்காவின் காடுகளில் வாழும் நீக்ரோ மக்களுக்காகப் போராடி அதற்கென்று 1952இல் நோபல் அமைதிப் பரிசைத் தட்டிச் சென்றவர்.

1976ஆம் ஆண்டில் அன்னை சாந்திநிகேதனுக்கு அழைக்கப்பெற்றார். விசுவபாரதி பல்கலை கழகத்தினர் அன்னைக்கு "தேசி கோத்தமா" என்னும் விருதை வழங்கினார். 1979ஆம் ஆண்டு மார்கழி 10ஆம் நாள் உலகப்புகழ் வாய்ந்த நோபல் அமைதிப் பரிசு அன்னைக்கு அளிக்கப்பட்டது.

1980ஆம் ஆண்டு தை 30ஆம் நாள் பாரதத்தின் மிகப்பெரிய விருதாகிய "பாரத் ரத்னா" பட்டம் அன்னைக்கு வழங்கப்பட்டது. அன்று ராஷ்டிரபதி பவனில் இந்திய தேசிய கீதம்முழங்க குடியரசுத் தலைவர் சஞ்சீவ ரெட்டியின் கரங்களினின்று அன்னை அவ்விருதினைப் பெற்றார்.

1980ஆம் ஆண்டு அன்னையின் 70ஆவது பிறந்த நாளையொட்டி அன்னையின் உருவம் தாங்கிய தபால்தலைகளை வெளியிட்டு இந்திய அரசு அன்னையைக் கௌரவித்தது.

1983ஆம் ஆண்டில் இங்கிலாந்து அரசி இரண்டாம் எலிசபெத்திடமிருந்து பிரிட்டனின் மிக உயர்ந்த "ஆர்டர் ஆப் மெரிட்" என்னும் விருதினை அன்னை பெற்றார்.

1991 ஆம் ஆண்டு ஐப்பசி 4ஆம் நாள் இந்தியக் குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் அன்னைக்குப் பாரதீய வித்யா பவான் உறுப்பினர் என்னும் பதவி வழங்கி கௌரவித்தார்கள்.

1992 பங்குனி 24ஆம் நாள் கல்கத்தாவில் நடந்த அனைத்திந்திய தேசிய ஒருமைப்பாடு மாநாட்டின் போது இரண்டு பேருக்கு தேசிய ஒருமைப்பாட்டுப் பரிசு வழங்கப்பட்டது. ஒருவர் திரைப்பட உலகில் ஆஸ்கர் விருதையும் நம்நாட்டின் மிகப்பெரிய விருதாகிய பாரத ரத்னா விருதையும் பெற்ற சத்தியஜித்ரே. மற்றவர் அன்னை தெரசா.

1992 கார்த்திகை 8ஆம் நாள் அன்னைக்குப் பாரதப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் "பாரதத்தின் தவப் புதல்வி" என்னும் சிறப்பு விருதை வழங்கி கௌரவித்திருக்கிறார். அன்று மாலை இராஷ்டிரபதி பவனில் நடந்த நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவின் கரங்களினின்று







அன்னை "பாரத சிரோமணி" என்னும் விருதையும் பெற்றிருக்கிறார்.

1993ஆம் ஆண்டு ரஷ்ய அரசினால் ஏற்படுத்தப்பெற்ற உலகப் புகழ்வாய்ந்த லியோ டால்ஸ்டாய் விருது அன்னைக்கு வழங்கப்பட்டது.

1993 ஆவணி 20ஆம் நாளில் ராஜீவ் காந்தியின் பெயரால் நிறுவப்பெற்றுள்ள சத்பாவனா விருதினை முதன் முதலில் பெற்றவர் அன்னை தெரசா. சமாதானம், சமய நல்லிணக்கம், நாட்டின் ஒருமைப்பாடு இவற்றை மேம்படுத்துவோர்க்கென அமைக்கப்பட்டதே இப்பரிசு.

1993 மார்கழி 18ஆம் நாள் ஐ.நாவின் யுனெஸ்கோ நிறுவனத்தின் அமைதிப்பரிசான 50,000 டாலர்களையும் அதன் இயக்குநர் டாக்டர் எஃ.ப்.எம். சரகோயா (Dr.F.M. Zaragoya) அவர்கள் அன்னைக்கு வழங்கி கௌரவித்தார்கள்.

1995 பங்குனி 4ஆம் நாள் கல்கத்தாவில் நடைபெற்ற நேதாஜி பிறந்தநாள் விழாவின் போது அன்னைக்குச் சமூகச் சேவைக்கான நேதாஜி விருது வழங்கப்பட்டது. 1995 கார்த்திகை 17ஆம் நாள் தயாவதி மோடி அறக்கட்டளையின் சார்பில் அன்னைக்கு ஒரு விருது வழங்கப்பட்டது. கலை, கலாச்சாரம், கல்வி, சமூகச் சேவை ஆகிய துறைகளில் ஆர்வம் காட்டுவோரை ஊக்குவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளதுதான் இந்த அறக்கட்டளை.

1996 இல் அனைத்துலக நம்பிக்கை இயக்கத்தினரால் நம்பிக்கை ஒற்றுமை விருது ஒடுக்கப்பட்டோருக்கு அன்னை செய்துவரும் சேவைகளுக்காக அளிக்கப்பட்டது. இவ்விருதுகள் யாவற்றையும் விட அன்னையின் உள்ளத்தை நெகிழச் செய்த விருது ஒன்று உண்டு. அதை ஆசிரியர் நவின் சௌலா, "அன்னை தெரசா" என்னும் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். பொழுது சாயும் நேரம், "மா, மா" - யாரோ ஒருவன் கல்கத்தாவின் தாய் மடத்தின் வாசலருகில் நின்று கூவிக்கொண்டிருந்தான். ஒரு சகோதரி அன்னையிடம் வந்து, "அது ஒரு பிச்சைக்காரன். உங்களைத்தான் அவனுக்குப் பார்க்க வேண்டுமாம்" என்றார்.

அன்னை தமது அறையை விட்டுக் கீழ் மாடிக்கு இறங்கிச் செல்கிறார். அந்தப் பிச்சைக்காரன் உணவுக்காகவோ வேறு எந்த உதவிக்காகவோ அங்கே வரவில்லை. மாறாக அன்று அவன் சம்பாதித்ததை அன்னைக்குக் கொடுத்துவிட்டுப் போகத்தான் வந்திருக்கிறான். அவன் கையில் பிடித்திருக்கும் ஈயத்தட்டை அன்னையிடம் நீட்டுகிறான். அதில் இரண்டு அல்லது மூன்று ரூபாய்க்கான சில்லறைக் காசுகள் கிடந்தன.

செய்வதறியாது ஒரு கணம் அன்னை திகைக்கிறார். அதை அவர் பெற்றுக் கொண்டார் என்றால் அன்றிரவு அவனுக்கு உணவு இராது. அதைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் அவன் வருத்தமடைவான். அன்னை கையை நீட்டி அதைப் பெற்றுக்கொள்கிறார். அவன் முகமலர்ந்து அன்னையின் கையைப் பிடித்து முத்தி செய்கிறான்.

அன்னை அறைக்குத் திரும்புகையில் கூறுகிறார்: "அவன் தனக்கென வைத்திருந்த யாவற்றையும் கொடுத்துவிட்டான். ஒருவேளை இன்றிரவு அவன் சாப்பிட மாட்டான். இந்த அன்பளிப்பை நோபல் பரிசை விட, மற்றெல்லா விருதுகளைவிட மேலானதாக நான் கருதுகிறேன்". தியாகத்தோடு கூடிய அன்புதான் மெய்யான அன்பு என அந்தப் பிச்சைக்காரன் எண்பித்து விட்டான். பிறருக்குப் பகிர்ந்தளிப்பதில் தனிதோர் இன்பத்தை நாம் காணமுடிகிறது. ஒருநாள் ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த ஒருவர் கொல்கொத்தாவின் இறக்கும் தறுவாயில் உள்ளோர் விடுதிக்கு வந்து அன்னையிடம் "நான் நன்கொடையொன்றை அளிக்க விரும்புகிறேன்" என்றார். பெரியதொரு தொகையை அன்னையிடம் கொடுத்துவிட்டு, இது எனக்குப் புறம்பே உள்ளது, இனி நான் என்னையே சிறிது கொடுக்க விரும்புகிறேன் என்றார். அவர் சொன்னபடி ஒவ்வொரு நாளும் இறக்கும் தருவாயில் கிடக்கும் ஆண்களுக்குச் சவரம் செய்து விட்டு அவர்களோடு அளவளாவிச் செல்கிறார். பகிர்வதில் தனிதோர் இன்பமுண்டு என்று அன்னை அடிக்கடி சொல்லி வந்ததை அன்று அவர் நிருபித்துக் காட்டினார்.

இத்தனை விருதுகளையும் பரிசுகளையும் பெற்ற வேறோருவர் உலகில் இருப்பாரா என்பது ஐயத்துக்குரியது. இந்திய அரசு அன்னைக்கு இந்தியாவில் எங்கும் இலவச ரயில் பயணம் செய்யும் சலுகை அளித்திருந்தது. இந்தியன் ஏர்லைன்ஸ் விமானங்களில் இந்தியாவின் எப்பகுதிக்கும் இலவசமாகப் பயணம் செய்வதற்கும் சலுகை அளித்திருந்தது.

**தொடரும்**

தொகுப்பு
**அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்**

# அன்பை அறிந்து தெளிக!

மாசி 14

## ♥ வெலன்டைன்ஸ் டே ♥

* ஒருதலைக்காதல் : காதலித்த பெண்ணுக்குத் தீ வைத்துக் காதலன் தற்கொலை.
* காதலின் தோல்வியால் வருடத்துக் வருடம் தற்கொலை அதிகரிப்பு
* 21வயது பெண் மீது ஆசிட் வீச்சு : காதலன் வெறிச்செயல்.

இத்தகைய செய்திகள் இப்பொழுது வாடிக்கையாகிவிட்டன. காதலாகக் கனிந்த அன்பு கசந்தது ஏன்? காதலிப்பது தவறா, சரியா? பள்ளிப் பருவத்திலேயே காதல் சிந்தனைகள் வருகிறதே... கல்லூரி காலம் என்றாலே காதல் காலம் என்று பொருளா? இளையோரின் உள்ளத்தில் எழும் இவை போன்ற உறவு சார்ந்த பல கேள்விகளுக்கு விடைதேடும் பயணமே ‘ஐ லவ் யூ’

இ.்.து இளையோரின் உறவு சார்ந்த தேடல்களுக்குத் திசை காட்டும் கருவி. ‘லவ்’ என்றாலே காதலை மட்டுமே முதன்மைப்படுத்தும் நாகரீகக் கலாச்சாரத்தில், ‘ஐ லவ் யூ’ என்பதன் உண்மைப் பொருளை விளக்கி, காதலுக்கு அடிப்படையாக அமையும் அன்பைப் பற்றிய புரிதல் தான் ‘ஐ லவ் யூ’ பயணம். ஒரு அழகான சென் கதை உண்டு. குதிரை மீது அமர்ந்து ஒருவன் வேகமாகச் சென்று கொண்டிருந்தான். அதைப் பார்த்து வழியிலே நின்று கொண்டிருந்த மற்றொருவர் கேட்டார். “எங்கே இவ்வளவு வேகமாகப் போகிறாய்?” என்று. அதற்குக் குதிரை மீது இருந்தவன் சொன்ன பதில். “எனக்குத் தெரியாது நீங்கள் குதிரையைத் தான் கேட்க வேண்டும்” என்று

இந்தக் காலத்தில் காதலிப்பது என்பது கடிவாளம் இல்லாத குதிரை மீது அமர்ந்து பயணிப்பது போலாகி விட்டது. இதைத்தான் இடைக்காட்டுச் சித்தர்



**“மனம் என்னும் மாடு அடங்கின்**
**தாண்டவக்கோனே! முக்தி**
**வாய்ந்த தென்று எண்ணேடா**
**தாண்டவக்கோனே”**

என்ற பாடலில், அடங்காத மாடு போல மனம் திமிருகிறதா? கடிவாளம் இல்லாத குதிரைப் போல, எதை நோக்கிப் போகின்றோம் எனத் தெரியாமல் உறவிலே குழம்பிப் போகிறோமா? மனதை அடக்கி நெறிப்படுத்த வேண்டுமென்கிறார்.

‘லவ்’ என்ற வானவில்லின் ஒரு நிறம்தான் காதல். வானவில்லின் அழகைச் சுவைக்காமல் அதன் ஒரு நிறத்தை மட்டுமே ரசிக்கக் கற்றுக்கொடுக்கின்றன. திரைப்படங்களும், தொலைக்காட்சியும், இதழ்களும் பசுமரத்தாணிபோலப் பதிய வைக்கப்பட்ட தவறான கருத்துக்களால் ஏமாந்து போகின்ற உள்ளங்கள் ஏராளம்.

‘ஐ லவ் யூ’ என்றாலே அது காதலை மட்டுமே குறிப்பிடுகின்றது என்று தப்புக் கணக்குப் போடுபவர்கள் பலர். ‘ஐ லவ் யூ’ என்ற சொற்றொடரில் தான் எத்தனை எத்தனை புரிதல்கள் உள்ளன எனப் புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

அம்மா சொல்லும் ‘ஐ லவ் யூ’க்கும், நண்பன் சொல்லும் ‘ஐ லவ் யூ’க்கும் வேறுபாடு உண்டல்லவா? காதலி சொல்லும் ‘ஐ லவ் யூ’ மனைவி சொல்லும் ‘ஐ லவ் யூ’வில் இருந்து வேறுபடுகிறது. ஆணின் ‘ஐ லவ் யூ’ பெண்ணின் ‘ஐ லவ் யூ’வில் பொதிந்திருக்கும் பொருள்களும், ஆழங்களும், புரிதலும் வேறுபடுகின்றன என உளவியல் கூறுகிறது. அழுகையிலும், மகிழ்ச்சியிலும், பிரிவிலும் சொல்லும் ‘ஐ லவ் யூ’வில் பற்பல உண்மைகள் வெறும் சொல்லில் மட்டும் நிறுத்திவிடாமல், பெயர் சொல்லி அழைத்து, கண்களைப் பார்த்துச் சொல்லும் ‘ஐ லவ் யூ’க்கு ஆழம் மிகுதி.

ஆனால் ஒன்று மட்டும் உண்மை. ‘ஐ லவ் யூ’ என்ற சொல்லாடலில் எல்லா நிலைகளிலும் ஏதோ ஓர் அன்பு எட்டிப் பார்க்கிறது. ஒரு சில அன்பில் ‘ஐ லவ் யூ’ என்பது சொல்லால் அன்று செயலால் வெளிப்படுகின்றது.

உறவுச் சிக்கல்களால் மனம் நொந்துபோன ஒருவன் குருவைப் பார்த்துச் சொன்னான், “என்னை யாரும் அன்பு செய்யவில்லை. இந்த உலகில் அன்பு என்பதே இல்லை” என்று. கனிந்த பார்வையோடு குரு “இந்த உலகில் அன்பு இல்லாத இடமே இல்லை. அன்பு இல்லாமல் இந்த உலகமே இல்லை” என்று கூறினார்.

தனக்கு இல்லை என்றாலும் தன் பிள்ளைக்கு என்று சமைத்ததில் சிறந்ததைப் படைக்கும் செயல்தான் சொல்லுக்குள்ளடங்காத தாயன்பு. குழந்தையாய் இருந்தபோது தோளில் சுமந்து, தன் மகன் தோளுக்கு மேல் வளர்ந்ததும் அவனது தேவைகளை அமைதியுடன் சுமக்கும் செயல்தான் தன்னிகரற்ற தந்தையன்பு. நிலவைக் காட்டி உணவு ஊட்டிய தாயன்பும், நிலவையே எட்டிப் பிடிக்க உரமூட்டிய தந்தையின் அன்பும் எப்போதும் உடனிருப்பவை. காதலில் கைவிடப்பட்டுக் கண்ணீரோடு வீடுவரும் இளைஞனுக்காகக் காத்திருந்து அம்மா உணவு தரும்போது... அங்கே ‘அன்பு’ இறந்துவிடவில்லை. இது பெற்றோர் நாள்தோறும் தம் செயலால் நமக்கு வெளிப்படுத்தும் ‘ஐ லவ் யூ’

“ஒருவர் மற்றவர் மேல் நல்லெண்ணமும், நல்லதே நடக்க விரும்பும் மனமும் கொண்டிருத்தல் நட்புக்கு அடிப்படை” என்று ஆராய்ந்து சொல்லி வைத்தவர் தத்துவ ஞானி அரிஸ்டாடில் “நட்புக்கு அடிப்படை அன்பு” என்பதும் அவர் கூற்று...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# அன்பு மன்னிக்கும்



நாம் ஒவ்வொருவரும் எமது மனதில் வெறுப்புணர்வு வேர்விட அனுமதித்து விட்டோம் என்றால் அது ஆழமான ஆத்திர உணர்வுக்கு எம்மை இட்டுச் சென்றுவிடும். ஆத்திரம் என்ற அனுபவத்துக்கு எதிர்மறையான அனுபவம் மன்னிப்பாகும். மன்னிப்பு என்பது மற்றவர்களுடைய வலுவின்மைகளைப் புரிந்து கொள்ளவும் அவற்றைப் பொறுத்துக் கொள்ளவும் முயற்சி செய்கின்ற நேர்மறையான மனநிலையில் வேரூன்றியுள்ளது.

“தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை”. (லூாக் 23:34)

மற்றவர்களுடைய தவறுகளைத் தேடிக்கண்டு-பிடிப்பதிலும் எமது மனதில் ஒரே தீமைகளைக் கற்பனை செய்வதிலும் எல்லாவகையான தவறான நோக்க-ங்களையும் ஊகித்துக் கற்பனை செய்து கொண்டும் இருந்தால் எமது மனதில் ஆத்திர உணர்வு கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து கொண்டே இருக்கும். இது கணவன் மனைவிக்கிடையில் ஏற்படும் அன்பின் பிணைப்புக்கும் குடும்பத்தின் ஒற்றுமைக்கும் இடையூறாக இருக்கும். ஒவ்வொருவருக்குள்ளும் தத்தமது உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்ற ஆவல் உண்டு. இது எமது கண்ணியத்தைப் பாதுகாத்துக் கொள்வதைவிட பழிவாங்குவதற்கான துடிப்பாக மாறிவிடும்.

மன்னிப்பு என்பது இலகுவான ஒன்றல்ல. குடும்ப உறவைக் கட்டியெழுப்ப தியாக உணர்வு தேவையாக உள்ளது. ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்ள, பொறுத்துக் கொள்ள மன்னித்து ஒப்புரவாக முயலவில்லையேல் குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படுவது எப்படி? சுய நலமும் முரண்பாடுகளும் சண்டை சச்சரவுகளும் குடும்ப ஒற்றுமையைக் குலைக்கின்றன. பிரிந்து வாழ எம்மைத் தூண்டுகின்றன. மன்னிக்க ஆயத்தமில்லாமல் இருந்தால் அன்புகூர மனம்வராது. அச்ச உணர்வு வளர்ந்து பிறரிடமிருந்து விலகி வாழ எம்மைத் தூண்டும். மற்றவர்களைக் குறை கூற எம்மைத் தூண்டுகின்றது.

முதலில் எம்மை நாம் இருக்கும் நிலையில் ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது குறைபாடுகளோடு வாழவும் எம்மையே நாம் மன்னிக்கவும் பழகினால்தான் மற்றவர்களை மன்னிக்க எம்மால் முடிகிறது. இறைவனால் மன்னிக்கப்பட்ட அனுபவத்தை எமக்குள் வளர்க்கவில்லை-யென்றால் இதைச் செய்ய முடியாது. இறைவன் எமது தகுதியினடிப்படையில் எம்மை மன்னிப்பதில்லை. அவரது அருளால் அவருக்கு ஏற்புடையவர்களாக இருக்கிறோம் என்பதை உணரவேண்டும். இந்த அனுபவம் இல்லாமல் மற்றவர்களை மன்னிப்பது கடினம்.

இறைவனுடைய அன்பு நிபந்தனையில்லாதது. இறைவனது அன்பு வாங்கவோ விற்கவோ முடியாதது. இதை நாம் அனுபவித்தால் மற்றவர்களை அன்பு செய்ய எம்மால் முடியும். அதாவது எல்லையில்லாத அன்பைக் காட்டவும் மற்றவர்கள் எமக்கெதிராகத் தீங்கு செய்தாலும் அவர்களை மன்னித்து ஏற்றுக்கொள்ள எம்மால் முடியும். இல்லையேல் குடும்பம் புரிந்து கொள்கின்ற, ஆதரவு தருகின்ற, உற்சாகப்படுத்துகின்ற இடமாக இருக்காது. அதற்கு மாறாக மன அழுத்தமும் ஒருவரை ஒருவர் குறை கூறுவதும் தாராளமாக வளரத் தொடங்கும். நாம் பிள்ளைகளுக்குச் செய்யும் பெரிய சேவை என்ன தெரியுமா? பிள்ளைகள் காணக்கூடிய விதத்தில், உணரக்கூடிய விதத்தில் கணவன் மனைவி இருவரும் ஒற்றுமையாக இருப்பதே. கணவன் மனைவி இருவருக்கிடையிலும் ஆழமான உறவு இல்லையேல் மனங்களில் இடைவெளி ஏற்படும். இந்த இடைவெளியை நிரப்ப இருவரும் முயலுவார்கள். 1. வேறு நபருடன் பிழையான அன்புத் தொடர்பை ஏற்படுத்த முயலுவர். அல்லது 2. சேவை சேவையென்று அதில் அடிமையாகுவர் அல்லது 3. வேலை வேலையென்று அதற்கு அடிமையாகுவர். அல்லது 4. போதைக்கு அடிமையாகுவர். இவை எமது குடும்பங்களில் இருந்தால் பிள்ளைகள் எப்படி மகிழ்ச்சியாக பாடசாலையில் பாடங்களைக் கற்க முடியும். மனைவி தனது கணவனின் குறைகளைத் தமது பிள்ளைகளுக்குக் கூறுவதோ அல்லது கணவன் தனது மனைவியின் குறைகளைப் பிள்ளைகளுக்குக் கூறுவதோ தவிர்க்கப்படவேண்டும். இல்லையேல் பிள்ளைகள் அப்பாவை அல்லது அம்மாவை மதிக்கமாட்டார்கள்.


இவை எல்லாவற்றிற்கும் காரணம் மன்னிப்பைக் குடும்பத்தில் அனுபவிக்கத் தவறினால் குடும்பம் நரகமாக மாறும். இதை உணர்ந்து கையிலே கிடைத்த வாழ்வை மகிழ்ச்சியோடு வாழப் பழகுவோம்.



## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு 149

**தொடரும்**

**பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா**
**உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.**



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

**இலங்கை நாயகி திருவிழா (சுதந்திர தினம்)**
**பொதுக்காலத்தின் 5வது ஞாயிறு (04.02.2018)**

**பேதுரு**

**வாசக விளக்கம்:** இன்று நாங்கள் எமது நாட்டின் பாதுகாவலியான அன்னை மரியாள் இலங்கை நாயகியின் திருவிழாவைக் கொண்டாடுகின்றோம். இரண்டாம் உலகப் போர் நடந்த காலத்தில் எமது நாட்டை அழிவிலிருந்து காப்பாற்றியதற்காக அன்னைக்கு நன்றி செலுத்தும் முகமாக இலங்கை நாயகி அன்னை மரியா என்ற திருவிழாவை வருடந்தோறும் சுதந்திர தினத்தன்று நாம் கொண்டாடி வருகின்றோம்.

மரியாள் எல்லாவற்றையும் மனதில் வைத்து சிந்தித்து சுதந்திரமாக முடிவெடுத்தாள். அவளது தியாகம் எமக்கு மீட்பைத் தந்தது. சுதந்திர நாட்டின் மக்களான நாமும் நாட்டிற்காகவும் மக்களுக்காகவும் தியாகங்கள் செய்யவேண்டும். எல்லா மக்களும் ஒன்றிணைந்து பெற்றுக்கொண்ட சுதந்திரத்தை எல்லாரும் அனுபவிக்க வேண்டும் என்ற சிந்தனை எம் எல்லோரிடமும் இருக்கவேண்டும். "மற்றவர் சுதந்திரத்திற்காக என்னைத் தியாகம் செய்வதே உண்மைச் சுதந்திரம் ஆகும். இதையே மரியாவும் செய்தார். எனவே உண்மைச் சுதந்திரத்தை எல்லாரும் பெற்று வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : எசா 43:1-3, 5, 10-13**
அஞ்சாதே ஏனெனில் நான் உன்னோடு இருக்கின்றேன்

**பதிலுரைப் பாடல் :**
நமது மீட்பின் ஆண்டவரைப் புகழ்ந்து பாடுங்கள்

**இரண்டாம் வாசகம் : தி.ப 1:12-13, 2:1-2,4-8,11**
திடீரென்று கொடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானத்தில் இருந்து உண்டாகி அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா யூதர்களின் அரசராகப் பிறந்திருப்பவர் எங்கே? அவரது விண்மீன் எழக்கண்டோம். அவரை வணங்க வந்தோம் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : மத் 2:1-2,7-12**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

அகில உலக திருச்சபைக்காகவும் எமது சுதந்திர நாட்டின் திருச்சபைக்காகவும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவருக்கும் சுதந்திரமாக சிந்தித்து மக்களுக்கு நன்மை பயக்கும் முடிவுகளை எடுத்துச் செயலாற்ற வேண்டிய வல்லமையைத் தந்தருள வேண்டுமென்று...

எமது நாட்டின் 70வது சுதந்திர தினத்தை நினைவுகூரும் நாம், நாட்டிற்காக எம்மால் இயன்ற நற்காரியங்களை செய்யவும், எமது நல்ல செயல்களுக்காக எதிர்கால சந்ததி எம்மை வாழ்த்தவும் கட்சி வேறுபாடுகளையும், சுயநலன்களையும் மறந்து நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்கவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

எமது நாட்டின் பாதுகாவலியாம் இலங்கை நாயகிக்கு விழாவெடுக்கும் நாம் அனைவரும் அவளது பரிந்துரையில் நம்பிக்கை கொண்டவர்களாக ஆபத்து நேரத்தில் மட்டுமன்றி எல்லா நேரங்களிலும் அன்னையை நாடவும் அவளுக்கு நன்றி கூறவும் வேண்டிய நல்மனதை எமக்குத் தந்தருள வேண்டுமென்று...

**பொதுக்காலத்தின் 6வது ஞாயிறு (11.02.2018)**

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 6வது வாரத்தில் நுழையும் இறைமக்களே அன்பர்களே கிறிஸ்து இயேசுவைத் தனது வாழ்வின் முன்னுதாரணம் காட்டி தனது வாழ்க்கை முறையை சீர்தூக்கிப் பார்த்து தூய பவுல் கொரிந்து நகர் மக்களுக்கு கூறும் செய்தியை இன்றைய இரண்டாவது வாசகத்தில் பார்க்கின்றோம். அவர் தனக்கு ஏற்பட்ட சவால்கள் துன்பங்கள் அதைத்திற்காகவும் நன்றி கூற அனைத்தையும் இறைவனின் மகிமைக்காகவே செய்கின்றார். இயேசு தன்னைக் குணப்படுத்துவார் என்ற நம்பிக்கையோடு வந்து தொழுநோயுள்ள ஒருவனை இயேசு தொட்டுக் குணப்படுத்திய சம்பவத்தை நற்செய்தியில் வாசிக்கின்றோம். "நோயற்றவர்க்கு அல்ல நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை" எனக் கூறும் இயேசு பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகின்றேன் என்றும் கூறியுள்ளார். இன்றைய நற்செய்தியைக் கேட்கும் நமக்கு அன்னை திரேசாவும் நினைவிற்கு வருகிறார். இயேசுவிடம் இருந்த இரக்க சிந்தனை இவரிடமும் விளங்கியதால் இவரும் எமக்கு முன்னுதாரணமாக விளங்குகிறார். இறைவனுக்கு மகிமை சேர்க்கும் விதத்தில் நாமும் வாழ வேண்டிய நல் மனதை வேண்டிப் பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : லேவி 13:1-2, 44-46**
தொழுநோயாளி பாளையத்திற்கு வெளியே தனியாக குடியிருப்பார்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரே நீரே எனக்குப் புகலிடம்

**இரண்டாம் வாசகம் : 1 கொரி 10:31-11:1**
நான் கிறிஸ்துவைப் போல் நடக்கின்றேன் நீங்கள் என்னைப் போல் நடங்கள்

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியிருக்கிறார். கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கின்றார் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : மாற்கு 1:40-45**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இறைநம்பிக்கையின் பாதையில் இறைமக்களை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் அன்பின் சமுதாயம் மலர உழைத்திடவும் குணப்படுத்தும் இயேசுவின் வல்லமையை மக்களுக்கு உணர்த்தவும் இதனால் மக்கள் அனைவரும் இயேசுவில் நம்பிக்கை கொண்டு வாழவும் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

எமது நாட்டில் நோய் துன்பம் கஸ்ரங்களால் உடைபட்டு உருக்குலைந்து வாழும் தலைவர்களும் பொறுப்புள்ளவர்களும் ஒன்றிணைந்து மக்களை ஆற்றுப்படுத்தும் நற்காரியங்களைச் செய்திட வேண்டிய மனநிலையைத் தந்தருள வேண்டுமென்று...

அனைத்து மக்களுக்கும் அன்புப் பணியாற்றிய அன்னை தெரசாவை போன்று நாமும் செயல்படவும், ஏழைகள் நோயாளர்மீது பரிவன்பு காட்டவும், பாவ வாழ்க்கையை விட்டு கடவுளின் மக்களாக வாழ அழைப்பு விடும் தூய பவுலின் வார்த்தைகளை கேட்டு சிந்தித்து அதன்படி வாழவும் வேண்டிய வரங்களை எமக்குத் தந்தருள வேண்டுமென்று...

## மெழுகுவர்த்தி திருநாள்

இந்தத் திருநாள் முதலில் எருசலேம் நகரில் தொடங்கப்பட்டதென கி.பி 400ஆம் ஆண்டில் எஜேரியா என்ற ஒரு துறவி (அங்கு திருப்பயணியாகச் சென்றவர்) குறிப்பிடுகின்றார். அந்த நகரத்தைக் குறித்து இவ்வாறு எழுதுகிறார். கிறிஸ்து பிறப்பின் பெருவிழாவுக்குப் பின் 40 நாட்கள் கழித்து, நடைபெறும் இவ்விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. உயிர்த்த ஆண்டவரின்

## இயேசுவை காணிக்கையாக்கும் விழா

மாசி 02



ஆலயத்திற்கு ஒரு மாபெரும் ஊர்வலம் வந்தடைகின்றது. மக்கள் திருவழிபாட்டிற்குத் தயாராகிக் கொள்கின்றனர். ஆயர்களும், குருக்களும் எவ்வாறு 40ஆம் நாள் கன்னித்தாயும், சூசையும் குழந்தை இயேசுவைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தனர் என்ற நற்செய்திப் பகுதியை வாசித்து மறையுரை ஆற்றுகின்றனர். இறைவாக்குரைத்த சிமியோனும், அன்னாவும் சொன்ன சொற்களை முன்வைத்து மறையுரை ஆற்றுகின்றனர். ஆலயத்தில் காணிக்கை செலுத்தி, குழந்தையை அர்ப்பணித்து மீண்டும் பெற்றுக் கொண்டனர் என்ற நிகழ்ச்சியை விரித்துரைத்து விளக்கம் அளிக்கின்றனர்.

இந்தக் காலத்தில், இத்தகைய தூய்மை பெறும் சடங்கு மறைந்து விட்டது. குழந்தையைப் பெற்றெடுக்கும் தாய் எந்த வகையிலும் மாசுபடுவதில்லை என்ற புதிய விளக்கமே இதற்குக் காரணம். 526ஆம் ஆண்டு இந்தத் திருநாள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கொன்ஸ்டான்டி நோபிள் நகரில் மாபெரும் பிளேக் நோய் அடியோடு நீங்கியதற்கு நன்றியறிதலாக, முதலாம் ஜஸ்டினியன் மன்னனால் தோற்றுவிக்கப்பட்டது.

கிரேக்கத் திருச்சபையில் இவ்விழா **"ஆண்டவரும் அவர் தம் தாயும், சிமியோனையும், அன்னாவையும் சந்தித்த விழா"** என்றும் அழைக்கப்படுகின்றது. மெழுகுவர்த்தித் திருநாள் என்றும் அழைக்கப்படுகிறது. "குரு பிடித்திருக்கும் எரிகின்ற திரி உலகின் இருளை நீக்க வந்த உலகின் ஒளியாம் கிறிஸ்துவைக் குறிக்கிறது என்றும், நாம் வைத்திருக்கும் எரிகின்ற திரி, கிறிஸ்துவை வாழ்வின் இறுதியில் எதிர்கொள்ளப் போகும்போது நற்செயல்களின் மூலம் ஒளிமயமாய் இருக்கவேண்டும் என்பதையும் குறிக்கிறது" என்கிறார் புனித சொப்பரோனியஸ். திருத்தந்தை 2ம் ஜோன் போல் "மீட்பரின் தாய்" என்ற சுற்று மடலில், சிமியோன் கன்னிமரியிடம் அறிவித்ததை, "மீட்பு வரலாற்றின் இரண்டாவது அறிவிப்பு" என்று குறிப்பிடுகின்றார். முதலில் மங்கள வார்த்தை அறிவிப்பு.

திருத்தந்தை 6ஆம் பவுல் என்பவர் ஆண்டவர் ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட போது சிமியோன் உரைத்த இறைவாக்கையும் அது கல்வாரி மலையில் நிறைவேறிற்று என்பதையும் இணைத்துக் காட்டுகின்றார். "உலகளாவிய மீட்பின் தன்மையைச் சிமியோன் முன்னறிவிக்கின்றார் என்பதைத் திருச்சபை காண்கிறது" எனக் குறிப்பிடுகின்றார். ஏனெனில் சிமியோன் "இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போர்க்கு ஒளிதரவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும், இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடிவருகிறது" என்று கூறுவதன் மூலம், அனைவரின் மீட்பராம் இயேசு என்று அடையாளம் கண்டு கொள்கின்றார்.

அதே வேளை இவரது இறைவாக்கில் கிறிஸ்துவின் பாடுகளுடன் உள்ள தொடர்பையும் திருச்சபை புரிந்து கொள்கிறது. "இதோ இக்குழந்தை இஸ்ராயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும், எழுச்சிக்கும் காரணமாக இருக்கும். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" (லூக் 2:34-35). இதன் ஒளியில் புனித பேர்நார்து உறுதிப்படுத்துகின்றார். "தூய கன்னியே, உமது மகனைக் காணிக்கையாக்கும். உமது வயிற்றின் கனியை ஆண்டவருக்கு ஒப்புக்கொடும் இறைவனுக்கு உகந்ததாகவுள்ள புனிதமிகு பலிப்பொருளை நம் மீட்புக்காக ஒப்புக்கொடும்"

### சிந்தனைக்கு

இருளில் இருப்போர்க்கு ஒளிதர நாம் உழைக்கின்றோமா? இறைமகன் இயேசுவில் உலகம் எழுச்சிபெற நம்மையே இறைவனுக்கு காணிக்கை ஆக்குவோமே!

# தவக்கால சிந்தனை

## "மனிதா நீ மண்ணே!... மனம் மா[ற்]றுவாய்"



திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டுக் காலத்தில் அதிமுக்கியமான கவனத்திற்குள் இன்று 14.2.2018 விபூதிப்புதனோடு காலடி எடுத்து வைக்கின்றோம். "தவக்காலம்" எனப்படும் இறையருளை பெற்றுக்கொள்ளும் காலத்திற்குள், நெற்றியில் சாம்பல் பூசி, நாம் ஒன்றுமில்லாமையிலிருந்து உருவாக்கப்பட்டோம் என்பதை நினைவுகூர்ந்து எம் அருளின் காலத்தை ஆரம்பித்துள்ளோம். "மனிதா நீ மண்ணே, அம்மண்ணிற்கு திரும்புவாய் என நினைப்பாய்" என்ற பாடலானது இக்காலம் முழுவதும் நாம் ஏதோ ஒரு காரணத்திற்காக படைக்கப்பட்டவர்கள், எங்களுடைய காரணம் முடிவடைந்த பின் எம்மைப் படைத்த பரம்பொருளை நோக்கி பயணிக்க வேண்டும் என்பதை நினைவுபடுத்துகின்றது.

மனம் மா(ற்)றுவாய், ஏன் இந்த சிந்தனை? தவக்காலம் எப்போது வரும் என்று ஏங்கிக் காத்திருக்கும் மக்கள் பலர் எம்மிடையே வாழ்கின்றார்கள். காரணம் உண்மையான செபம், தவம், தான தருமம் செய்வதற்காக அல்ல, மாறாக தவக்கால திருயாத்திரை, உடலை குறைப்பதற்கான ஒரு சந்தி, தவக்கால உரை என்ற பெயரில் உல்லாசப் பயணம் போன்ற வெளியாடம்பரமான நிகழ்வுகளில் பங்கு கொள்வதற்காகவே. ஏன் நம் பங்குகளில் கூட, பங்கு குழுக்கள் இணைந்து கலந்தாலோசித்து 5 வாரங்களுக்கு ஏற்றதுபோல தவக்கால திருயாத்திரைகளை ஒழுங்கு செய்வார்கள். இது ஆன்மீக ரீதியான பயணமா? அல்லது உல்லாச களியாட்டமா? என்பது தான் என் சிந்தனை. தவக்கால திருயாத்திரை செய்து தான் மக்கள் மனம்மாறுவார்கள் என்றில்லை. மாறாக ஒரு சிறு ஆன்மீக மௌனம், நற்கருணை ஆண்டவருடனான உரையாடல், தனிமையான சிலுவைப்பாதை என்பன ஆன்மீக பயணத்தில் இறைவனுடன் ஒன்றிணையும் ஒரு தருணமாக அமைகிறது.

இதற்காக தான் என் சிந்தனை, மனம் மாறுவாய், அல்லது மனம் மாற்றுவாய். விவிலிய ரீதியாக இந்த சிந்தனையை செலுத்தினால் எம் பார்வை வெறும் வீணான செயல் என்பது பலரது கருத்து. காரணம் விவிலிய ரீதியாக மக்களை மனம்மாற்ற முடியாது. மாறாக, வெளியாடம்பரமான நிகழ்வுகளை செய்வதன் மூலம் மக்களை மனம்மாற்றலாம் என்று நினைப்பதுண்டு. இத்தவக்காலத்தை ஆரம்பிக்கும் முன் நெற்றியில் சாம்பல் பூசி ஆரம்பித்தோம். காரணம் என்ன? "நாம் மண்ணால் படைக்கப்பட்டவர்கள். அந்த மண்ணிற்கே திரும்புவோம்" என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என்பதற்காகவே. எனவே இந்த நினைவிற்காகவே இறைவனுடனான ஒன்றிப்பின் ஆழ்ந்த தியானமும், ஒரு சந்தி மற்றும் சுத்த போசனம் அனுசரிக்க வேண்டும் என திருச்சபை நமக்கு கற்பிக்கின்றது.

சற்று சிந்தித்தால் எத்தனை வருடம் நானும் அறிந்திராத வகையில் இத்தவக்காலத்தை அனுசரித்துள்ளேன். நானும் வெளியாடம்பர நிகழ்வுகளில் இணைந்து தவக்காலத்தை அனுசரித்தேனா? தவக்காலத்தை திருயாத்திரை என்ற பெயரில் உல்லாச பயணம் மேற்கொண்டேனா? சரியான முறையில் ஒருசந்தி சுத்த போசனம் கடைப்பிடித்தேனா? என்பதை என் வாழ்வில் நான் கேட்டுக்கொண்டால் இதற்கான பதில் மௌனமே

இத்தகைய சிந்தனையில் நானும் இணைந்து சிந்திக்க உங்களை அழைப்பது இத்தவக்காலத்திலேயேனும் மனம் மாறுவோம் அல்லது மனம் மாற்றுவோம். நாங்கள் முன்வந்து மக்களை தெளிவுபடுத்துவோம். பங்குகளில் இணைந்து மக்களை தெளிவுபடுத்துவோம். வாழ்க்கையில் இக்காலம் மிகப்பெரிய அருளின்காலம். நமக்கு மீட்பை பெற்றுத்தந்த மீட்பரின் பாடுகள், மரணம் உயிர்ப்பை நினைவுபடுத்தும் காலம் சிந்தனைகள் எல்லாம் இறைவனின் பால் ஒன்றிணையும் இவ்வாரமாகிய புனிதமிக்க காலத்தில் எம் நிலையை உணர்ந்து இந்த 40 நாட்களும் இறைவனுடன் ஒன்றிணைந்து எமது இருப்பை அறிந்து கொள்வோம்.

**நம் மீட்பரின் பயணம்**

**உல்லாசப் பயணமா?**

**அல்லது**

**சிலுவையின் பயணமா?**

அருட்சகோ. டிலோய்ட்சன் பெர்னாண்டோ
தேசிய குருமடம் – கண்டி

# திருநீற்றுப்புதன்



## நெற்றியில் திரு நீறோடு...

திருநீற்றுப் புதனன்று இடி முழக்கமாய் எதிரொலிக்கும், அதிரச் செய்யும், இறைவாக்கு, "மனிதனே, நீ மண்ணாக இருக்கின்றாய்" என்பதே. இன்றைய நாளில் நமது தாய் திருச்சபை நமக்கு ஆழமாக வலியுறுத்திச் சொல்லுகிறது.

### "நீ மண்ணாக இருக்கிறாய், மீண்டும் மண்ணுக்குத் திரும்புவாய்"

இந்தத் திருநீறு எத்தனை அர்த்தமுள்ளது? அது நமக்கு உணர்த்துவது என்ன? இதோ...

✷ இதோ, நான் பூசியிருக்கிறேன் சாம்பல், இதுதான் நம் கடைசிக் கதி, இறுதியில் நாமெல்லாம் போகிறவர்கள், பின் எதற்கு இந்த அர்த்தமற்ற டாம்பீக வாழ்க்கை? வாழ்வின் பொருள் உணர்ந்து வாழ ... இப்படி ஓர் அர்த்தம்.

✷ சாம்பல் அணிந்த நெற்றி, பார்ப்பவரையெல்லாம் தெய்வத்தை நினைக்கச் சொல்கிறது. - இப்படி ஓர் அர்த்தம்.

✷ குருத்தோலை ஞாயிறன்று நாம் பிடித்த அதே மந்திர ஓலைகளை சுட்டெரித்து அதன் சாம்பலை நெற்றியில் இடுகிறபோது வெற்றியும் தோல்வியும் ஒன்று தான். கிறிஸ்தவனுக்கு வாழ்வதும், சாவதும் ஒன்றுதான். கிறிஸ்து மட்டும் போதும். இப்படியும் ஓர் அர்த்தம்.

✷ திருநீற்றை இட்டுக்கொள்வது ஒரு நாள் தான். ஆனால் அதில் கூறப்படும் உணர்வுகள் ஒவ்வொரு கணமும் நம் உள்ளத்தை நிரப்புகின்றது. அன்று மனவருத்தத்திற்கும், மனத் தாழ்ச்சிக்கும், ஒருத்தலுக்கும், ஒப்புரவுக்கும், உரிய நினைவு பொருளாக திகழ்கிறது. இப்படி ஒரு அர்த்தம்.

### இதற்கு பழைய ஏற்பாட்டுச் சான்று

✷ இறை வல்லமையை உணர்த்தும் சாம்பல். (வி.ப. 9:8-9)

✷ இழைக்கப்பட்ட அநீதியை வெளிப்படுத்தும் சாம்பல். (2சாமு. 13:19)

✷ தவறை உணர்ந்து செயல்படத் தூண்டும் சாம்பல். (யோனா. 3:6)

✷ உலகப் பற்றினை ஒழித்திடத் தூண்டும் சாம்பல். (யோனா. 3:6)

✷ பாவ மன்னிப்புக்கு வழிகாட்டும் சாம்பல். (எரே. 6:26)

### ஆகவேதான் தவக்காலம் நம் மீட்பின் காலம்.

நம் ஆன்மாவின் வசந்த காலம். பாவத்தால் நாம் மூவித உறவுகளை முறித்துள்ளோம். இவ்வுறவுகளை மீண்டும் புதுப்பித்து ஆழப்படுத்த இத்தவக்காலத்தில் திருச்சபை நம்மை அழைத்து நிற்கின்றது. இதற்கு மூன்று வழிகளைத் தருகிறது.

இம்மாதம் 14ம் திகதி புதன்கிழமை விபூதி புதனோடு தவக்காலத்தினைத் தொடங்குகின்றோம்.

### இத்தவக்காலத்தில்

முகமலர்ச்சியோடும், மன ஆர்வத்தோடும், தர்மம் செய்வதால், விளையும் நன்மைகள்

✷ மனதில் மகிழ்ச்சியும், நிறைவும் உண்டாகிறது.

✷ நற்காரியங்களைச் செய்வதால் வாழ்வதன் திருப்தி கிடைக்கிறது.

✷ மனநலமும், உடல் நலுமும் வலுப்படுகிறது.

✷ ஒருவருக்கு உதவுவதன் வழியாய் அவர்களைச் சார்ந்தோருக்கும் உதவும் நிலை ஏற்படுகின்றது.

✷ உறவுகளும் சமூகத் தொடர்புகளும் வளர்கின்றது.

✷ தன்னைப்போல் பிறரையும் நேசிக்கச் சொன்ன கடவுளின் கட்டளை கடைப்பிடிக்கப்படுகின்றது.

✷ ஏழைக்கு உதவுவதால் இறைவனுக்கே உதவுகிறோம் என்ற திருப்தி கிடைக்கிறது.

✷ இறைவனின் புன்னகையை ஏழையின் முகத்தில் காண முடிகிறது.

இவ்வாண்டின் தவக்காலம், நம் ஒவ்வொருவருக்கும் ஆன்மீக வாழ்வில் ஒரு புதிய மாற்றத்தினைக் கொண்டு வரவேண்டும்.

✷ அதற்காக தவக்கால திருநிகழ்வுகளில் தவறாமல் பங்கேற்போம்.

✷ செபம், நோன்பு, தர்மம், பிறரை மன்னித்தல், பிறரிடம் மன்னிப்பு கோருவது என்ற புண்ணிய முயற்சிகளை நமது அன்றாட வாழ்விலே அதிகரிப்போம்.

# இலங்கை அன்னையும் 70வது சுதந்திர தினமும்

சுதந்திரம் இந்தச் சொல்லை உச்சரிக்காத உதடுகளே இல்லை. சுதந்திரத்தை விரும்பாத எவருமே இல்லை. எனவே மனிதனாகப் பிறந்து வளர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் பலரும் ஏதாவது ஒரு காரணியாலாவது முழு மனித சுதந்திரத்தை, அதன் அனுபவத்தை பெற முடியாமல் தவித்துக் கொண்டுதான் இருக்கின்றனர். இம் முழு சுதந்திரத்தையும் பெறமுடியாமல் தடுக்கும் காரணிகள் பல. அவற்றை எப்போது அனுபவிக்கின்றோமோ அப்போது முழுமையான சுதந்திரத்தை அனுபவிப்பவர்களாக வாழுவோம். ஆகவே இன்று எமது இலங்கை நாட்டின் 70வது சுதந்திர தினத்தை 4.2.2018 கொண்டாடும் நாங்கள் இந்நன்நாளில் எமது நாடு எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கவும், இயற்கை அழிவுகளிலிருந்தும், அன்னிய நாடுகளின் கைகளில் இருந்தும் எமது நாடு பாதுகாக்கப்படவும், அனைத்து நலன்களும், வளங்களும் பெற்று சமாதானம் நிறைந்த சகோதரத்துவ நாடாக, எல்லாத் துறைகளிலும் வளர்ந்தோங்க இலங்கை மாதாவிடம் எம் நாட்டை ஒப்படைத்து அவரின் பரிந்துரையை வேண்டுவோம்.

எமது இலங்கை நாடு எல்லா வளங்களும் செறிந்த, வெளிநாட்டவர்களின் கண்கவர்ந்த ஒரு சிறிய நாடாகும. "சுதந்திரம் என்பது அரசியல் அடிமைத்தனத்திலிருந்து விடுபடுதல் மட்டுமன்றி, செல்வத்தில் சமச்சீர், பகிர்வு, சாதியத்திலிருந்து விடுதலை, சமூக ஏற்றத்தாழ்வு நீக்கம், சாதிமத பூசலின்மை, மொழி பிரச்சினையின்மை, மத சகிப்புத் தன்மை கொண்டதாக இருப்பதே. ஒரு நாட்டில் உண்மையான சுதந்திரம். ஆனால் நாம் இவற்றுக்கு மாறாக நடந்துகொண்டு சுதந்திரம் பெற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சுதந்திரமும், பொறுப்புணர்வும் இணைந்து நிற்கின்ற இடத்தில் தான் அன்பு இடம்பெற முடியும். ஆகவே இன்றைய நமது சுதந்திர நாட்டில வறுமை, விலைவாசி உயர்வு, இவற்றினால் மக்கள் படும் அவல நிலை, வெளிநாட்டவரின் வருகை. இன்று எம் நாட்டில் இளையோர் சமுதாயத்தை பாழாக்கிக் கொண்டிருக்கும் சூழல். எமது நாட்டு கலாச்சாரம், பண்பாடு அற்றுபோய், மேலை நாட்டு கலாச்சாரம் பெருக்கம் என்பன எமது நாட்டில் இன்று அதிகரித்துக் கொண்டு இருக்கின்றது. எமது நாட்டு தலைவர்கள் அரசியல் இலாபங்களை தேடுகின்றார்களே தவிர மக்களின் வாழ்வாதார நிலையைக்கண்டு கொள்வதில்லை. இதற்கு நமது சமய அரசியல் தலைவர்கள் பேசிக் கொண்டு இருக்கின்றார்களே தவிர செயற்பாட்டில் ஒன்றையும் காணக்கூடியதாக இல்லை என்றே கூறவேண்டும். மக்களின் கஷ்டங்கள் கூடுகிறதே ஒழிய குறைந்தபாடில்லை. ஆகவே 70வது சுதந்திர தினத்தில் காலடிபதிக்கும் நாம் இயேசுக்கிறிஸ்துவின் வாழ்வை சற்று நோக்குவோம்.

நமது விடுதலையின் நாயகன் இயேசு சுதந்திரத்தின் எல்லாப் பரிமாணங்களையும் வாழ்ந்து காட்டினார். இத்தகைய வாழ்வில் வரும் துன்பங்கள், துயரங்கள், மனவருத்தங்கள், அனைத்தும் சாவையும் கடந்தவை என்று உயிர்ப்பினால் உறுதிப்படுத்தினார். இத்தகைய ஒரு நம்பிக்கையை விசுவசித்து வாழ்ந்து காட்டியதால் உலக அரசியாக எமது நாட்டின் பாதுகாவலியாக லங்கா மாதா திகழ்கின்றாள். எனவே இலங்கையர்களாகிய நாம் ஒவ்வொருவரும் சாதி, சமய, கலாச்சார, மற்றும் இன பேதங்களைக் கடந்து முழு மனித விடுதலைக்காக உழைக்க அழைக்கப்படுகின்றோம். இத்தகையை ஒரு அழைப்பு வாழ்வுக்கு சமயமும், அரசியலும் ஒன்றை ஒன்று நிறைவு செய்ய வேண்டும். எனவே அவரவர் சமயம் தரும் ஆன்மீகப் பயிற்சிகளின் அடிப்படையில் சமய அடிப்படைவாதங்களைக் கடந்து பொறுப்புள்ள, உண்மையுள்ள குடி மக்களாக வாழ முயற்சிப்போம்.

அன்று இரண்டாம் உலகப் போரின்போது என்ன நடக்குமோ என்று அங்கலாய்த்துக்கொண்டிருந்த வேளையில் 1942ம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு அன்று ஜப்பானியர் குண்டு வீச்சு விமானங்கள் நமது நாட்டின் மீது வந்து குண்டு வீசியது இக்குண்டுகள் முதலில் கொழும்புத் துறைமுகத்திலும் பின்னர் திருகோணமலைத் துறைமுகத்திலும் வீழ்ந்தன. மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. இருப்பினும் மக்கள் மிகவும் பீதியடைந்திருந்தனர். இதனைக் கண்ணுற்ற அப்போதைய பேராயர் மசோன் அன்னை மரியாளை நோக்கி வேண்டுதல் செய்தார். இப்போரின் அபாயத்தில் இருந்தும், குண்டு வீச்சில் இருந்தும் இலங்கையையும் இலங்கை வாழ் மக்களையும் பாதுகாத்தால் அதற்கு பிரதியுபகாரமாக அன்னைக்கு ஒரு பிரமாண்டமான "பசிலிக்கா" ஒன்றைக் கட்டுவதாக வாக்குறுதி அளித்தார். அதன் அடிப்படையில் எம் மக்களுக்கு எவ்வித தீங்கும் ஏற்படவில்லை.

எனவே அன்றைய பேராயரும் அவரைத் தொடர்ந்து வந்த பேராயர் தோமஸ் கர்தினால் கூரே அவர்களும் இப்பசிலிக்காவை இந்நிலைக்கு கொண்டு வந்தனர். 1847ம் ஆண்டு மாசி மாதம் 05ம் திகதி தேவத்தையில் கூடியிருந்த பெருந்திரளான மக்கள் மத்தியில் பேராயர் மசோன் திருத்தந்தையின் அறிவுரைப்படி அன்னை மரியாளை லங்கா மாதா என்றும் அவளே எமது நாட்டின் பாதுகாவலியும் என்றும் பிரகடனப்படுத்தினார். ஆகவேதான் எம் மக்களைப் பாதுகாத்து சுதந்திரமாக வாழச் செய்த லங்கா மாதாவிற்கும் இந்த சுதந்திர தினத்திலே விழா எடுத்துக் கொண்டுடாடுகின்றோம்.


இன்று நம் அன்னை, எம் நாட்டின் பாதுகாவலி, லங்கா மாதா நமக்கு விடுக்கும் சுதந்திரச் செய்தி சுதந்திர நாட்டில் அடிமைத்தன்மையின் ஆணி வேரைக்களைவதாகும். அடிமரத்தின் வேரில் இருக்கும் பூச்சிகளைக் களையாமல் கிளைகளுக்கு மருந்தடிப்பது விடுதலை சுதந்திரம் அன்று. ஒருவன் தன்னிடம் இருக்கும் அதிகாரத்தை அடுத்திருப்பவன் கையில் கொடுப்பது உண்மைச் சுதந்திரம் அன்று. மாறாக அடிப்படையில் மாற்றம் உதயமாகி அது சமூகத்தில் தழைத்தோங்க காயாகிக் கனியாகிப் பயன்தருவதே உண்மைச் சுதந்திரம், விடுதலையாகும். இருப்பதைப் பதுக்குவது விடுதலை அல்ல. பகிர்வதே உண்மை விடுதலை. அடிமைப் படுத்துவது விடுதலை அன்று. அடிமையைத் தலைத்தூக்க வைப்பதே விடுதலை.

இன்று நாம் பெற்ற விடுதலை முழுமை பெற வேண்டுமானால் வறுமையில் இருந்து, ஏழ்மையில் இருந்து இயற்கை அழிவின் கொடுமையில் இருந்து, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளில் இருந்து விடுபட வேண்டும். இறைமகன் இயேசு இறுதி மூச்சு வரை போராடியது போல் விடுதலை என்பது நிறைவு பெற்றுவிட்டது என்று அல்ல இது ஒரு தொடர்கதை தொடர் நிகழ்வு, தொடர் போராட்டமாகும். பந்தம், பாசம், நேசம், அன்பு, பகிர்வு, போன்ற பண்புகளுக்குள் நாம் சிறைப்படுத்திக் கொண்டு இவைகள் நிறைவு பெறப் போராட வேண்டும்.

அன்னை மரியாளைப் போல், அடிமையைக் கடைக்கண் நோக்க வேண்டும். சமத்துவம், அமைதி, சுதந்திரம் பெறப் போராடி இரத்தம் சிந்திய தியாகிகளைப் போல் வாழக் கற்றுக் கொள்வோம். கடந்த கால கருத்து வேறுபாடுகளைக் களைந்து எதிர்காலச் சிறகுகளுக்குள் சிறைப்பட்டுக் கொள்வோம். புரட்சிக் கவிதை பாடும் புதுமைக் குயில்களாக, சிந்தனையில் நடமாடும் சிங்கார மயில்களாக, கருமையாக இருந்தாலும் ஒருமித்து வாழும் காக்கைகளாக, சமாதானத்தின் சின்னமாக சிறகடித்துப் பறக்கும் அமைதிப் புறாவாக வாழ்வோம். அன்னை மரியாள் பாடிய விடுதலையின் கீதம் நமது இறுதி மூச்சுவரை நம் இதயத்துக்குள் இருக்கட்டும்.






**இந்த எளிய கணக்கின் விடையை கண்டுபிடியுங்கள்**

## 3. திருமறைப் பழக்கங்கள்.

**4. ஆலயத்துக்குள் இவ்வாறு நடந்து கொள்ளும்.**

ஆலயம், மூவொரு கடவுளான வானகத் தந்தையும், இயேசுவும், தூய ஆவியாரும் வாழும் வீடு. இது விண்ணக வீட்டின் சாயலாய் இருக்கிறது. எனவே நீர் மிக மரியாதையோடு ஆலயத்தைப் பயன்படுத்தும். சிற்றுண்டிகளை உண்ணவும், உல்லாசமாக மற்றவர்களோடு பேசவும், விளையாடவும் இதைப் பயன்படுத்தாதீர். ஆலய வாயிலை வந்தடைந்ததும் மற்றவர்களோடு பேசுவதை முற்றாக நிறுத்தும். ஆலயத்தினுள் வந்ததும் நிறைவான மௌனம் கடைப்பிடியும். வானகத் தந்தையோடும், இயேசுவோடும், தூய ஆவியாரோடும் மட்டுமே பேசும். வேறு எவரோடும் எத்தேவையை முன்னிட்டும் பேசுவதைத் தவிரும். ஏதாவது பேசவேண்டிய தேவை ஏற்பட்டால் தொடர்புடைய நபரை வெளியே கூட்டிக்கொண்டுபோய் பேசும். இவ்வாலயப் பழக்கத்தால் வானகத் தந்தை உம் அருகில் இருக்கின்றார்.

**5. தேவநற்கருணை ஆண்டவரை இவ்வாறு வணங்கும்**

நீர் ஆலயத்துக்குள் நுழைந்ததும் புனிதர்களின் சுருபங்களைச் சந்திக்குமுன், தேவநற்கருணை ஆண்டவர் இருக்கும் திருப்பேழைக்குமுன் வந்து அவருக்கு மரியாதை செய்யும் இதனை இருவிதமாகச் செய்யலாம்.

நேராக நிமிர்ந்து நின்று தேவநற்கருணை திருப்பேழையைப் பார்த்துக்கொண்டு, இரு கைகளையும் கூப்பித் தலையோடு சேர்த்து குனிந்து இயேசுவே உமக்குப் புகழ் என்று மனதாலே சொல்லி, நிமிர்ந்து மௌனமாகச் சொல்லும். அல்லது தேவநற்கருணை திருப்பேழையைப் பார்த்துக்கொண்டு, இரு கரங்களையும் கூப்பி நெஞ்சிலே வைத்தவாறு வலதுகாலை மடித்து ஒன்றை முழந்தாளில் இருந்து, பின்னர் தலைகுனிந்து இயேசுவே உமக்குப் புகழ் என்று சொல்லி எழுந்து மௌனமாகச் செல்லலாம்.

**6. உணவின்போது இவ்வாறு செபியும்.**

**உணவருந்தும் முன் செபியும்**

உணவை ஒரு கோப்பையில் அல்லது தட்டில் எடுத்தபின் உமக்கு முன் அதை வைத்து (நின்று அல்லது இருந்து) இருகரம் கூப்பி, உணவைப் பார்த்தவாறே,

**வானகத் தந்தை, அப்பா! நான் உயிர்வாழ, இந்த உணவை நீர் எனக்குத் தந்துள்ளீர். இந்த உணவையும், என்னையும் ஆசீர்வதியும். இயேசு ஆண்டவர் வழியாக இதைக் கேட்கின்றேன். ஆமென்.** என்று செபித்தபின், உணவைச் சிலுவை அடையாளத்தால் ஆசீர்வதித்து உண்ணத் தொடங்கும்.

**குடும்பமாக உணவருந்துமுன் :**

எல்லோரும் ஒன்றாக வந்து (நின்று அல்லது இருந்து) இருகரம் கூப்பி, உணவை பார்த்தவாறே, அப்பா அல்லது அம்மா பின்வருமாறு செபிக்க, நீரும் மௌனமாக அவரோடு சேர்ந்து செபியும்.

**வானகத் தந்தை, அப்பா! நாங்கள் உயிர்வாழ, இந்த உணவை நீர் எங்களுக்குத் தந்துள்ளீர். இந்த உணவையும், எங்களையும் ஆசீர்வதியும். இயேசு ஆண்டவர் வழியாக இதைக் கேட்கின்றோம்.** என்று செபிக்க, எல்லோரும் **ஆமென்.** என்று சொன்னபின் உணவை சிலுவை அடையாளத்தால் ஆசீர்வதித்து, அதைப் பரிமாறி உண்ணத் தொடங்குங்கள்.

**தொடரும்**

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)**




ஒரு மரக்கிளையில் மிகவும் சோகமாக உட்கார்ந்திருந்தது குஞ்சுக் காகம். இதைக் கண்ட அணில், "குஞ்சுக் காகமே... உன் கவலையின் காரணம் என்ன... காலையில் தான், உற்சாகமாக பறந்தாய், இப்போது ஏன், சோகமாக இருக்கிறாய்," என்று கேட்டது. "என்னவென்று சொல்வேன் அணிலே... நான் கருப்பாக, அழகின்றி இருக்கின்றேன். இதுவரை என் அம்மா என்னை "அழகே, முத்தே.." என்று கொஞ்சுவாள். அதைக் கேட்டு "அழகி" என்று நினைத்திருந்தேன். இன்று தான், முதல் முதலாக, பறந்து சென்ற போது, வழியில் ஒரு குளத்து நீரில், என் உருவத்தைப் பார்த்தேன். நான் எவ்வளவு கருப்பாக இருக்கிறேன் தெரியுமா..." "இதற்காகவா கவலைப் படுகிறாய், இயற்கை ஒவ்வொரு பறவையையும், ஒவ்வொரு நிறத்தில் படைத்திருக்கிறது, இதில், கவலைப்பட என்ன இருக்கிறது..." என்று ஆறுதல் கூறியது அணில்.

"இல்லை அணிலே... எத்தனையோ பறவைகள் அழகாக இருக்கின்றன. நான் மட்டும் கருப்பாக இருப்பது கவலையைத் தருகிறது..." "சரி என்னோடு வா... நான், உன்னையும் அழகாக மாற்றி காட்டுகிறேன்..." என்றது அணில்.

எப்படியோ... நான் அழகாக மாறினால் போதும்" என்று நினைத்த குஞ்சுக் காகம், அணிலோடு புறப்பட்டுச் சென்றது. இரண்டும் முதலில், ஒரு ஏரிக்கரையை அடைந்தன. ஏரியில், வெள்ளை நிற அன்னம் ஒன்று நீந்திக் கொண்டிருந்தது. "அன்னமே.. நீ எவ்வளவு வெண்மையாக இருக்கின்றாய்... அதனால், நீ மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறாய் என்று எண்ணுகின்றேன்... அப்படித்தானே..." என்றது அணில்.

இதுவரை நானும் என்னை அழகு என்று நினைத்திருந்தேன், ஆனால், சில நாட்களுக்கு முன், ஒரு கிளியைப் பார்த்தேன். உடல் முழுவதும், பச்சை நிறமாகவும், அலகு சிவப்பு நிறமாகவும், இரண்டு வண்ணங்களில் இருக்கிறது. அன்றிலிருந்து எனக்கும், உடலில் இரண்டு நிறங்கள் இல்லையே... என்று கவலை வந்துவிட்டது" என்று சொன்னது.

"ஓ... அப்படியா.. சரி... நாங்கள் வருகிறோம்" என்று அன்னத்திடம் விடைபெற்ற அணில், காகத்துடன், ஒரு ஆலமரத்தின் அருகில் வந்தது.

ஆலமரத்தின் கிளையில், அழகாக சத்தமிட்டுக் கொண்டிருந்தது கிளி. "என்ன கிளியக்கா.... ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறாய் போலிருக்கிறது. உனக்கென்ன, உன் உடல் பச்சை நிறத்தில் பள பளக்கிறது.. அலகோ பவளம் போல சிவந்திருக்கிறது. அழகான தோற்றத்தைப் பெற்றிருந்தால், யாருக்குத் தான் மகிழ்ச்சி தோன்றாது..." என்று ஜாடையாக பேசியது அணில்.

"அணிலே... நானும், என் அழகைப் பற்றி பெருமையாகத் தான் நினைத்திருந்தேன். ஆனால், சில மாதங்களுக்கு முன் ஒரு மயிலைப் பார்த்தேன். அதன் உடலில்தான் எத்தனை எத்தனை நிறங்கள்....

"கழுத்து கருநீல வண்ணத்தில் ஜொலிக்கிறது, தோகையோ, பச்சையும், நீலமும் இளநீலமுமாய் மின்னுகிறது. கண்களோ, அழகாக சிவந்து காணப்படுகின்றன. மயிலின் அழகிற்கு முன், நான் என்ன அழகு.." என்று, சலிப்பாய் சொன்னது கிளி.

"ஓ... அப்படியா... சரி... நீ, உன் வேலையைக் கவனி, நாங்கள் வருகிறோம்" என்று சொன்ன அணில், காகத்தை தன்னோடு அழைத்தபடி வெகுதூரம் சென்றது. அவையிரண்டும் காட்டை விட்டு, வெளியேறி நகர பகுதிக்கு வந்து விட்டன. அங்கு, அழகான "பறவைகள் காட்சிசாலை" இருந்தது. உள்ளே சென்றன. பெரியதொரு கூண்டில் மயில் ஒன்று அடைக்கப்பட்டிருந்தது. நேராக அந்த கூண்டின் அருகில் சென்றது அணில். "என்ன மயிலே... மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறாய் போல, உன் உடலில் தான் எத்தனை எத்தனை நிறங்கள். "பறவைகளின் ராணி" என்று, மக்களும் உன்னை பெருமையுடன் அழைக்கின்றனர். பாவம் என்னுடன் வந்திருக்கும் காகத்தைப் பாரேன், கன்னங்கரேல் என்று இருப்பதால், கவலையோடு இருக்கிறது" என்று அணில் கூறியது.

"காகமே... நீ என்னைப் போல பல நிறங்களோடு இல்லை என்று வருத்தப்படுகிறாய். ஆனால், உனக்கு ஒரு உண்மை தெரியுமா... என் உடலின் நிறங்களே எனக்கு எதிரியாக அமைந்துவிட்டன.

"என் அழகை, பிறர் பார்த்து செல்ல வேண்டும் என்பதற்காகவே, என்னை இந்த கூண்டில் அடைத்து வைத்துள்ளனர் மனிதர்கள். என்னால் சுதந்திரமாக எங்குமே செல்ல இயலவில்லை. ஆனால், உன்னைப் பார் எவ்வளவு சுதந்திரமாக இருக்கிறாய்..."

"பறவை இனங்களிலேயே காகங்களை மட்டும் தான், எந்த மனிதரும் கூண்டில் அடைத்து வைப்பதில்லை. உண்மையிலேயே கறுப்பாக இருப்பதற்கு, நீ மகிழ்ச்சி அடைய வேண்டும். உன்னைப் போல, சுதந்திரமாக பறக்க முடியவில்லையே என்று, நாங்கள் எல்லோரும் தவிக்கின்றோம்" என்று வருத்தத்தோடு சொன்னது.



"மயில் சொல்வதும் உண்மை தானே... காக்கை இனத்தை மட்டும் தானே, மனிதர்கள் கூண்டில் அடைத்து வைப்பதில்லை. நம் கறுப்பு நிறம் தான் எப்போதுமே நம்மை சுதந்திரமாக வைத்திருக்கிறது" என்று உணர்ந்தது குஞ்சு காகம்.

"என்ன குஞ்சுக் காகமே... இனிமேலும் உன்னை அழகுபடுத்திக் கொள்ள வேண்டுமா... அப்படியானால் சொல்... என் நண்பன் ஒருவனிடம் கூட்டிச் சென்று உன் மீது அழகான வண்ணம் பூசிவிட சொல்கிறேன்" என்று, குறும்பாகக் கேட்டது அணில்.

"ஐயோ வேண்டாம் நண்பரே... எனக்கு, நல்ல பாடம் புகட்டினீர், இனி நான் என் கறுப்பு நிறம் குறித்து, ஒருபோதும் கவலைப்பட மாட்டேன். நான் வீட்டிலிருந்து புறப்பட்டு வந்து வெகுநேரம் ஆகிவிட்டது. அம்மா என்னை தேடுவார், வாருங்கள் நம் இடத்திற்குச் செல்லலாம்" என்று அழைத்தது குஞ்சுக் காகம்.

மகிழ்ச்சியுடன் காகத்தை அழைத்துச் சென்றது அணில்.

**என்ன குழந்தைகளா, இந்தக் கதையில் இருந்து இரண்டு பெரிய உண்மைகள் உங்களுக்கு புரிந்திருக்குமே... எவ்வளவு தான் அழகானவர்களாக இருந்தாலும், அவர்கள் மனதில், "ஐயோ நாம அவர்களைப் போல இல்லையே..." என்ற குறை இருக்கிறது என்ற விஷயம் ஒன்று மற்றொன்று, "அழகு" எப்போதுமே ஆபத்தானது என்ற இரண்டு விஷயத்தை புரிஞ்சிகிட்டிருப்பீங்க... எனவே, நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ, அதை குறித்து குறைபட்டு கொள்ளாமல் அதுதான், "பெஸ்ட்" என நினைத்து சந்தோஷ மாக வாழுங்கள். சரியா!**



# மனநிறைவு

**சிக்கலை ஏற்படுத்துவதும் மனம்தான், சிக்கலில் சிக்கித் தவிப்பதும் மனம் தான், சிக்கலை நீக்குவதும் மனம்தான்**

## 1. மனம் ஒரு குப்பை தொட்டியா?

ஒரு பிச்சைக்காரர் அடுத்த வேளை சாப்பாட்டுக்கே வழி இல்லாத நிலையில் மிகப்பெரிய ஓட்டல் கட்டும்பணி பாதியிலே நின்றதற்காக கவலைப்பட்டுக்கொண்டிருந்தாராம். தேவையற்ற மற்றவர்களுடைய கவலைகளை தம் மனதில் வாரி போட்டுக்கொண்டு அல்லல்படுதல்.

## 2. எது நிறைந்தாலும் மனம் நிறையுமா?

10,000 ரூபாய்க்கு பட்டுப்புடவை எடுத்துக் கொடுத்தாலும், என்னதான் இருந்தாலும் பக்கத்து வீட்டுக்காரி புடவை போல இல்லையே என்று சொல்லும் பெண்களும் உண்டு. 30,000 ரூபாய் சம்பளம் பெற்றாலும் எனக்கு போதுமான சம்பளம் கிடைக்கிறது என்று திருப்தி அடைவோர் எத்தனைபேர்? கோடீஸ்வரராக இருந்தாலும்கூட அதிக வருமானம் ஈட்ட விருப்பம் உள்ளவர் எத்தனைபேர். இன்னும் எப்படி சம்பாதிப்பது, எதில் எதில் முதலீடு செய்வது என்று யோசிக்கிறவர்கள் எத்தனை பேர்? இன்றைய காலகட்டத்தில் வரவு எட்டணா எனில் செலவு பத்தனா. ஆக அன்றாட தேவைகளை நிறைவு செய்கின்ற முயற்சியில் இருப்பதே மனித வாழ்வு என்று சொல்லலாம். தேவை அதிகமாக, வாழ்க்கை சிக்கலாகிறது. சிக்கலை நீக்கி, தேவையை நிறைவு செய்கின்ற முயற்சியும் கடினமாகிறது.

## 3. தேர்ந்து தெளிதல்

மனம் அமைதியை வாழ்வின் தேவைகளைத் தேர்ந்து தெளிவது மிகத் தேவையானது. எந்த மனிதரும், எவ்வளவுதான் வளமையுடன் இருந்தாலும், தமக்குத் தேவையான எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் பெறமுடியாது, பெறவேண்டிய அவசியமும் இல்லை. எது, எது எப்போது தேவை என்று நாம் தேர்ந்து தெளிய வேண்டும். வகைப்படுத்த வேண்டும்.

**இன்று கவனம் செலுத்த வேண்டிய உடனடித் தேவைகள்,**

**அடுத்த வாரம், மாதம் கவனம் செலுத்த வேண்டிய தேவைகள்,**

**அடுத்த ஆண்டு சந்திக்க வேண்டிய தேவைகள்,**

**தள்ளிவிட வேண்டிய தேவைகள்**

நாம் உடனடித்தேவைகளில் மிகுந்த ஈடுபாடு காட்ட வேண்டும். தேவையை உணர்ந்து வாங்கும் எப்பொருளும் பயனுடையதாக இருக்கும். உதாரணமாக பேராசிரியர் ஒருவர் கல்லூரிக்கு ஸ்கூட்டரில் செல்வது வழக்கம். வேறு ஒரு பேராசிரியர் என்ன சேர் நீங்க இன்னும் கார் வாங்கலையா? ஓட்டை ஸ்கூட்டரை விற்றுவிட்டு சீக்கிரம் கார் வாங்குங்க சேர் என்று அடிக்கடி சொல்வார். ஒருநாள் ஸ்கூட்டர் பழுதாக, மனைவியை போராடி சம்மதிக்க வைத்து ஒரு கார் வாங்கினார். டிரைவர், டீசல், பராமரிப்பு செலவு, மாத வருமானத்தில் துண்டு, மனைவியுடன் மனக்கசப்பு, பொருளாதார சிக்கல், பேராசிரியருக்கு காரை விற்கவும் மனமில்லை, வருவாயை உயர்த்தவும் முடியவில்லை. மனைவியின் மனக்கசப்பு வார்த்தைகளையும் தாங்க முடியவில்லை. அவர் என்ன செய்வார்? பாவம், கடன் மட்டுமே மிச்சம். நிம்மதி இல்லை.

ஆடம்பரமாக இருக்கவேண்டும், பொருட்களை வாங்கி குவிக்க வேண்டும் என்ற ஆசை அதிகமாக, அதிகமாக அதைச் சந்திக்கும் சக்தி இல்லாமல் மக்கள் மனம் அதிகம் தாக்கப்படுகிறது. இதனால் மக்கள் மனச் சக்தியை இழக்கின்றனர். மேலும் பல உடல் நோய்களுக்கும் ஆளாகின்றனர். ஒன்றை வாங்குமுன், இப்பொருள் இப்போது தேவைதானா? என்று நன்கு சிந்திப்பது நல்லது. பிறர் சொல்கிறார் என்று வாங்கினால் கஷ்டம் நமக்குத்தான்.

## 4. நிறைமனம் – சுதந்திர மனம்

நிறைமனத்தில் நாம் விரும்பியதை எல்லாம் எப்படியாவது அடைய வேண்டும் என்ற பிடிவாத குணம் இருக்காது. சிறு குழந்தைதான் எல்லாவற்றிற்கும் அடம்பிடிக்கும். விரும்பியதையெல்லாம், பார்ப்பதையெல்லாம் கேட்கும். தான் கேட்பது நல்லதா? சிறந்ததா? தேவையானதா? என சிந்திக்க தெரியாது. உதாரணமாக இளைஞன் ஒருவன் தன் நண்பன் வைத்திருக்கும் பைக் போன்று வாங்க வேண்டும். இளம் பெண் ஒருவர் பக்கத்து வீட்டு தோழி போட்டிருக்கும் விலை உயர்ந்த கம்மலைப் போல வேண்டும் என கேட்கிறார்கள். அவர்களுடைய பெற்றோரோ கூலித்தொழிலாளிகள். அவர்களால் தன் மகனின் - மகளின் விருப்பத்தை எப்படி நிறைவேற்ற முடியும்? அந்த இளைஞனும், இளம் பெண்ணும் தம்முடைய பெற்றோரின் வருமானம், பொருளாதார நிலையை உணர்ந்தார்களா என்பது கேள்விக்குறியே.




பல நேரங்களில் நமது வாழ்வு பிறரால் (இன்றைய கவர்ச்சி விளம்பரங்கள்) தள்ளிக்கொண்டு போகப்படுகிறது அல்லது இழுத்துக்கொண்டு போகப்படுகின்றது. நமக்கென்று ஒரு பிடிப்பு இல்லையென்றால் நமது விருப்பமில்லாமலே அவர்கள் நம்மை இழுத்துக்கொண்டு போக விட்டுவிடுவோம்.

## 5. போதும் என்பதே நிறைமனம்

வயிறு நிறைந்தால் போதும் என்று சொல்வதுபோல மனம் நிறைந்தால் போதும்.. என்று சொல்ல வேண்டும். போதும் என்பது ஒரு மனப்பான்மை. இன்றைய வாழ்வை அதன் இன்ப துன்பங்களுடன், ஏற்றத்தாழ்வுகளுடன், குறை நிறைகளுடன் ஏற்றுக்கொள்வதாகும். இன்றுள்ளது இன்றைக்குப் போதும்.

**பொருளாசையை விலக்கி வாழுங்கள் உள்ளதே போதும் என்றிருங்கள் (எபி. 13:5)**

***

**எந்நிலையிலும் மனநிறைவோடு இருக்க கற்றுக்கொள்வோம்.**

# அறிந்து கொள்ளுங்கள்

## விவிலிய நாணயம்



மத்தேயு நற்செய்தி, அதிகாரம் 17:24 முதல் 27 வரையான இறைவார்த்தைகளில் வரி கட்டும் நாணயம் பற்றிய ஒரு குறிப்பு உள்ளது. இந்த நாணயத்தின் பெயர் திராக்மா. இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் வெள்ளி நாணயம், லூக்கா 15:8ல் குறிப்பிடப்பட்டிருக்கும் நாணயத்தை விட இரண்டு மடங்கு மதிப்புள்ளது என்றும் ஒரு குறிப்பு உள்ளது. மேலும், மத்தேயு நற்செய்தி 17:24-27ல், ஸ்தாத்தேர் நாணயம் பற்றிய குறிப்பும் உள்ளது.



இந்த நாணயத்தின் ஒருபுறம் அகுஸ்துஸ் சீசருடைய உருவப்படமும், கிரேக்க மொழியில் KAISAROS SEBASTOU என்ற வார்த்தைகளும் பொறிக்கப்பட்டிருக்கும். மறுபுறம், அந்தியோக்கு நகரை பிரதிபலிக்கும் விதமாக, ஒரு பெண் அரியனையில் அமர்ந்திருக்கும் உருவமும் ANTX என்ற வார்த்தைகளும் பொறிக்கப்பட்டிருக்கும்.

## தோளில் சுமந்து செல்லப்படும் குழந்தை



கிழக்கத்திய நாடுகளில் பெண்கள் தங்கள் குழந்தைகளை சிறுவயது முதலே தோளிலும் மார்பிலும் சுமந்து சென்றார்கள். இதை, எசாயா இறைவாக்கினர் நூலில் நாம் காணலாம். புறவினத்தாரிடம் அடிமைகளாக இருந்த யூதர்கள் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பும் போது, அவர்கள் எப்படி வருவார்கள் என்பதை எசாயா நூல் இவ்விதம் சொல்கிறது.

*“வேற்றினத்தாருக்கு எதிராக என் கையை உயர்த்துவேன். மக்களினங்களை நோக்கி என் அடையாளக் கொடியை ஏற்றுவேன். அவர்கள் உன் புதல்வரை மார்பில் ஏந்திக் கொண்டு வருவர். உன் புதல்வியரைத் தம் தோள்மேல் வைத்து தூக்கி வருவர்” (எசா. 49:22).*

## காட்டு மான்



விவிலியத்தில் கூறப்பட்டுள்ள இவ்வகை மான்கள் பாலஸ்தீன பகுதிகளில் தற்போதுள்ளன. இந்த வகை மான்கள் வேகமாக ஓடுவதில் சிறப்பு பெற்றவை. 2சாமுவேல் 2:18ல் அசாவேல் காட்டு மான் போல் வேகமாக ஓடக் கூடியவன் என்று வருணிக்கப்பட்டுள்ளான். மேலும் 1குறிப்பேடு 12:8, இனிமைமிகு பாடல்கள் 2:17 ஆகியவற்றிலும் இந்த மான்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. எசாயா 13:14ல் துரத்தப்பட்ட புள்ளிமான் போலவும், ஒன்று சேர்ப்பார் இன்றி, சிதறுண்ட ஆடுகளைப்போலவும், எல்லாரும் தம் மக்களிடம் திரும்பிச் செல்வர் என்று கூறப்பட்டுள்ளது. இனிமைமிகு பாடல்கள் 2:7, மற்றும் 4:5ல், கலைமான்கள், அழகான வசீகரத்துக்கும் தெய்வீகத்திற்கும் சான்றாக கூறப்பட்டுள்ளன.

1குறிப்பேடு 8:9ல், சிபியா என்று ஆணுக்கும் 2அரசர்கள் 12:1ல், சிபியா என்ற ஒரு பெண்ணுக்கும் திருத்தூதர் பணிகள் 9:36ல் தொற்கா என்று ஒரு பெண்ணுக்கும் ‘மான்’ என்று பொருள்படும் விதத்தில் பெயரிடப்பட்டிருந்தது. இணைச்சட்டம், 14:5இல் இந்த மான்களின் மாமிசம் உண்ணத்தக்கது என்றும் 1அரசர்கள் 4:23ல் இவை இறைச்சிக்காக வேட்டையாடப்பட்டன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இணைச்சட்டம் 12:15ன் மூலம் இவற்றின் மாமிசம் உண்பதற்கு மட்டுமே பயன்பட்டதாகவும், வழிபாடுகளில் பயன்படுத்தப்படவில்லை என்றும் தெரிய வருகிறது.




# அருள்பணியாளர், துறவியருக்கு திருத்தந்தையின் உரை



## பின்லாந்து லூத்தரன் சபை பிரதிநிதிகளுடன் திருத்தந்தை



லூத்தரன் சபையினரும், கத்தோலிக்கரும் சீர்திருத்த இயக்கத்தின் நூற்றாண்டினை கடந்த ஆண்டு கொண்டாடியதை, கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தின் இறுதியில் நினைவுகூர்ந்து மகிழ்கிறேன் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன்னைச் சந்திக்க வந்திருந்த லூத்தரன் சபை பிரதிநிதிகளிடம் கூறினார்.

தை 25, வியாழனன்று, கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தின் நிறைவை சிறப்பிக்கும் வகையில், பின்லாந்திலிருந்து வத்திக்கானுக்கு வருகை தந்துள்ள லூத்தரன் சபை பிரதிநிதிகளை, திருப்பீடத்தில் சந்தித்த திருத்தந்தை, பின்லாந்தின் பாதுகாவலர் புனித ஹென்றிக் அவர்களின் திருநாளையொட்டி வருகை தந்திருக்கும் இப்பிரதிநிதிகளுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அண்மைய ஆண்டுகளில், லூத்தரன் சபையினரும், கத்தோலிக்கரும் இணைந்து மேற்கொள்ளும் கிறிஸ்தவ ஒன்றிப்பு வழிபாடுகளில், கடந்த கால மோதல்களும், விவாதங்களும் இல்லாமல், ஒற்றுமை நிலவுவது மனநிறைவைத் தருகிறது என்று திருத்தந்தை கூறினார்.

இறை நம்பிக்கை குறைந்து வரும் இன்றைய காலத்தில், கத்தோலிக்கரும், லூத்தரன் சபையினரும் இணைந்து, வாழும் கடவுளுக்கு சாட்சிகளாக வாழ்வதே, கிறிஸ்தவ ஒன்றிப்பின் மிக முக்கிய பணி என்று தன் உரையில் குறிப்பிட்டார் திருத்தந்தை.

ஒன்றிப்பு, அமைதி, காயங்களைக் குணமாக்குதல் ஆகிய பணிகளை ஆற்ற, கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் இறைவன் வரமருள, பணிவான மனதுடன் அவரிடம் நாம் செபிப்போம் என்று, திருத்தந்தை தன் உரையின் இறுதியில் வேண்டுகோள் விடுத்தார்.

அன்பு சகோதரர்களே, சகோதரிகளே, நாம் கூடியிருக்கும் இந்த குருத்துவ மடம், எண்ணற்ற மறைப்பணியாளர்களை உருவாக்கிய ஒரு தொட்டில். இலத்தீன் அமெரிக்க ஆயர்களின் பாதுகாவலரான, மோக்ரோவெஹோவின் புனித துரிபியுஸ் அவர்களை (Saint Turibius of Mogrovejo) என்னால் மறக்க இயலாது. இவர்கள் அனைவரும் நமது வரலாற்று வேர்களைப் பார்ப்பதற்கு நம்மை அழைக்கின்றனர்.

நமது நம்பிக்கை, இறையழைத்தல் ஆகியவற்றின் ஒரு முக்கிய அம்சம் நினைவுக்கூர்வது. நினைவுகூர்வதன் ஒரு சில புண்ணியங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

### 1.மகிழ்வு நிறைந்த தன்னிலை உணர்வு.

சீடர்கள் இயேசுவைச் சந்தித்த நிகழ்வை, இப்போது நற்செய்தியாக வாசித்தோம். இப்பகுதியில், சிறிது பின்னோக்கிச் சென்றால், அங்கு திருமுழுக்கு யோவானைக் காண்கிறோம். "இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி!" (யோவான் 1:35 என்று இயேசுவைச் சுட்டிக்காட்டினார், யோவான்."மனிதராய்ப் பிறந்தவர்களுள் திருமுழுக்கு யோவானைவிடப் பெரியவர் எவரும் தோன்றியதில்லை" (மத்தேயு 11:11) என்று இயேசுவால் விவரிக்கப்பட்ட யோவான், தான் "மெசியா" அல்ல என்ற தெளிவான தன்னிலை உணர்வு கொண்டிருந்தார்.

அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வைத் தேர்ந்துள்ள நாம், நமது கணக்கற்ற வேலைகளால் ஆண்டவரின் இடத்தை நிரப்புவதற்காக அழைக்கப்படவில்லை. நாம் "மெசியாக்கள்" அல்ல என்பதை உணர்வது நல்லது. நாம் யார் என்பதை தெளிவாக உணர்ந்தால், நாம் முக்கியமானவர்கள் என்று நினைக்கத் தூண்டும் சோதனைகளிலிருந்து விடுதலை பெறமுடியும்.

நமது குறைபாடுகளை உணர்ந்து சிரித்துக்கொள்வதன் வழியாகவும், இந்தச் சோதனையை நம்மால் வெல்லமுடியும். நமது குழுமங்களில் ஒருவர் மற்றவரைக் குறித்தோ, நம் குழுமத்தைக் குறித்தோ சிரிப்பதற்குப் பதில், நம்மைக் குறித்து சிரித்துக்கொள்வோம். குழுமங்களில் மற்றவரோடு இணைந்து சிரிக்கப் பழகிக்கொள்வோம்.

### 2.அழைக்கப்பட்ட நேரம்

"அப்போது ஏறக்குறைய மாலை நான்கு மணி" (யோவான் 1:39) என்று நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுவைச் சந்திக்கும் நேரம், நம் வாழ்வை மாற்றுகிறது. அந்த நாளை, நேரத்தை நினைவில் கொள்வது மிகவும் நல்லது. இந்த நினைவை இழப்பது, நம் வேர்களை இழப்பதற்குச் சமம்.

நாம் இயேசுவைச் சந்தித்த நேரம், மிக உயர்வான, உன்னதமான நேரமாக இல்லாமல் போகலாம். நாம் தலை சிறந்தவர்கள் என்பதால், இயேசு நம்மை அழைக்கவில்லை அவரது அன்பு மிகுதியால் நம்மை அழைத்தார். (காண்க. இணைச்சட்டம் 7:7-8)

இங்கு, மற்றுமோர் அம்சத்தை வலியுறுத்திக் கூற விழைகிறேன். நாம் குருத்துவ பயிற்சியில், துறவு இல்லங்களில் இணைந்தபோது, நமது குடும்பம், நாம் வளர்ந்த பகுதி இவற்றில் நிலவிய பக்தி, நம்மை உருவாக்கியிருந்தது. நீங்கள் வாழ்ந்த பகுதியில் இருந்த திருத்தலத்தின் சுவர்களும் மக்களின் பத்தியை பறைசாற்றும். இந்த எளிமையான பக்தி உணர்வு கொண்ட மக்களை மறந்துவிட்டு, "தூய்மையின் அறிஞர்களாக" மாறிவிடாதீர்கள். செபிக்கக் கற்றுத்தந்தவர்களை, மறப்பதோ, மதிக்கத் தவறுவதோ வேண்டாம்.

இத்தகைய நினைவுகூர்தல், நம்மை மகிழ்விலும், நன்றியிலும் நிறைக்கும். நன்றியுணர்வு அற்ற இறைப்பணியாளர்களை மக்களால் எளிதில் அடையாளம் கண்டுகொள்ளமுடியும். நன்றியும், மகிழ்வும் நிறைந்த இறைப்பணியாளரே, தங்கள் காயங்களைக் குணமாக்கமுடியும் என்பதை, மக்கள் உணர்ந்துள்ளனர்.

### 3.தொற்றிப்படரும் மகிழ்வு

இயேசுவை அன்று சந்தித்தவர்களில் ஒருவரான அந்திரேயா, பேதுருவிடம் சென்று, "மெசியாவைக் கண்டோம்" (யோவான் 1:41) என்று கூறினார். இயேசுவின்மீது கொள்ளும் நம்பிக்கை, தொற்றிப்படரும் தன்மை கொண்டது. அந்திரேயா, தான் பெற்ற மகிழ்வை, பகிர்ந்துகொள்ளும் மறைப்பணியை, தனக்கு மிக நெருக்கமானவர்களுடன் தொடங்கினார். திருத்தூதர்களிடம் உறுதியாக விளங்கிய ஒரு பண்பு, மகிழ்வு.

துண்டுப்பட்டிருக்கும் இன்றைய உலகம், மற்றவர்களிடமிருந்து விலகி, நமக்குள் நாமே மகிழ்வைக் கண்டுகொள்ளும்படி நம்மைத் தூண்டுகிறது. துண்டுப்பட்டிருப்பதும், மற்றவர்களிடமிருந்து விலகியிருப்பதும் வெளி உலகில் மட்டும் காணப்படும் குறைகள் அல்ல. அவை, துறவு இல்லங்களிலும் தீமைகளை விளைவிக்கின்றன.

ஒன்றிப்பை உருவாக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம். ஒன்றிப்பு என்றால், அனைவரும் ஒரே சீரான, ஒரே மாதிரியான சிந்தனை கொண்டிருப்பது அல்ல. இறைவன் வழங்கும் அருங்கொடைகள் பலவகை. ஒவ்வொருவரின் தனித்துவத்தை, அவர்களது கொடைகளை உணர்ந்து ஏற்றுக்கொள்வதே, ஒன்றித்த குழுமத்தை உருவாக்க சிறந்த வழி.

நமது நினைவுகூர்தல், நம்மை, மகிழ்வாலும் நன்றியாலும் நிறைக்கட்டும்! ஒன்றிப்பின் ஊழியர்களாக நம்மை உருவாக்கட்டும்! ஆண்டவரும், அன்னை மரியாவும் உங்களைப் பாதுகாப்பார்களாக! எனக்காக செபிக்க மறவாதீர்கள்!

# 52வது சமூகத் தொடர்பு உலக நாள்

## திருத்தந்தையின் செய்தி




இறைவன் நமக்காக வகுத்துள்ள திட்டத்தின் ஒரு பகுதி, சமூகத் தொடர்பு என்றும், நாம் உடன்பிறந்தோர் என்ற உணர்வைப் பெறுவதற்கு மிக அடிப்படையான வழி, தொடர்புகள் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புதனன்று வெளியிட்டுள்ள ஒரு செய்தியில் கூறியுள்ளார்.

இவ்வாண்டு சிறப்பிக்கப்படும் 52வது சமூகத் தொடர்பு உலக நாளுக்கென தை 24, புதனன்று திருத்தந்தை வெளியிட்டுள்ள செய்தி, "உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" (யோவான் 8:32) என்ற தலைப்பையும், "பொய் செய்திகளும், அமைதிக்காக இதழியலும்" என்ற உபதலைப்பையும் கொண்டுள்ளது.

மிகத் துரிதமாக மாறிவரும் சமூகத் தொடர்புகளும், டிஜிட்டல் தொழில்நுட்பங்களும் "பொய்யான செய்திகளை"ப் பரப்பிவருவதைக் காண்கிறோம் என்று இச்செய்தியின் தொடக்கத்தில் கவலையை வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "பொய் செய்திகள்" என்பதைக் குறித்து நான்கு பகுதிகளில் தன் சிந்தனைகளைப் பகிர்ந்துள்ளார்.

1. "பொய் செய்திகளில்" உள்ள "பொய்மை" என்ன?
2. "பொய் செய்திகளை "எவ்விதம் அடையாளப்படுத்துவது?
3. "உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" (யோவான் 8:32)
4. அமைதியே உண்மையான செய்தி என்ற நான்கு பிரிவுகளிலே திருத்தந்தை தன் கருத்துக்களைத் தொகுத்து வழங்கியுள்ளார்.

உண்மைச் செய்திகளைப் போலவே வேடமிட்டு வரும் பொய் செய்திகள், மக்களுக்குப் பழக்கமான முற்சார்பு எண்ணங்களைச் சுமந்து வருவதால், அவை மக்களால் விரும்பி ஏற்கப்படுகிறது என்றும், அதிகாரப்பூர்வமான மறுப்புக்கள் சொல்லப்பட்டாலும், பொய்யான செய்திகள், மக்களிடையே விரைவில் ஊடுருவிச் செல்கின்றன என்றும் திருத்தந்தை தன் கவலையை வெளியிட்டுள்ளார்.

சமுதாயத்தில், புழக்கத்தில் இருக்கும் டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்தி, இத்தகைய செய்திகளை எவ்வித தயக்கமும் இன்றி, மக்கள் பரப்பி வருவதால், பொய்யான செய்திகளின் வேடம் கலைக்கப்படுவதில்லை என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

பொய் செய்திகளின் வேடத்தைக் கலைப்பது எளிதான செயல் அல்ல என்றாலும், பல கல்விக் கூடங்கள், அத்தகையப் பணியைச் செய்து வருகின்றன என்று தன் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை, உண்மையை உள்ளங்களில் பதிக்கும் கல்வியில் இன்னும் அதிகமான கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று விண்ணப்பித்துள்ளார்.

உண்மை என்பது ஒருவர் தன் வாழ்வில் தொடர்ந்து தேடி வரும் விடயம் என்பதை, தன் செய்தியில் வலியுறுத்தும் திருத்தந்தை, பொய் எப்போதும், பிளவுகளையும் மோதல்களையும் உருவாக்கி, மக்களைப் பிரிக்கும் என்றும், உண்மை, மக்களை ஒருங்கிணைக்கும் என்றும் தெளிவுபடுத்தியுள்ளார்.

பொய்மையை முறியடிக்க வெறும் செயல் திட்டங்கள் மட்டும் போதாது, மாறாக, உண்மையை நோக்கி மக்களை ஒன்றிணைக்க வேண்டும் என்று கூறியுள்ள திருத்தந்தை, சமூகத் தொடர்புகள், இந்த உண்மையில், மக்களை இணைக்கும் பணியைச் செய்யவேண்டும் என்று கூறியுள்ளார்.

இலாபம் ஈட்டும் நோக்கத்துடன், வெறுப்பையும், வன்முறையையும் வளர்க்கும் சொல்லாடலைப் பயன்படுத்தும் இதழியலுக்கு ஒரு மாற்றாக, உண்மையை, அன்பை பறைசாற்றும் இதழியலை வளர்ப்பது கிறிஸ்தவ சமூகத் தொடர்புக் கலையின் இலக்கணம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் தன் செய்தியில் வலியுறுத்தியுள்ளார்.

அமைதியின் கருவியாய் என்னை மாற்றும் என்று அசிசி நகர் புனித பிரான்சிஸ் உருவாக்கிய செபத்தைத் தழுவி, "எங்கே கத்துதல் உள்ளதோ, அங்கு கேட்கும் பழக்கத்தை வளர்ப்போம் எங்கே குழப்பம் நிலவுகிறதோ, அங்கே, நல்லிணக்கத்தை உருவாக்குவோம்" என்ற வார்த்தைகளில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 52வது சமூகத் தொடர்பு உலக நாளுக்கென வெளியிட்டுள்ள செய்தியின் இறுதியில், ஒரு செபத்தை வடிவமைத்துள்ளார்.




தொகுப்பு : ஓய்வு பெற்ற பேராயர்
அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை
கொழும்பு உயர் மறைமாவட்டம்



கத்தோலிக்க குடும்ப மறைக்கல்வி
Catholic Family Catechism

**67. இயேசுக்கிறிஸ்து இறைவன் என்று நமக்கு எப்படி தெரியும்?**

இயேசுக்கிறிஸ்து இறைவன் என்று தந்தையாகிய இறைவன் தாமே நமக்கு அதை வெளிப்படுத்தியுள்ளார். மேலும் இயேசு தாமே தாம் இறைவன் என்பதை வெளிப்படுத்தியதுமல்லாமல், பல அருங்குறிகளினால் அதை மெய்யென நிரூபித்துள்ளார். அவரது மிகப்பெரிய அருங்குறியாக விளங்குவது அவரது உயிர்ப்பு.

மீட்பரின் பிறப்புப் பற்றி முன்னுரைத்த இறைவாக்கினரது சாட்சியமும் இயேசு இறைவன்தான் என்பதற்கு சான்றாக அமைகின்றது. இறைவாக்கினர் முன்னறிவித்தது இயேசுக் கிறிஸ்துவில் நிறைவேறிற்று. இயேசு ஆற்றிய அருங்குறிகள் விவிலியத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. கன்னி மரியாயின் வேண்டுதலுக்கு இணங்கவே, அவர் தமது முதலாவது அருங்குறிதனை நிறைவேற்றினார். அதை தொடர்ந்து, குருடருக்கு பார்வை கொடுத்தல், தொழுநோயாளரை குணமாக்கல், முடவரை நடக்கச் செய்தல், இறந்தோரை உயிர்ப்பித்தல் போன்ற பலவிதமான அருங்குறிகளைச் செய்தார். இறுதியாக அவரை ஏற்றுக்கொள்ள மறுத்த யூதர்களால் சாவுக்கு உள்ளாகி, மீண்டும் உயிர் பெற்று எழுந்தார்.

இறந்த பின்பு உயிரோடு எழுந்த ஒரே ஆள் இயேசுக்கிறிஸ்து மட்டுமே. இது எதை எண்பிக்கிறதென்றால், அவரிடம் தெய்வீக வல்லமையையும், நமது பாவத்துக்கான மீட்புப் பரிசாக, அவர் தம் வாழ்வையே அர்ப்பணித்த தியாகச் செயலை அவரது விண்ணக தந்தை ஏற்றுக் கொண்டார் என்பதையுமாகும்.

"இயேசு திருமுழுக்குப் பெற்றவுடனே தண்ணீரை விட்டு வெளியேறினார். உடனே வானம் திறந்ததையும் கடவுளின் ஆவி, புறா இறங்குவது போலத் தம்மீது வருவதையும் அவர் கண்டார். அப்பொழுது, 'என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்' என்று வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது" (மத். 3:16-17).

**68. நம்மை மீட்பதற்காக இயேசுக்கிறிஸ்து என்ன செய்தார்?**

நம்மை மீட்பதற்காக இயேசுக்கிறிஸ்து பாடுகள் பல பட்டு, சிலுவையில் இறந்து தமது வாழ்வை / உயிரை தந்தையிடம் ஒப்புக்கொடுத்தார்.

மீட்பு அல்லது இரட்சிப்பு என்பது, இயேசுக்கிறிஸ்து தமது பாடுகள் மரணத்தால் நமது பாவத்துக்கு பரிகாரமாக தம்மை தந்தைக்கு அர்ப்பணித்ததை குறிக்கும். அதாவது நமது பாவத்துக்காக, இயேசுக்கிறிஸ்து தமது உயிரை / வாழ்வை துறந்தார் என்பதாகும்.

இயேசு, உண்மைக்காகவும், நீதிக்காகவும் பல துன்பங்களை அனுபவித்து இறுதியாக சிலுவையில் தம் வாழ்வை ஈந்தார். ஆனால் இறப்பிலிருந்து உயிர்த்து, துன்பம் தற்காலிகமானது என்பதை நிரூபித்தார்.

ஆதாமின், கீழ்ப்படியாமையினால் உலகம் சாத்தானுக்கு அடிமையாகியது. ஆனால் இயேசுவின் கீழ்ப்படிவினால் பாவத்தின் அடிமைத்தளையிலிருந்து நம்மை மீட்டார். ஏவாளின் தூண்டுதலால் ஆதாம், உலகை சாத்தானுக்கு அடிமையாக்கினார். ஆனால், புனித கன்னி மரியாளின் ஒத்துழைப்பால் ஆதாமின் சந்ததி விடுவிக்கப்பட்டது. ஆகவேதான் கத்தோலிக்கர் மரியாளை கௌரவிக்கின்றார்கள்.

"ஒரு காலத்தில் தொலைவில் இருந்த நீங்கள் இப்பொழுது இயேசு கிறிஸ்துவோடு இணைந்து, அவரது இரத்தத்தின்மூலம் அருகில் கொண்டு வரப்பட்டிருக்கிறீர்கள். ஏனெனில் அவரே நமக்கு அமைதி அருள்பவர். அவரே இரண்டு இனத்தவரையும் பிரித்து நின்ற பகைமை என்னும் சுவரை, தமது உடலில் ஏற்ற துன்பத்தின் வழியாய்த் தகர்த்தெறிந்து, அவர்களை ஒன்றுபடுத்தினார். பல கட்டளைகளையும் விதிகளையும் கொண்ட யூதச் சட்டத்தை அழித்தார். இரு இனத்தவரையும் தம்மோடு இணைந்திருக்கும் புதியதொரு மனித இனமாகப் படைத்து அமைதி ஏற்படுத்தவே இவ்வாறு செய்தார். தாமே துன்புற்றுப் பகைமையை அழித்தார். சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஒருடலாக்கிக் கடவுளோடு ஒப்புரவாக்க இப்படிச் செய்தார்" (எபே. 2:13-16)

"கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர் தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக 'இயேசு கிறிஸ்து ஆண்டவர்' என எல்லா நாவுமே அறிக்கையிடும்" (பிலிப். 2:6:11).

**69. இயேசுவின் பாடுகளும், மரணமும் நமக்கு கற்றுத்தருவது என்ன?**

அவரது பாடுகளும், மரணமும் இறைவன் நம்மேல் கொண்டுள்ள அளவு கடந்த அன்பையும், பாவத்தின் மட்டில் அவரின் வெறுப்பையும் நமக்கு கற்றுத்தருகிறது.

இறைவன் உலகை அதிகமாக அன்பு செய்தமையால், தமது ஒரே மகனை இவ்வுலகிற்கு அனுப்பி அதனை மீட்டார். மகன் உலகை மிகவும் அன்பு செய்தார். அவர் மனித கோலம் பூண்டு இவ்வுலகிற்கு வந்து, மக்களுக்காக தமது வாழ்வை அர்ப்பணித்தார்.

இவையனைத்தும் இறைவன் நம்மை எவ்வளவுக்கு அன்பு செய்கிறார் என்பதையும், எவ்வளவுக்கு பாவத்தை வெறுக்கிறார் என்பதையும் காட்டுகிறது.

ஒரு துளி இரத்தத்தால் இறைவன் உலகை மீட்டிருக்கலாம். ஆனால் அவர் தமது அன்பின் பெருக்கு எவ்வளவு என்பதை நமக்குக் காட்ட ஆசித்தார். அதே வேளை பாவத்தின் கொடூரம் எப்பேர்ப்பட்டதென்பதையும், ஆகவே அதற்கான பரிகாரத்தின் அவசியத்தையும் நமக்கு உணர்த்த விரும்பினார். திருமுழுக்கின் வழியாக நாம் அவரது சீடர்களாக மட்டுமன்று அவர் பெற்றுத் தந்த மீட்பின் பங்காளிகளாகவும் இருக்கிறோம். அன்றிலிருந்து நாம் செய்யும் பாவப்பரிகாரச் செயல்கள் கூட அவர் வழியாக, அவரோடு, அவரில் ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

மிகப் பெரிய பரிகாரச் செயலாக திருப்பலி இடம்பெறுகிறது.

"தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவா. 15:13)

பாடங்கள் தொடரும்...

# புனித லூர்து அன்னை

## மாசி 11



கி.பி 1858ஆம் ஆண்டு மாசி 11இல் தென் பிரான்ஸ் நாட்டில் பிரனீஸ் மலையடிவாரத்தில் லூர்து என்ற சிற்றூருக்கு அருகில் குன்றுகளுக்கிடையே முதன் முறையாகப் பெர்னதெத் சுபீரு என்ற நாட்டுப்புறத்து 14 வயதுச் சிறுமிக்கு, விறகு சேகரிக்கச் சென்ற இடத்தில் கன்னிமாமரி காட்சியளிக்கின்றார். "இளமைத் தோற்றத்துடன் மரியா மிக அழகானவராகக் காணப்பட்டார்" என்று பெர்னதெத் குறிப்பிடுகின்றார். கையில் ஒரு செபமாலை இருந்ததையும் பார்க்கிறார். பெர்னதெத்திற்கு வாழ்த்துக்கூறி, தம்முடன் செபிக்க அழைக்கின்றார் கன்னிமரி.

மாசி 25ல் மீண்டும் காட்சியளித்து மரியன்னை கூறுவார். "அங்கே தெரிகின்ற அருவியில் போய் உன்னைக் கழுவிக் கொண்டு, நீர் பருகு" அருவியை நோக்கிப் போகும்போது, "அங்கு அல்ல" என்று சொல்லி மரியா குகையின் தரைப் பகுதியைச் சுட்டிக் காட்டினார். "நான் அங்கே போனேன். கை வைத்துப் பார்த்தால், தூசி படிந்த தண்ணீர் கொஞ்சம் காணப்பட்டது. குடிப்பதற்கான அளவு இல்லை. கொஞ்சம் சுரண்டிப் பார்த்தால் தண்ணீர் கொஞ்சம் கூடுதலாக வந்தது. ஆனால் மண் கலந்து இருந்தது. மூன்று முறை அதைக் கையினால் அள்ளி அகற்றிவிட்டு அடுத்தமுறை பருகினேன். அருகில் இருந்தவர்கள் ஏளனம் செய்தனர். காரணம் பருகிய வேளையில் முகமெல்லாம் மண் படிந்து இருந்தது. ஆனால் மாலைப் பொழுதுக்குள் தண்ணீர் பீறிட்டுவரத் தொடங்கியது" என்று குறிப்பிடுகிறார். ஒரு வாரத்திற்குள் அந்த நீரூற்றினின்று இன்றுவரை ஓடிவரும் தண்ணீர் நாள்தோறும் 32,000 காலன் ஆகும்.

1858 பங்குனி 25ம் நாள் மங்கள வார்த்தைத் திருநாள். மரியன்னை மீண்டும் அவ்விடத்தில் காட்சி தருகின்றார். இந்த முறை அந்தத் தாயின் பெயரைக் கேட்கிறார் சிறுமி பெர்னதெத். "நாமே அமல உற்பவி" என்ற விடை கிடைக்கிறது. நான்கு ஆண்டுகளுக்கு முன்னர்தான் திருத்தந்தை 9ஆம் பத்திநாதர் "தேவ அன்னை அமல உற்பவி. பாவ மாசு எதுவுமின்றி உற்பவித்தவர்" என்பது விசுவாசப் பிரமாணம் என்று அறுதியிட்டுக் கூறியிருந்தார். கடைசியாக பதினெட்டாவது முறையாக கார்மேல் மலைக் கன்னியின் திருநாளன்று மரியன்னை பெர்னதெத்துக்கு காட்சியளித்தார். காட்சிகளிலெல்லாம் பாவிகளுக்காக மன்றாடப் பணிக்கின்றார். செபத்துடன் தவமுயற்சிகள் இன்றியமையாதவை என்று குறிப்பிடுகின்றார். அந்த இடத்தில் பவனி வரவேண்டும். ஆலயம் எழுப்பப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். கூட்டம் கூடிவிட்ட நிலையிலும் பரவசமாகி விட்ட பெர்னதெத் மட்டுமே மரியின் உருவத்தைப் பார்க்க முடிந்தது.

உலகின் எத்திசையிலிருந்தும் இன்று ஆண்டுதோறும் எண்ணற்ற திருப்பயணிகள் அங்கு செல்கின்றனர். ஆயிரக் கணக்கான புதுமைகள் நடைபெறுகின்றன. பல தரப்பட்ட கொடிய நோய்கள் நீங்குகின்றன. மருத்துவர்களால் முற்றிலும் கைவிடப்பட்டவர்களுக்கு அவர்கள் கண்முன்னே குணம் கிடைத்துள்ளது. பாவிகள் பலர் மனந்திரும்புகின்றனர் என்பதுதான் சிறப்பு. "உனக்கு நான் காட்சி கொடுத்ததினால், நீ இவ்வுலகில் துன்பம் இல்லாமல் வாழ்வாய் என்று நான் கூறமாட்டேன். மாறாக, உனக்குக் கலப்பில்லா மகிழ்ச்சி நிறைந்த வாழ்வு மறுஉலகில் தான்" என்று லூர்து அன்னை பெர்னதெத்துக்குக் கூறியிருந்தபடி அவர் பல வேதனைகளை அனுபவித்த பிறகு இறைவனடி சென்றார்.

12.02.99 "இந்து" ஆங்கில நாளிதழில் கீழ்க்கண்ட புதுமை சொல்லப்படுகிறது. கொடிய நோயின் பின் விளைவாக முடக்கு வாதத்தில் விடப்பட்ட ஒரு நோயாளி லூர்து நகரின் புனிதத் தலத்திற்குக் கொண்டு வரப்பட்டார். 51 வயதான இவர் முற்றிலும் முடமாகி நடக்க இயலாதிருந்தவர். இங்கு புனித அருவிக்கு அருகில் கொண்டு வரப்பட்ட சில மணி நேரத்திற்குள், தாராளமாக நடக்க ஆரம்பித்தார். இது 66வது புதுமையாக மருத்துவர்களால் ஐயந்திரிபற ஏற்றுக்கொள்ளப்பட்டது. சரியாக 12 ஆண்டுகளுக்கு முன் அதாவது 1987இல் இந்நிகழ்வு நடைபெற்றது. எனினும், திருச்சபை இது ஐயத்திற்கு இடமின்றி தெய்வச் செயல்தான், புதுமைதான் என்று புடமிட்டுச் சோதித்தறிந்தபின் ஏற்றுக்கொண்டது. 12 ஆண்டுகளுக்குப் பிறகே என்பது குறிப்பிடத்தக்கது.

## சிந்தனைக்கு

**"இறை நம்பிக்கை உள்ளவர்களுக்கு விளக்கம் தேவையற்றது. நம்பிக்கையற்றவர்களுக்கு விளக்கம் கொடுப்பது இயலாத ஒன்று"**

பெர்னதெத் என்பவரைப் போல் குழந்தை உள்ளம் கொண்டு தேவ தாயாரின் மேல் பற்றுதல் கொண்டு செபமாலையை உருக்கமாய் செபிக்கக் கற்றுக்கொள்வோம்.

# இயேவின் பாதை இறையரசு பாதை




**முன்னுரை:** மரங்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டன. இந்த மனிதர்கள் நம்மை வெட்டி, வெட்டி, எத்தனையோ சிலுவைகளை உருவாக்கி விட்டார்கள். ஆனால் இந்த மனிதர்களால் ஒரே ஒரு இயேசுவைக் கூட உருவாக்க முடியவில்லையே!

அன்பார்ந்தவர்களே! வருடா வருடம் சிலுவையையும், சிலுவையில் தொங்கும் இயேசுவையையும் பார்த்து, பாவப்பட்டு, பரிதாபப்பட்டு, அய்யோ பாவம் என்று அழுது புலம்புகிறோம். ஆனால் எப்போதாவது நம்முடைய பாவங்களுக்காக வருத்தப்பட்டு இருக்கிறோமா? இதோ இந்தச் சிலுவைப் பாதை நமக்காகவும், நம்முடைய பாவங்களுக்காகவும் வருத்தப்பட அழைப்புவிடுக்கிறது.

அன்று யாரோ சிலருக்கு மட்டும் தெரிய நடந்தேறியது, இன்று எல்லா இடங்களிலும் வெளிப்படுத்தப்படுகிறது. காரணம், அவர் நம்முடைய பிணிகளைத் தாங்கி கொண்டார். நம்முடைய நோய்களைத் தன் தோள் மீது சுமந்து கொண்டார்.

எனவே சிலுவை வழிதான் மீட்பு உண்டு என்று நம்புவோம். சிலுவையில் தொங்கிய இயேசுவை ஊருக்கும் உலகிற்கும் அறிவிப்போம்! இதோ விண்ணரசு நமக்காகக் காத்திருக்கிறது.

## முதல் நிலை

### கடவுளை மனிதன் தீர்ப்பிடுகிறான்

### இயேசு பிலாத்துவால் தீர்ப்பிடப்படுகிறார்

வினோதமான வழக்கு நடந்து, ஒரு விபரீதமான தீர்ப்பு வழங்கப்படுகிறது. சீடனின் உதவியோடு குருவைப் பிடிக்கிறார்கள். நல்லதே செய்த குருவைக் காட்டிக் கொடுக்க சீடனின் முத்தம் தேவைப்படுகிறது. வீரம் பேசியவர்கள் பயத்தில் மறுதலிக்கிறார்கள்.

அன்று கடவுளும் மனிதனுமான ஆயனைக் கொல்வதற்காக ஆடுகளிடம் சம்மதம் கேட்டார்கள். இன்று காசு கொடுத்தால் சாட்சி சொல்ல பொய் சொல்லுகிறவர்கள் பலர் இருக்கிறார்கள். பணம் கொடுத்தால் படையாக கிளம்பி, கூச்சலிட நிறைய பேர் இருக்கத்தான் செய்கிறார்கள். என்ன சொல்வது?

**செயல்பாடு :** “இதோ மனிதர்கள்! இதோ இறைவன்!”
இன்றைய சூழ்நிலையில் நீயும் நானும் யாரைத் தீர்ப்பிட்டுக் கொண்டிருக்கிறோம்?

**செபம் :** இயேசுவே! உண்மைக்கு சாட்சியம் கூறும் உமது பணியில் என்னையும் ஒரு கருவியாக்கியருளும், இயேசுவே உமது கருவியாக்கியருளும்.

## இரண்டாம் நிலை

### சுமை தாங்கி ஒன்றும் சொல்லாமல் பாரத்தை ஏற்றுக்கொள்கிறது

### இயேசு பாரச் சிலுவையை ஏற்றுக்கொள்கிறார்

சுமை தாங்கியின் வாழ்க்கையே ஒரு சுவாரசியமானது. ஒவ்வொரு சுமை தாங்கியும் சுமக்க தயாராக இருந்தால்தான் - அது மனிதர்களைப் பக்கத்தில் பார்க்க முடியும்.

ஒவ்வொரு சுமைதாங்கியும் சுமக்கின்ற போதுதான் அதன் வாழ்க்கைக்கு அர்த்தம் உள்ளது. இல்லையென்றால், அந்த இடத்திற்கு அதுவே சுமையாகிறது.

இதோ சிலுவை! இதோ இறைவன்!

கலப்பையில் கை வைத்தபின் திரும்பி பார்ப்பது சீடனுக்கு அழகல்ல என்பது விவிலிய வாக்கு. கட்டடத்தைக் கட்டிவிட காலெடுத்தப் பின்னும் விட்டுவிட்டுப் போகிறவன் உண்மைச் சீடன் அல்ல என்பது சமூக வாக்கு.

**செயல்பாடு :** இதோ சிலுவை! இதோ சுகம்!
இரண்டில் நீயும் நானும் அதிகமாய் எதை விரும்புகிறோம்?

**செபம் :** இயேசுவே! வாழ்வில் வரும் சிலுவைகளை ஏற்க வரம் தாரும். இயேசுவே வரம் தாரும்.

## மூன்றாம் நிலை

### வீழ்ந்தது சருகு, வளர்ந்தது மரம்.

### இயேசு முதல் முறை கீழே விழுகிறார்.

மழைத்துளி வீழ்கிறது, மண் வளமடைகிறது! அருவி வீழ்கிறது, ஆற்றுப்படுத்தும் ஆறாய் பாய்ந்தோடுகிறது. முதிர்ந்த இலை வீழ்கிறது, எழுச்சி காட்டும் இளந்தளிர் உருவாகிறது.

இயேசுவின் வீழ்ச்சியும் அவ்வாறே என்க!
ஒருபுறம் வீழ்ச்சி! மறுபுறம் எழுச்சி!

இயேசு விழுந்தது இருக்கட்டும். நாம் எந்தச் சிலுவையின் பாரத்தால் வீழ்ந்து கொண்டிருக்கிறோம்? ஏழ்மையாலா? வேலையின்மையாலா? கடனாலா? நோயினாலா? புரிந்து கொள்ளாத நட்பினாலா? அன்பில்லா உறவுகளாலா? விட முடியாத பழக்க வழக்கத்தினாலா?

**செயல்பாடு**: இதோ வீழ்ச்சி! இதோ எழுச்சி!
இரண்டில் நீயும் நானும் எதை அதிகம் விரும்புகிறோம். வீழ்வதையா? எழுவதையா?

**செபம்:** இயேசுவே நான் வீழ்கின்ற போதெல்லாம் உடனே, மீண்டும் நான் எழ வேண்டியவன் என்ற எண்ணத்தைத் தாரும்! இயேசுவே புதிய எண்ணத்தைத் தாரும்.

## நான்காம் நிலை

### தாய் தன் பிள்ளையை ஒருபோதும் மறப்பதில்லை.

### இயேசு தன் தாய் மரியாவைச் சந்திக்கிறார்.

சில சந்திப்புகள் சந்தோஷத்தைத் தருகின்றன. சில சந்திப்புகள் சந்தேகத்தைத் தருகின்றன. சில சந்திப்புக்கள் சங்கடத்தை உருவாக்குகின்றன. சில சந்திப்புகள் எச்சரிக்கை விடுக்கின்றன. சில சந்திப்புக்கள் அறிவை வளர்க்கின்றன. சில சந்திப்புக்கள் சினத்தை உருவாக்குகின்றன. ஆனால் ஒரு சில சந்திப்புகள் மட்டும்தான் நம்பிக்கையையும், தைரியத்தையும் தருகின்றன.

மரியாள் - இயேசுவின் சந்திப்பு இதற்கோர் அற்புதமான எடுத்துக்காட்டு. நம்பிக்கையாய் வந்த அன்னை மரியாள் “நட, நடந்து வெற்றிக்கனியைக் கொய்து வா” என தைரியமூட்டி, இயேசுவை அனுப்பிவைக்கிறார்.

**செயல்பாடு**: ஒருபுறம் நன்மை! மறுபுறம் தீமை!
ஒவ்வொரு நாளும் நீயும் நானும் பலரைச் சந்தித்து வருகிறோம். நம் சந்திப்பில் நிகழ்வது என்ன? நன்மையா? தீமையா?

**செபம்:** இயேசுவே! நான் சந்திக்கும் மனிதரிடமெல்லாம் மகிழ்ச்சியை உருவாக்க வரம் தாரும். இயேசுவே! வரம் தாரும்.

## ஐந்தாம் நிலை

### ஆலமரம் விழப் பார்த்தது - ஆனால் விழுதுகள் தாங்கிப்பிடித்தன.

### இயேசுவுக்கு சீரேனே ஊராகிய சீமோன் உதவி செய்கிறார்.

கட்டாயக் கல்வி, கட்டாயச் சட்டம், கட்டாய உண்ணாவிரதம், கட்டாய போராட்டம் - இப்படிப்பட்ட இன்றைய சூழலில், எல்லாமே கட்டாய மயமாக்கப் பட்டுள்ளன. சீமோனைக்கூட கட்டாயப்படுத்தித்தான் இயேசுவின் சிலுவையைச் சுமக்க வைத்திருக்கிறார்கள்.

இன்றைய சூழலில் எதையும் கட்டாயப் படுத்தினால் மட்டுமே செய்யக் கூடியவனாய் இருக்கிறான் மனிதன். எலிசபெத்திற்குத் தாமே முன் சென்று உதவி செய்தார் மரியன்னை. கட்டாயப்படுத்தப்பட்டதால் இயேசுவுக்கு உதவி செய்ய முன்வந்தார் சீமோன்.

**செயல்பாடு:** மனமுவந்து உதவிசெய்வதா? கட்டாயத்தின் பேரில் உதவுவதா? இதில் எதை நாம் அதிகம் கடைப்பிடிக்கிறோம்?

**செபம்:** இயேசுவே! பிறர் கேட்டும் முன் அவர்களின் தேவையறிந்து உதவி செய்யும் நல்ல பண்பைத் தாரும் இயேசுவே! நல்ல பண்பைத் தாரும்!

## ஆறாம் நிலை

### எல்லாம் முடிந்தது, ஓவியம் ஓவியனைப் பார்த்து சிரித்தது.

### இயேசுவின் முகத்தை வெரோணிக்காள் துடைக்கிறாள்.

குற்றவாளி என்று எல்லோராலும் சொல்லப்பட்டாலும், நிரபராதிதான் இயேசு என்று இந்த வெரோணிக்காளின் முகம் துடைப்பு நிகழ்ச்சி, சாட்சியம் சொல்லுகிறது.

இயேசுவிடமிருந்து ஆறுதலை, அடைக்கலத்தை, சுகத்தை, இன்பத்தை, இன்பமான வாழ்வைப் பெற்றுக் கொண்டவர்கள் அனேகர் இருந்தாலும் வெரோணிக்காளின் வீரச்செயல் ஒரு வித்தியாசமான இறைவாக்காகவே வெளிப்பட்டது.

**செயல்பாடு:** இதோ உண்மை! இதோ, பொய்மை!
இரண்டில் எதற்கு முகம் துடைக்கப் போகிறோம்?

**செபம்:** இயேசுவே! உண்மைக்கும் நீதிக்கும், முகம் துடைக்க, கனிவு காட்ட, அருள் தாரும்! இயேசுவே அருள் தாரும்.

## ஏழாம் நிலை

### வீழ்வது அருவி, பாய்ந்தோடியது ஆறு

### இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்.

“தபித்தா” அதாவது எழுந்திரு என்று சொல்லி இறந்துபோன யாயீரின் மகனை எழுப்பியவர் இதோ விழுகிறார்!

“குறைவான விசுவாசமுள்ளவனே! ஏன் கலங்குகிறாய்?’ என்று கலிலேயக் கடலில் விழப்போன இராயப்பரை எழுப்பிய இறைவன், இதோ விழுகிறார்!

சுருண்டு கிடந்த மனிதனை, “படுக்கையைத் தூக்கிக் கொண்டு நட” என்று எழுப்பிய இறைவன், இதோ விழுகிறார்!“இலாசரே வெளியே வா!” - என்று இறந்தவனை உயிரோடு எழுப்பிய இறைவன் இதோ விழுகிறார்.

**செயல்பாடு:** நீயும் நானும் எத்தனை முறை விழுந்தோம் என்பதல்ல, எத்தனை முறை எழுந்திருக்க ஆசைப்படுகிறோம்?

**செபம்**: இயேசுவே! காற்றினாலும், வெள்ளத்தினாலும், புயலினாலும் வீழ்ந்து விடாமல் விசுவாசத்தில் பேரூன்றி, நிலைத்து நிற்க வரம் தாரும்! இயேசுவே வரம் தாரும்!

## எட்டாம் நிலை

### ஆலமரம் விழுந்துவிடக்கூடாது என்று நாணல்கள் பிரார்த்தனை செய்தன.

### இயேசுவுக்காக எருசலேம் பெண்கள் அழுகிறார்கள்.

மெழுகு உருகுகிறதே என்று வருந்தாதே. விதைகள் மடிகின்றனவே என்று கவலைப்படாதே. வேர்கள் மறைந்து போகிறதே என்று சலிப்படையாதே. எனக்காக அழவேண்டாம். குற்றத்தைக் குற்ற உணர்வு இன்றியே செய்து கொண்டிருக்கும் உங்களுக்காக அழுங்கள். தொலைக்காட்சியிலும், திரைப்படங்களிலும் மூழ்கி, சுய மதிப்பீடுகளைத் தொலைத்துக் கொண்டிருக்கிற உங்கள் பிள்ளைகளுக்காக அழுங்கள். இதுதான் சரியென்று தெரிந்திருந்தும், தவறான வழியிலேயே சரியானதைத் தேடிக்கொண்டிருக்கும் உங்கள் இளைஞர், இளம் பெண்களுக்காக அழுங்கள்.

**செயல்பாடு:** இதோ நிஜம்! இதோ நிழல்!
இரண்டில் எதைப் பார்த்து நீயும் நானும் அழுகிறோம்?

**செபம்:** இயேசுவே! எங்களுக்காகவும், எங்கள் பாவங்களுக்காகவும் மனம் வருந்த வரம் தாரும்.

## ஒன்பதாம் நிலை

### வீழ்ந்தன விதைகள், வளர்ந்தன பயிர்கள்

### இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்.

சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவற்றுள் சில 100 மடங்காகவும், சில 30 மடங்காகவும் விளைச்சலைக் கொடுத்தன.

இயேசு முதல் முறை விழுந்து எழுந்தார். மனித இனம் எழுந்தது. இயேசு இரண்டாம் முறையும் விழுந்து எழுந்தார். மனித இனம் பாவத்தை விட்டெழுந்தது. இயேசு மூன்றாம் முறையும் விழுந்து எழுந்தார். மனித இனம் அவரில் புத்துயிர் பெற்றது.

**செயல்பாடு**: இதோ நல்ல நிலம்! இதோ பாறை, முட்செடி நிலம்! நீயும் நானும் எந்த நிலத்தில் விழுகிறோம்! பாறையிலா? முட்செடியின் நடுவிலா? அல்லது நல்ல நிலத்திலா?

**செபம்:** இயேசுவே! நல்ல நிலத்தில் விழுந்து பலன் தர வரம் தாரும். இயேசுவே வரம் தாரும்.

## பத்தாம் நிலை

### ஆள் பாதி, ஆடை பாதி என்பது மாறி ஆடை பாதி, ஆடம்பரம் பாதி ஆனது

### இயேசுவின் ஆடைகளைக் களைந்து எடுக்கிறார்கள்.

ஆதியில் ஆதாம் பாவம் செய்தான் ஆடை உடுத்த வேணடிதாயிற்று. இப்போது இயேசு பாவத்தை வீழ்த்தினார். அவருடைய ஆடை உறிக்க வேண்டிதாயிற்று. அடிப்படை மனித உரிமை ஆடை அணிவது தான். பறவைகளுக்கு சிறகுகள் என்ற ஆடையையும், மரங்களுக்கு பட்டை என்ற ஆடையையும் கொடுத்த ஆண்டவனுக்கு இங்கே ஆடை உரிக்கப்படுகிறது.

15

## 03 மனித உரிமைகளோடு...

என்று சொல்லப்படுகிறது. ஆனால் வேலை வாய்ப்பே இல்லை. எமது வாழ்வு கேள்விக் குறியாகிறது என விரக்தியின் விளிம்பில் இருக்கும் இளைஞர்கள் எம்மத்தியில் எத்தனை பேர். "மானிடருக்கு குடும்பம் நடத்த உரிமையுண்டு" என்று மானிட உரிமை அறிக்கைகள் முழங்குகின்றன. ஆனால் எல்லைப் போரில் சாதி, மத, இனவெறிச் சண்டைகளால் பெற்றோர்களை இழந்து வாழும் கருணை இல்லச் சிறுவர்களுக்கு மனித உரிமைகள் என்றால் என்ன என்று கேட்கிறார்கள். இத்தனையும் நாம் கண்களால் பார்ப்பவையும், உள்ளத்தால் உணரும் உண்மைகளுமே.

ஒடுக்கப்படும், சுரண்டப்படும் மக்களுடைய வாழ்வுரிமைகளை தூக்கி நிறுத்தும் சமத்துவ சமுதாயத்திற்கான ஒரு போராட்டம், புதிய சித்தாந்தம் இன்றையத் தேவை. "எப்போதெல்லாம் அதர்மம் மேலோங்குமோ அப்போதெல்லாம் தர்மத்தை நிலைநாட்ட அவதாரம் எடுப்பவர் கடவுள்" என்கிறது பகவத் கீதை. ஒடுக்கப்பட்ட, கைவிடப்பட்ட மக்களுக்கு உரிமை வாழ்வைப் பெற்றுக் கொடுத்து, அன்பின் ஆட்சியை இவ்வுலகில் கட்டியெழுப்பவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார் என்கிறது திருவிவிலியம். ஆனால் இன்று நமது அன்றாட வாழ்வில் நம் கண்முன்னால் மானிட உரிமை மீறல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. மனித உரிமை மீறல்களுக்கான எதிர்ப்பு என்பது ஒவ்வொரு மனிதரிடமும் இயல்பாக எழ வேண்டிய ஓர் உணர்வு. சமூக உணர்வு கொண்டவர்கள் ஒன்று திரண்டு மனித உரிமைக்காக குரல் கொடுப்போம். உண்மையான சுதந்திரத்தை அனுபவிப்போம்.

## XIX சொல் நோன்பிருப்போம்

நல்ல வார்த்தைகளையே பேசுங்கள்" (எபே 4:29) என்று பணித்தார். யாரும் குற்றம் "கண்டுபிடிக்க முடியாத நலம் தரும் வார்த்தைகளைப் பேசு" (தீத் 2:8) என்றார். "இனிய உளவாக இன்னாத கூறல், கனியிருப்பக் காய் கவர்ந் தற்று என்னும் குறள் வரிகளைப் போலவே, உங்கள் பேச்சு எப்பொழுதும் இனியதாயும் சுவையுடையதாயும் இருப்பதாக" (கொலோ 4:6) என்று அறிவுரை பகர்ந்தார்.

சொற்களின் வலிமையைப் பற்றி ஆழமாகப் பேசிய இன்னொரு புதிய ஏற்பாட்டு எழுத்தாளர் திருத்தூதர் யாக்கோபு. பேச்சில் தவறாதோர் நிறைவு பெற்றவராவர். அவர்களே தம் முழு உடலையும் கட்டுப்படுத்த வல்லவர்கள் (யாக் 3:2) நாவும் தீயைப் போன்றதுதான். நெறி கெட்ட உலகின் உருவே அது. அது நம் உடல் முழுவதையும் கறைப்படுத்துகிறது (யாக் 3:6) நாவை அடக்க யாராலும் முடிவதில்லை. கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அது கொடியது. சாவை விளைவிக்கும் நஞ்சு நிறைந்தது. தந்தையாம் ஆண்டவரைப் போற்றுவது அந்நாவே, கடவுளின் சாயலாக உண்டாக்கப்பட்ட மனிதரைத் தூற்றுவதும் அந்நாவே. போற்றலும், தூற்றலும் ஒரே வாயிலிருந்து வருகின்றன. என் சகோதர சகோதரிகளே, இவ்வாறு இருத்தலாகாது (யாக் 3:8-10)

விவிலியம் காட்டும் வழியினில், சொற்களை ஞானத்தோடு பயன்படுத்த, இத்தவக்காலத்தில் நாம் சொல் நோன்பு கடைப்பிடிப்போமாக! சொல் நோன்பிருந்தால் வாரமொரு நாள் (வெள்ளிக்கிழமை தோறும்) பெரும்பாலான பேச்சைக் குறைத்து, அமைதி காப்போம். பண்பற்ற, தேவையற்ற, காயப்படுத்துகின்ற சொற்களை அறவே தவிர்ப்போம். இனிய, பயனுள்ள, ஊக்குவிக்கும் சொற்களை அன்று முழுவதும் அதிகமாகப் பயன்படுத்துவோம். நமது சொற்களால் இறைவனை மாட்சிப்படுத்துவோம். பிறரை ஊக்குவிப்போம்.

## 02 இறைபதம் அடைந்தார்.

திருநிலைப்படுத்தப்பட்டார். அதன்பின் உதவிப் பங்குத் தந்தையாக உஸ்வட்கெய்யாவா, கொட்டாஞ்சேனை பங்குகளிலும், பங்குத் தந்தையாக மோதரா மற்றும் வுருலப்பிட்டிய பங்குகளிலும், தேவத்தை திருத்தலத்தின் பரிபாலகராகவும் கடமையாற்றினார். பின்பு பாகிஸ்தானிலும், 1988ம் ஆண்டு அமெரிக்காவிலும் சேவைபுரிந்தார். அவரது இறுதிக்கிரிகைகள் துடெல்லா அடைக்கலமாதா தேவாலயத்தில் நடைபெற்றது.

## 01 குருத்துவம் என்பது...

மேலும் ஆயர் தமது மறையுரையில் பின்வருமாறு தெரிவித்தார். "குருத்துவம் என்பது பட்டமோ, பதவியோ அல்ல, அது இறை அழைத்தலாகும். குருத்துவத்தை வெற்றியின் பாதையில் கொண்டு செல்வதற்கு உதவுவது, அக்குரு இறைவனோடு கொண்டுள்ள உறவு அவரிடத்தில் நிலைத்திருத்தலேயன்றி, அக்குருவின் திறமையோ, கல்வித்தகமைகளோ, குடும்பப் பின்னணியோ அல்ல"

இத்திருப்பலியில் அருட்சகோ. அஜந்த சுரேஸ் பீரிஸ், அருட்சகோ. விராஜ் சன்ஜய பொன்சேகா, அருட்சகோ. துசித பெதும், அருட்சகோ. டெர்னன் பியன்ஜன, அருட்சகோ. மியுரின் ஜயசுந்தரன், அருட்சகோ. டெமினியன் பிரான்சிஸ் ஆகியோர் குருத்துவ திருநிலைப்படுத்தப்பட்டனர்.

**படம் மற்றும் தகவல் : திரு. சுனில்**

## செப வழிபாடு

அருட்தந்தை டெரல் கூஞ்ஞ அடிகளாரால் நடாத்தப்படும் செப வழிபாடு தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் ஒவ்வொரு போயா தினத்தன்றும் மாலை 6.45 மணிக்கு புனித லூசியாள் பேராலயத்தில் நடைபெறுகின்றது.

(செப வழிபாடு நடைபெறும் திகதி மாற்றப்படுமானால் அதற்கு முன் நடைபெறும் செப வழிபாட்டில் அறிவிக்கப்படும்). - **பங்குத் தந்தை** (N 5365)

## 06 அன்பை அறிந்து...

"தங்கத்தை விட உயர்ந்ததாக நான் கருதுவது நட்பையே" என்று நட்பின் பெருமையைப் பேசியவர் கிரேக்க ஞானி பிளேட்டோ. பெற்றோரிடத்தில் வாக்குவாதம் செய்து விட்டு வந்த நண்பனின் சினத்தைத் தணிக்க, நண்பன் ஆறுதல் வார்த்தைகளைக் கூறும்போது, அங்கே 'அன்பு' இறந்துவிடவில்லை. இது நண்பன் தன் செயலால் காட்டும் 'ஐ லவ் யூ'

"தம்பி உடையான் படைக்கு அஞ்சான்" என்பது பழமொழி. உடன்பிறப்புக்கள் கடவுள் நமக்குக் கொடுத்த அன்பு கொடைகள். சண்டையிட்டாலும், சினந்துகொண்டாலும் நம்மைத் துன்பத்திலும், இன்பத்திலும் உடனிருந்து காக்கும் அரிய சொத்து நம் உடன்பிறப்புக்கள். தேர்வில் தோல்வியுற்றதும், உடன்பிறந்தாள் தோற்றி உடனிருந்து உதவி கற்றுக்கொடுத்தபோது அங்கே 'அன்பு' இறந்துவிடவில்லை. நமது உடன்பிறப்பின் 'ஐ லவ் யூ' வெறும் வார்த்தைகள் அன்று வாழ்க்கை நம்முடனே இருப்பவை.

"பெற்ற தாயின் அன்பை விடவும் மேலானது கடவுளின் அன்பு" என உரைக்கிறது திருவிவிலியம். அந்த அன்பின்றித் தவித்தோர்க்குத் தாயானார் புனித அன்னை தெரேசா! அன்பின் தேவதையான அவர் சொல்லும் பாடம் "அன்பைத் தருவதால் அன்பைப் பெறுவோம்!" கடவுள் மீது கொண்ட அன்பினால் சிவனடியாராகித் துறவறம் பூண்ட மாணிக்கவாசகர் "மனித அன்பை விடவும் மேலான ஓர் அன்பு உண்டு" என திருவாசகத்தில் உணர்த்துகின்றார்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்"

எனக் கடவுளும் அன்பும் ஒன்று என்று திருமந்திரம் உரைக்கிறது. இறை அன்பால் ஈர்க்கப்பட்ட திருஞானசம்பந்தர், "காதலாகி கசிந்துருகி கண்ணீர் மல்கி..." எனப் பாடுகிறார். எந்த மனித அன்பு குறைந்தாலும், கடவுளின் அன்பு மாறாது.

மாற்றங்கள் கண்கூடு. எங்கும் எதிலும் மாற்றங்கள் இருக்கும்போது, "மனித அன்பில் மட்டும் மாற்றமே கிடையாது" என்று எதையும் மிகைப்படுத்திப் பார்ப்பதும் தவறு.

காற்று எங்கே என்று கண்களால் காண முடியாது. ஆனால் காற்றின் அசைவில் அதன் செயல்பாட்டை உணரலாம். 'அன்பு எங்கே?' என்று தேடுவதைத் தவிர்த்து, அதன் செயல்பாடுகளைக் கண்டுகொள்ள வேண்டும். எப்போது அன்பைத் தேடுவது நிறுத்தப்படுகிறதோ, அப்போதுதான் அன்பு அகப்படுகிறது. தேடினால் கிடைப்பதன்று அன்பு, மாறாகக் கண் திறந்து பார்த்து தெளிவு கொள்ளப்பட வேண்டிய அன்பு எங்கும் உள்ளது.

### சிந்தனைக்கு

- ✶ யாராவது என்னிடம், 'ஐ லவ் யூ' என்றாலே அ∴து ஆழமாக காதல் என்று நினைக்கின்றேனா?
- ✶ 'காதல்' மட்டுமே அன்பு என்று நினைத்து காதலை மட்டுமே நான் முன்னிலைப்படுத்துகின்றேனா?
- ✶ பெற்றோர், உடன்பிறப்புக்கள், மற்ற நண்பர்களின் அன்பைப் புறக்கணிக்கின்றேனா?
- ✶ என்னைச் சுற்றிலும் உள்ள அன்பை அறிந்துகொள்ளாமல், என்னை யாரும் அன்பு செய்யவில்லையே என்று மன உளைச்சலில் வாடுகின்றேனா?

## 01 கச்சதீவு புனித...

யாத்திரையும் எதிர்வரும் 23.02.2018 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மறுநாள் 23.02.2018 சனிக்கிழமை காலை யாழ் ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலியுடன் நிறைவுபெறும்.

**23.02.2018 –** மாலை 4.00 மணிக்கு கொடியேற்றமும், திருச்செபமாலை, திருச்சிலுவைப்பாதை தியானமும், திருப்பலி, நற்கருணை ஆராதனை ஆசீரும், புனிதரின் திருச்சுரூப பவனியும் இடம்பெறும்.

**24.02.2018 –** காலை 6.00 மணிக்கு திருச்செபமாலையும், யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு யஸ்ரீன் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் திருவிழாத் திருப்பலியும் திருச்சுரூப ஆசீரும் இடம்பெறும்.

தவக்காலம் அருளின் காலம், மீட்பின் காலம். இக் காலத்தில் இறைவனின் அளப்பரிய அன்பை நினைத்து மனம் உருக வேண்டும். இறையாட்சியின் மதிப்பீடுகளைப் பின்பற்றாமல் வாழ்ந்ததற்காக மனம் வருந்தவேண்டும். மீட்பின் பாதையில் பயணிக்க இக்காலம் நம்மை அழைக்கிறது. இதற்கு இவ் யாத்திரை பேருதவி புரியட்டும்.

**அருட்பணி எமில் போல், பரிபாலகர்**
**புனித அந்தோனியார் திருத்தலம், கச்சதீவு**

## 14 இயேசுவின் பாதை...

தொட்டால் போதும் என்று, தொட்டதால் குணம் கொடுத்த ஆடை, இப்போது குற்றவாளிகளால் களைப்படுகிறது.

**செயல்பாடு :** இதோ ஆடை! இதோ ஆடம்பரம்! இதில் நீயும் நானும் எதை உடுத்தப் போகிறோம்?

**செபம்:** இயேசுவே! ஆடம்பரமான வாழ்வைக் களைந்து, முழு ஆடையணிந்து அன்பை மட்டுமே வெளிப்படுத்த வரம் தாரும்! இயேசுவே வரம் தாரும்!

### பதினோராம் நிலை

**உடைப்பட்டது பாறை, உருவானது அழகான சிற்பம்.**

**இயேசுவை ஆணியால் சிலுவையில் அறைகிறார்கள்.**

பார்த்திமேயுவுக்குப் பார்வை கொடுத்த கரங்கள் ஆணிகளால் அறையப்படுகின்றன. குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்க வேண்டாம் என்று அரவணைத்த கரங்கள் ஆணிகளால் அறையப்படுகின்றன. தொழுநோயாளிகளைத் தொட்டுக் குணப்படுத்திய கரங்கள் ஆணிகளால் அறையப்படுகின்றன. கானாவூர், கலிலேயாக் கடலில், யோர்தான் நதி, தாபோர் மலை என்று எல்லா இடங்களுக்கும் நடந்து சென்று, புதுமைகளை நடத்திய கால்கள் இதோ ஆணிகளால் அறையப்படுகின்றன.

**செயல்பாடு :** இதோ துன்புறுத்தும் ஆணிகள்! இதோ உதவிதேடும் அயலான்!
இரண்டில் நீயும் நானும் எதை அதிகமாய் தேடுகிறோம்?

**செபம்:** இயேசுவே! என் அயலாரை நேசிக்கவும் மதிக்கவும் வேண்டிய வரம் தாரும்! இயேசுவே வரம் தாரும்!

### பன்னிரெண்டாம் நிலை

**காலையிலிருந்து சுற்றி வந்த சூரியன் அந்திப் பொழுதில் மேற்கில் மறைகிறது.**

**இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்.**

கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாதொழிய அது அடிப்படியே இருக்கும். மடிந்தால்தான் மிகுந்த பலனளிக்கும்.

நானோ ஆடுகள் உயிர் பெறும்படி வந்தேன். தன் ஆடுகளுக்காக தன் உயிரைக் கொடுப்பவனே நல்ல ஆயன். தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான நட்பு யாரிடமும் இல்லை. நண்பனுக்காக கொடுப்பதற்குச் சிறந்த வரம் வேண்டும். அதிலும் நண்பனுக்காக இறப்பதற்குச் சிறந்த வல்லமை வேண்டும்.

கொடுப்பதும் மரிப்பதும் கொடையாளிகளுக்கே உள்ள மாபெரும் குணம்.

**செயல்பாடு:** இதோ இறைவன்! இதோ உலகம்!
இரண்டில் நீயும் நானும் எதை அதிகமாய் தேடப்போகிறோம்?

**செபம்:** இயேசுவே! உன்னையே தேடி அடைந்து, உன்னிலே மகிழ்ச்சி காண வரம் தாரும் இயேசுவே வரம் தாரும்!

### பதின்மூன்றாம் நிலை

**தாய் அன்புக்கு ஈடு இல்லை, தாய் அன்பில் தெய்வம் தெரியும்**

**இயேசுவின் உடல் மரியாள் மடியில் கிடத்தப்படுகிறது.**

தாய்க்கு மட்டுமே தன் பிள்ளையைத் தெரியும். தன் பிள்ளை எதில் பலம், எதில் பலவீனம் என்று அறிந்து வைத்திருப்பவள்தான் தாய்.

தன் பிள்ளையாகிய, இயேசுவை முழுமையாக அறிந்திருந்ததால், அவளின் சோகம் கூட சுகமாக இருந்தது. அவளின் வியாகுலம் கூட வெற்றியாக முடிவடைந்தது. நல்லதாக இருந்தால் எனக்குதான் வேணடும். கெட்டதாக இருந்தால் பிறருக்குப் போக வேண்டும் என்று எண்ணும் போது நாம் மரியாளை உதாசீனப்படுத்துகிறோம்.

**செயல்பாடு :** இதோ மரியாள்!
இவரை நீயும் நானும் எப்பொழுது பின்பற்றி வழி நடக்கப் போகிறோம்?

**செபம்:** இயேசுவே! உமது தாயை ஏற்றுக் கொண்டு, உமது தாய்வழி உம்மை அடைய வரம் தாரும்! இயேசுவே வரம் தாரும்!

### பதின்னான்காம் நிலை

**ஒவ்வொரு கல்லறையும் ஒவ்வொரு பாடம்**


**இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்.**

இதுவரையில், மடிந்தால் மண்ணாய் போய்விடுவார்கள் என்பது மாறி, இனி மடிந்தால், மறுவாழ்வு பெறுவார்கள் என்று வந்தது இயேசுவின் கல்லறையால்தான். ஒவ்வொரு கல்லறையும் ஒரு அனுபவம் குகையில் இருந்தாலும், கூண்டில் இருந்தாலும் சிங்கம் சிங்கம் தான். ஒவ்வொரு விதையும் மண்ணில் மடிக்கப்படுவதின் நோக்கம் புதைக்கப்பட அல்ல, விதைக்கப் படுவதற்காகத்தான்.

எல்லார் கல்லறையிலும் பிறப்பு எழுதப்பட்டிருக்கிறது! இறப்பும் எழுதப்பட்டிருக்கிறது! ஆனால் இயேசுவின் கல்லறையில் மட்டும்தான் உயிர்ப்பு எழுதப்பட்டிருக்கிறது.

**செயல்பாடு:** இதோ சாவு! இதோ உயிர்ப்பு!
இதில் நாம் எதை விசுவசிக்க போகிறோம்?

**செபம்:** இயேசுவே! உம்முடைய கல்லறை எங்களுக்கு ஒரு தொடக்கம் என்பதை ஏற்று வாழ வரம் தாரும்! இயேசுவே வரம் தாரும்!



# டெங்கு அபாயம்!

சொல்லாமல் கொள்ளாமல் உயிரை எடுத்துச் செல்லும் நோய்களில் டெங்குக் காய்ச்சலையும் சேர்க்கலாம். கொசுக்கள் கடிக்கும்போது அதன் உடலில் உள்ள வைரஸ் மனிதர்களுக்குப் பரவுகிறது. அதன் அறிகுறி காய்ச்சல்... கவனிக்காத பட்சத்தில் உயிரிழப்பு நேர்கிறது.

பெரியவர்களைவிட, குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருப்பதால் அவர்களுக்கு எளிதில் காய்ச்சல் வருகிறது. ஒரு வீட்டில் ஒருவருக்கு காய்ச்சல் வந்தால், அதே கொசு மூலம் மற்றவர்களுக்கும் டெங்கு பரவ வாய்ப்புள்ளது. ஆனால், மனிதர்கள் மூலம் இக்காய்ச்சல் பரவாது.

உலகெங்கும் 3100 வகை கொசுக்கள் வாழ்கின்றன. ஒவ்வொரு நாட்டின் சீதோஷ்ண நிலைக்கும் ஏற்ப அவை காணப்படுகின்றன. பொதுவாக ஒரு பெண் கொசு ஒரு தடவை 400 முட்டைகள் வரை இடும். இந்த முட்டைகள் புழுவாக மாறி, பின் கூட்டுப் புழுவாக உருமாறி, அதன் பின்பு கொசு என்ற நிலையை அடைகின்றன. இந்த மாற்றத்தை அடைவதற்கு கொசுக்களுக்கு 14 முதல் 20 நாள்கள் வரை ஆகின்றன.

கொசு பிறந்ததிலிருந்து 25 நாள்கள் வரைதான் உயிரோடு இருக்கும் இந்தக் குறுகிய காலத்திற்குள் அவை ஆடும் ஆட்டம் கொஞ்சநஞ்சமல்ல!

கொசுக்களில் பல ஆயிரம் வகைகள் இருந்தாலும், அவற்றை ஜூபைலிக், ஆந்த்ரோபோபைலிக் என இரு வகைகளாய் பிரிக்கலாம். முதலாம் வகை கொசு விலங்குகளை மட்டும் கடிக்கும். ஆந்த்ரோபோபைலிக் கொசுக்கள் தான் மனிதர்களைக் கடித்துத் துன்புறுத்தி வருகின்றன.

டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் கொசு ஏடிஸ். இது ஆப்பிரிக்க நாட்டிலிருந்து மற்ற நாடுகளுக்குப் பரவத் தொடங்குகியது. 1757ஆம் ஆண்டு முதல் ஏடிஸ் கொசு குறித்த விழிப்புணர்வு இருந்துவருகிறது.




ஏடிஸ் வகையில் பெண் கொசு மட்டுமே கடிக்கும். ஆண் கொசு கடிக்காது. ஏடிஸ் கொசு மாலை நேரத்தில், பகலில், விடியற்காலை நேரத்தில் மட்டுமே கடிக்கும். இரவில் கடிக்காது. இந்தக் கொசுவின் கால்களில் வெள்ளை நிறம் இருக்கும். இதை வைத்து இந்தக் கொசுவை அடையாளம் காணலாம்.

கழிவு நீரும், நல்ல நீரும் சேரும் இடத்தில் இந்தக் கொசுக்கள் அதிக அளவில் உற்பத்தியாகும். குறிப்பாக செப்டிக் டேங்கில் அதிக அளவில் உற்பத்தியாகும். எனவே பொதுமக்கள் தங்களது வீட்டில் செப்டிக் டேங்க் அருகில் காற்று வெளியேறுவதற்காக வைக்கப்பட்டுள்ள குழாயில் உடனடியாக வலை போட்டு மூடவேண்டும். முட்டையிலிருந்து இந்தக் கொசு வெளியே வரும்போது ஒரு நீண்ட புழுபோல இருக்கும். அதற்கு அடுத்தபடியாக விரைவில் வளர்ச்சியை எட்டிவிடும்.

## டெங்குவைத் தடுப்பது எப்படி?

✴ டெங்கு நோய்க்கு என்று தனிப்பட்ட சிகிச்சை முறை எதுவும் கண்டறியவில்லை. அதனால் நோயாளிகள் பீதி அடையத் தேவையில்லை. மருத்துவர்கள் பரிந்துரையின்படி மருந்துகள் உட்கொள்வதன் மூலமும், ஓய்வு எடுப்பதன் மூலமும் நோயைக் குணப்படுத்தி விட முடியும். அதிக அளவில் நீர்பானங்கள் குடிக்க வேண்டும்.


✴ நோய் அறிகுறி இருந்தால், எவ்வளவு விரைவாக மருத்துவமனைக்குச் செல்ல முடியுமோ அவ்வளவு விரைவாகவச் சென்றுவிட வேண்டும். உரிய பரிசோதனைகள் மேற்கொண்டு விரைவான சிகிச்சை பெறுவதன் மூலம் நோயின் வீரியத்தைக் கட்டுக்குள் கொண்டுவந்துவிடலாம்.

✴ மருத்துவர்கள் ஆலோசனையின்றி ஆஸ்பிரின் போன்ற வலி நிவாரணி, காய்ச்சலுக்கான மருந்து, மாத்திரைகளை எக்காரணம் கொண்டு உட்கொள்ளக்கூடாது.

✴ ஏடிஸ் கொசுக்கள் இனப்பெருக்கம் செய்வதைத் தடுப்பதன் மூலமே டெங்கு காய்ச்சல் பரவுவதைத் தடுக்கமுடியும்.

✴ டயர், சிரட்டை, டின்கள், பாலித்தீன் பைகள், பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவற்றில் தேங்கி நிற்கும் நீர், குளிர்சாதனப் பெட்டிகளில் பின்புறத்தில் சேரும் நீர் ஆகியவற்றில் நீர் சேராமல் தடுக்க வேண்டும்.

✴ நோயாளிகளுக்கு பப்பாளி இலைச்சாறு மற்றும் நில வேம்பு கசாயம் ஆகியவை மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் மக்களுக்கு வழங்கப்படுகின்றன.



### டெங்குக் காய்ச்சலுக்கான அறிகுறிகள்

- கடுமையான காய்ச்சல்.
- கண்ணில் ஏற்படும் வலி.
- கடும் தலைவலி.
- மூட்டு, தசைகளில் ஏற்படும் அதிக வலி.
- தோல் சிவந்து போவது.
- இரத்த அணுக்கள், இரத்த வட்டுகள் குறைதல்.
- இரத்தப் போக்கு ஏற்படுதல், மூக்கில் இரத்தம் வருதல்.
- ஆங்காங்கே இரத்தப் புள்ளிகள் உடலில் தோன்றுதல்.
- அடி மூட்டுக்களில் அரிப்பு, சிலருக்கு உடல் முழுவதும் அரிப்பு.

## டெங்குவின் வகைகள்

1. சாதாரண டெங்கு காய்ச்சல் மற்ற காய்ச்சல் போல வந்த வழி தெரியாமல் சென்றுவிடும். 104 டிகிரி வரை உடல் கொதிக்கும். தலைவலி, இருமல், சளி, உடல் வலி இருக்கும்.

2. உதிரப்போக்குடன் கூடிய டெங்குக் காய்ச்சல் (Dengue Hemorrhagic Fever): இவ்வகை காய்ச்சல் இரத்தம் உறைய உதவும் தட்டணுக்களை அழித்து விடுவதால், பல் ஈறு, மூக்கு, நுரையீரல், வயிறு, சிறுநீர் பாதை, எலும்பு மூட்டு ஆகியவற்றில் இரத்தக் கசிவு ஏற்படுத்தும்.

3. டெங்கு ஷாக் சின்ட்ரோம் (Dengue Shock Syndrome): ஏழு நாள்களில் காய்ச்சல் சரியாகிவிடும். காய்ச்சல் குறைந்த பிறகு ஒருவித அதிர்ச்சி நிலை ஏற்பட்டு, உடல் ஜில்லிட்டுப் போகும். சுவாசிக்கச் சிரமம் ஏற்படும். இரத்த அழுத்தம் ஏற்படும். நாடித்துடிப்பு குறையும். சுய நினைவு இழந்து கோமா நிலைக்கும் சென்றுவிடுவர். இரண்டாம் மற்றும் மூன்றாம் வகைகள் மிகவும் ஆபத்தானவை.

## குணமாகும் டெங்கு!


டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்வர்களில் 95 சதவீதம் பேர் எளிதில் குணம் பெறுவர். மீதமுள்ள 5 சதவீதம் பேருக்கு மட்டுமே வீரியம் அதிகமாகி, சிவப்பு நிறத்தில் ரேஷ் தோன்றும். உடலில் உள்ள ‘பிளட் லெட்’ என்று சொல்லப்படும் இரத்தக் கணங்கள் குறையும். அவர்கள் மருத்துவமனையில் தங்கி 2 முதல் 3 நாள்கள் சிகிச்சை எடுத்துக்கெண்டால் எல்லாம் சரியாகிவிடும். டெங்குவுக்குகென்று பிரத்தியேக மருந்துகள் இல்லை.

## குழந்தைகளைப் பாதுகாப்போம்!

குழந்தைகளைக் கொசுக்கடியிலிருந்து காப்பாற்ற கைகள், கால்கள் ஆகியவற்றை மறைக்கும் ஆடைகளை அணிவிக்க வேண்டும். தேங்கிய நீரின் அருகே செல்லாமல், விளையாடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதிக அளவில் தண்ணீரைக் குடிக்கச் சொல்ல வேண்டும். வெந்நீராய் இருந்தால் நல்லது.

### டெங்குவைத் தடுக்க ஆலோசனைகள்

- டெங்கு அறிகுறிகள் தெரிந்தவுடன் மருத்துவரை அணுகுதல்.
- குப்பைகளை சாலையோரத்தில் வீசாமல், பாதுகாப்பான இடத்தில் போடுதல்.
- வீட்டைச் சுற்றி நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ளுதல்.
- கொசுவர்த்திகளைப் பயன்படுத்துதல்.
- கொசு வலை உபயோகித்தல்.
- தண்ணீர் தொட்டிகளில் கொசு உள்ளே போகாமல் பார்த்துக் கொள்ளுதல்.
- காலை, மாலை சாம்பிராணிப் புகை காட்டுதல்.



## நிலவேம்பு கஷாயம்

மூலப்பொருள்கள்: நிலவேம்பு, வெட்டிவேர், விலாமிச்சை வேர், சந்தனம், கோரைக் கிழங்கு (கோரைப் புல்லின் கிழங்கு), பேய்ப்புடல் (புடலங்காய் வகை தாவரம்), பற்படாகம் (ஒரு வகை புல்), சுக்கு, மிளகு ஆகிய ஒன்பது பொருள்களே மூலப் பொருட்கள், இந்த ஒன்பது மூலப்பொருள்களில் நிலவேம்புதான் மிக முக்கியமான மூலப்பொருள் ஆகும். இதில் உள்ள வேதிப்பொருள்கள் காய்ச்சலைத் தீர்ப்பதோடு வைரஸ் கிருமிகளை அழித்து நோய் எதிர்ப்புச் சக்தியைக் கூட்டும். கோரைக் கிழங்கும், பற்படாகமும் காய்ச்சலைத் தீர்க்கும். சுக்கும், மிளகும் உடலின் நொதிகள் மற்றும் என்சைம்களின் சுரப்பைச் சீராக்கும். வெட்டிவேர், விலாமிச்சை வேர், சந்தனம் ஆகியவை ஜூரத்தால் ஏற்படும் சூட்டைத் தணிக்கும். சந்தனமும் உடல் சூட்டைத் தணிக்கும்.

### தயாரிக்கும் முறை:

மூலப்பொருள்கள் ஒவ்வொன்றையும் சம அளவு எடுத்துக் கொள்ள வேண்டும். ஆயுர்வேதத்தில் கஷாயம் தயாரிக்கும்போது மூலப்பொருள்களின் தன்மை மற்றும் தரத்தைப் பொறுத்து, அதனுடன் நான்கு அல்லது எட்டு அல்லது பதினாறு மடங்கு என தண்ணீர் சேர்க்கப்படும். அதன்படி நிலவேம்புக் குடிநீர் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்களுடன் எட்டு மடங்கு தண்ணீர் சேர்த்து, அதை நான்கு மடங்காக வற்றும் வரை கொதிக்க வைக்க வேண்டும். ஆற வைத்து வடிகட்டினால் நிலவேம்புக் குடிநீர் தயார். எப்படிப் பருக வேண்டும்? நிலவேம்புக் குடிநீரை இளஞ்சூடாக குடிப்பதுதான் சிறந்தது. அதுவும் தயாரித்த 3 மணி நேரத்திற்குள் குடிக்கவேண்டும். நேரம் செல்லச் செல்ல அதன் வீரியம் குறைந்துவிடும். குளிர்சாதனப் பெட்டிகளில் வைத்து பின்னர் குடிப்பது கண்டிப்பாகத் தவிர்க்கபட வேண்டும். ஒரு நாளைக்கு பத்து மில்லி முதல் 50 மில்லி வரை குடிக்கலாம். குழந்தைகள் 10 மில்லியும், சிறுவர்கள் 15 மில்லியும், பெரியவர்கள் 15 மில்லி முதல் 50 மில்லி வரை குடிக்கலாம். காய்ச்சல் பாதித்தவர் ஒரு நாளைக்கு மூன்று தடவை குடிக்கலாம். சாப்பாட்டிற்கு முன்பு குடிப்பதே சிறந்தது. அப்போதுதான் அது வீரியத்துடன் செயல்படும்.

## டெங்கு — தொற்று நோயல்ல!

டெங்கு என்பது ஒரு தொற்றுநோய் அல்ல. டெங்குவால் பாதிக்கப்பட்டவர்களின் கைக்குட்டை, ஆடைகள் மற்றவர்கள்மீது படுவதால் டெங்கு பரவாது. ஆனால் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவரைக் கடிக்கும் கொசு மற்றவரைக் கடித்தால் டெங்கு பரவும்.






இறைவேண்டலோடு இணைந்து செல்கின்ற ஒரு செயல்பாடாக உண்ணா நோன்பை விவிலியத்தில் காண்கிறோம். ஆண்டவர் இயேசுவே, இவ்வகைப் பேய் இறை வேண்டலினாலும், நோன்பினாலும் மட்டுமே அன்றி வெளியேறாது (மத் 17:21, மாற் 9:29) என்று நோன்பின் வலிமையை எடுத்து உரைத்தார். இயேசுவும் தமது பணிவாழ்வின் தொடக்கத்தில் நாற்பது நாள் இரவும் பகலும் நோன்பிருந்தார் (மத் 4:2)

இறைப்பற்றுடைய பலரும் நோன்பிருந்தனர் என விவிலியம் காட்டுகிறது. எண்பத்து நான்கு வயது கைம்பெண் இறைவாக்கினர் அன்னா நோன்பிருந்து மன்றாடி அல்லும் பகலும் திருப்பணி செய்துவந்தார் (லூக் 2:37). திருமுழுக்கு யோவானின் சீடர்களும் அடிக்கடி நோன்பிருந்து மன்றாடி வந்ததாகப் புதிய ஏற்பாடு தகவல் தருகிறது (லூக் 5:33). தொடக்கத் திருச்சபையில் முக்கியமான நிகழ்வுகளுக்கு முன் நோன்பிருந்தனர் என்று திருத்தூதர் பணிகள் நூலில் வாசிக்கின்றோம் (தி.ப 13:2,3 14:23)

பழைய ஏற்பாட்டிலோ நோன்பு பாவத்துக்காக வருந்தும் மனத் துயர் அடையாளமாக இருந்தது. இஸ்ராயேல் மக்கள் பெத்தேலுக்கு வந்து அழுதனர். ஆண்டவர் திருமுன் அமர்ந்து மாலைவரை உண்ணா நோன்பிருந்தனர் (நீ.மொ 20:26) மிஸ்பாவில் ஒன்றுகூடி நோன்பிருந்து, ஆண்டவருக்கு எதிராக நாங்கள் பாவம் செய்துவிட்டோம் (1 சாமு 7:6) என்று அறிக்கையிட்டனர்.

### உண்ணா நோன்பு பல நன்மைகளைத் தருகிறது.

1. உடலுக்கு நலம் தருகிறது. செரிமான உறுப்புகள் ஓய்வடைகின்றன. நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. உடல் பருமன் தடுக்கப்படுகிறது. வாரம் ஒருநாள் நோன்பிருப்பது உடல் நலனுக்கு உகந்தது என மருத்துவர்களும், நலவாழ்வு அறிஞர்களும் அறிவுறுத்துகின்றனர்.
2. உள்ளத்துக்கு நல்லது. தன் கட்டுப்பாட்டில் வளர்வதற்கு நோன்பு நல்லது எனப் பரிந்துரைக்கின்றனர் உளவியலாளர்.
3. சமூகத்துக்கு நல்லது. உணவின்றி வாடுவோருடன் ஒன்றிக்கவும், பகிரும் மனநிலையை வளர்க்கவும் நோன்பு உதவும் என்கின்றனர் சமூகவியலாளர்.
4. ஆன்மாவுக்கு நல்லது. உண்ணா நோன்பினால் ஆணவம் அடங்குகிறது. மனம் இறைவனை நோக்கி எழும்புகிறது. நோன்பு ஒரு நற்செயலாகவும் அமைகிறது.

### உண்ணா நோன்பு ஒரு மேலான மதிப்பீடு

உணவை மறுப்பது இந்த உலகில் உணவைவிட மேலானவை இருக்கின்றன என்பதை நமக்கு நினைவூட்டி, பிறருக்கும் நற்செய்தியாக அறிவிக்கின்றது. உணவைவிட மேலானவற்றை இறைமொழி நம் முன் வைக்கின்றது.

**1. உணவை விட உயிர் மேலானது :**

உணவைவிட உயிரும், உடையைவிட உடலும் உயர்ந்தவை அல்லவா? (லூக் 12:23) என்றார் இயேசு, உணவு இருந்து, உயிர் இல்லாவிட்டால் என்ன பயன்? இதனையே அருமையான ஓர் உவமை மூலம் எடுத்துச் சொன்னார் இயேசு. என் நெஞ்சமே, உண்டு குடித்து மகிழ்ச்சியில் திளைத்திடு என்று சொன்ன அறிவற்ற செல்வனிடம் கடவுள், அறிவிலியே, இன்றிரவே உன் உயிர் உன்னைவிட்டுப் பிரிந்துபோய்விடும் அப்பொழுது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும் என்று கேட்டார். (லூக் 12:19-20)

**2. உணவைவிட இறைவார்த்தை மேலானது :**

தாம் பசியாயிருந்தபோது, கல்லை அப்பமாக மாற்றி உண்ணச் சொன்ன அலகையிடம் இயேசு, மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர் (மத் 4:4) என்றார்.

**3. உணவை விட நற்கருணை மேலானது :**

ஐந்து அப்பங்களைக் கொண்டு ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்களுக்கு வயிறார உணவளித்தார் இயேசு. எனவே, மறுநாளும் அவரைத் தேடி வந்தனர் அவர்கள். ஆனால் இயேசு அவர்களுக்கு அழியாத உணவை அறிமுகப்படுத்தினார். அழிந்துபோகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலைவாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள். அவ்வுணவை மானிட மகன் உங்களுக்குக் கொடுப்பார் (யோவா 6:27) என்றார்.

"ஐயா, இவ்வுணவை எங்களுக்கு எப்போதும் தாரும்" என்று மக்கள் அவரிடம் கேட்டபோது, அவர் தமது உடலாகிய நற்கருணையை அவர்கள் முன் வைத்தார். "விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார். எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன். அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன்." (யோவா 6:51) என்றார்.

**4. உணவை விட இறைத் திருவுளத்தை நிறைவேற்றுவது மேலானது :**

"பசி, தாகம், களைப்பு இவற்றை மறந்து, சமாரியப் பெண்ணோடு உரையாடி, அவருக்குத் தம்மை இறைவாக்கினராகவும், மீட்பராகவும் வெளிப்படுத்தினார் இயேசு. உணவு கொண்டுவந்த சீடர்களிடம் என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும், அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு" (யோவா 4:34) என்றார்.

**5. உணவைவிட இறையாட்சி மேலானது :**

எதை உண்பது, எதைக் குடிப்பது என நீங்கள் தேடிக்கொண்டிருக்க வேண்டாம். நீங்கள் அவருடைய ஆட்சியை நாடுங்கள் அப்பொழுது இவை உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும் (லூக் 12:29,32) என்றார் இயேசு.

**6. உணவை விட இயேசு மேலானவர் :**

"தங்களுக்குத் தேவையான அப்பங்களை எடுத்துச் செல்ல மறந்துவிட்ட சீடர்களிடம், நீங்கள் உங்களிடம் அப்பம் இல்லை என ஏன் பேசிக்கொள்கிறீர்கள்?" )மாற் 8:14-21) என்று வினவுகிறார் இயேசு. படகில் அவர்களிடம் ஓர் அப்பம் மட்டுமே இருந்தது (மாற் 8:14) என்னும் குறிப்பின் மூலம் இயேசுவே அந்த அப்பம் என்கிறார் நற்செய்தியாளர். இயேசு இருக்கும்போது வேறு எதுவும் தேவையில்லை. உணவுகூட குப்பை எனக் கருதப்படலாம் (பிலி 3:8) என்கிறார் பவுலடியார்.

### நோன்பிருப்போம்

ஆதலினால், வரவிருக்கும் இத்தவக்காலத்தில் வாரம் ஒருமுறை, சிறப்பாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், உண்ணா நோன்பிருக்கும் பழக்கத்தை ஓர் இறைவேண்டல் பழக்கமாக மாற்றுவோம். அன்றைய நாளில் ஒருவேளை அல்லது இருவேளை உணவை மறுக்கலாம். அல்லது உணவில் அளவினைக் குறைத்துக் கொள்ளலாம். அல்லது சுவையான, பிடித்தமான உணவை இழக்க முன்வரலாம். உணவில் நாம் செய்யும் தன் கட்டுப்பாடு அல்லது தியாகமே உண்ணா நோன்பு என்னும் பார்வையில் தவக்காலத்தில் உண்ணா நோன்பிருப்போம்.

**எனக்கு வறுமையிலும் வாழத் தெரியும், வளமையிலும் வாழத் தெரியும். வயிறார உண்ணவோ, பட்டினி கிடக்கவோ, நிறைவோ குறைவோ எதிலும் எந்தச் சூழலிலும் வாழப் பயிற்சி பெற்றிருக்கின்றேன்** (பிலி 4:12) என்றுரைத்த பவுலடியாரைப் பின்பற்றி வாழ்வோம்.

உண்ணா நோன்பு ஒரு வலிமையான இறைவேண்டல் என நாமறிவோம். நாம் வாழும் இக்காலத்தில் உணவைவிட வலிமையானவையாகவும், இன்றியமையாதவையாகவும் மாறிவிட்டன. சமூக ஊடகங்கள். உணவின்றிக் கூட ஒருநாள் இருந்துவிடலாம், ஆனால், தொலைக்காட்சி பார்க்காமலோ, அலைபேசி இல்லாமலோ ஒரு நாளைக் கழிக்க முடியாது என்னும் நிலையில் இருப்போர் இன்று மிகப் பலர்.




எனவே, உண்ணா நோன்பைப் போல ஊடக நோன்பையும் ஒரு செபமாக, தவமாக மாற்ற வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். செய்தித்தாள், வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி, அலைபேசி, இணையத்தளம் என்னும் ஆறும் இன்று வலிமையான ஊடகங்களாகத் திகழ்கின்றன. குறிப்பாக, தொலைக்காட்சியும், அலைபேசியும் அனைவருடைய இல்லத்திலும், கைகளிலும் இன்று இருக்கின்றன. எனவே அவற்றின் பயன்பாட்டின்மீது கட்டுப்பாடு விதிப்பது பல கோணங்களிலும் அவசியமாகிறது.

### தொலைக்காட்சியின் நன்மைகள்

1. தொலைக்காட்சி இன்று மிகப் பெரிய சமூக ஊடகமாக உள்ளது. அன்றாடச் செய்திகளை ஒரு நொடியில் இல்லத்திற்குள் கொண்டு வருகிறது.
2. இல்லத்தின் உள்ளேயே கிடைக்கும் பொழுதுபோக்கு சாதனம்.
3. கல்வி, மருத்துவம், வேலை வாய்ப்பு, உளவியல் போன்ற துறைகளின் அரிய தகவல்களை எளிதில் கொண்டு சேர்க்கிறது.
4. உலகை ஒருங்கிணைக்கும் தளமாக விளங்குகிறது.
5. நற்செய்தி அறிவிப்பின் வலிமையான ஊடகமாகவும் உள்ளது.

அதேவேளையில், பல தீமைகளைத் தரும் தொல்லைக்காட்சியாகவும் காட்சி தருகிறது. அதன் தீமைகளைப் பலவாறு பட்டியலிடுகின்றனர் ஆய்வாளர்கள்.

### தொலைக்காட்சியின் தீமைகள்

1. அடிக்கடி தொலைக்காட்சி பார்ப்பதனால் கண்களுக்குத் தீமை.
2. உடல் உழைப்பு குறைவதாலும், நொறுக்குத் தீனியாலும் உடல் பருமன் நோய் வருகிறது.
3. மாணவர்களுக்கு கவனம் (Comcentration) குறைகிறது.
4. வாசிக்கும் பழக்கம் குறைகிறது.
5. இளையோர் விளம்பரங்களால் மூளைச் சலவை செய்யப்படுகின்றனர்.
6. படிப்பு பாழாகிறது.
7. வன்முறை மனநிலை உருவாகிறது.
8. குடும்பத்தில் உறவுகள் குறைகின்றன.
9. அடிமைப்படுத்தும் பழக்கமாக மாறுகின்றது.
10. ஆன்மீகம் அடி வாங்குகிறது.

இப்படி நன்மைகளும், தீமைகளும் இணைந்த, இரு பக்கமும் "கருக்கு வாய்ந்த கத்தி போல" தொலைக்காட்சி திகழ்வதால், அதைப் பயன்படுத்துவதில் ஒரு மனப் பக்குவம், முதிர்ச்சி தேவைப்படுகிறது. வயதில் பெரியவர்கள் ஓரளவு பொறுப்புணர்வுடன் செயல்படுகின்றனர். ஆனால், இளையோர், மாணவச் சமுதாயம், குழந்தைகள் அதற்கு எளிதில் அடிமைப்பட்டு விடுகின்றனர் என்பதைக் காண்கிறோம்.

குறிப்பாக, ஆன்மீகப் பார்வையில் நோக்கும்போது, வீடுகளில் குடும்பமாக, தனியாக செபிக்கின்ற பழக்கம் தொலைக்காட்சியால் தொலைந்து போயிருக்கின்றது. அது மட்டுமல்ல, இறைவனுக்குக் கொடுக்க வேண்டிய நேரத்தையும், இடத்தையும் தொலைக்காட்சி எடுத்துக்கொள்கிறது. மேலும், மணவாழ்வு, கருக்கலைப்பு, தவறான உறவுகள் போன்ற அறநெறிச்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..



# சொல் நோன்பிருப்போம்

உண்ணா நோன்பு, ஊடக நோன்பு இவற்றோடு நம் செபவாழ்வில் நாம் இணைத்துக் கொள்ள வேண்டிய இன்னொரு நோன்பு சொல் நோன்பு. ஆம், சொற்கள் நம் வாழ்வில் இன்றியமையாப் பங்கு வகிக்கின்றன. சொற்கள் நம் ஆளுமையை, நாம் எத்தகையவர் என்பதை, ஏன் நமது ஆன்மீகத்தையே வெளிப்படுத்துகின்றன என்று சொன்னால் மிகையே அல்ல. அன்றாடம் நாம் நூற்றுக்கணக்காக சொற்களைப் பேசுகின்றோம். நமது பேச்சில், பேசும் சொற்களில் நாம் கையாளும் தன் கட்டுப்பாடு, விழிப்புணர்வு, தியாகத்தையே சொல் நோன்பு என அழைக்கின்றோம்.

**சொற்களின் வலிமை**

திருவிவிலியம் சொற்களின் வலிமையைப் பற்றி நிறைய சொல்கின்றது. குறிப்பாக, பழைய ஏற்பாட்டில் சீராக்கின் ஞானநூல் பேச்சின் ஆற்றலை எடுத்துரைத்து, பின்னர் ஏராளமான நல்ல அறிவுரைகளைத் தருகின்றது.

சொல் மனிதரின் உள்ளப் பண்பாட்டைக் காட்டுகின்றது. பேச்சைக் கொண்டே அவரை அறிந்து கொள்ளலாம். (சீஞா 27:7) என்பது அருமையான செய்தி. (புதிய ஏற்பாட்டிலும் இதே செய்தியைப் பார்க்கின்றோம். உன் பேச்சே உன்னை யாரென்று காட்டிக்கொடுக்கிறது மத் 26:73) நவீன உளவியலும் இதையே சொல்கின்றது என்பது வியப்பு. ஞானம் பேச்சில் புலப்படும். நற்பயிற்சி வாய்மொழியால் வெளிப்படும் (சீஞா 4:24) என்ற சொற்களே நம் ஆளுமையை, நாம் வளர்க்கப்பட்ட விதத்தைக் காட்டுகிறது என்னும் உண்மையைச் சொல்கிறது.

பெருமையும், சிறுமையும் பேச்சினால் வரும். நாக்கே ஒருவருக்கு வீழ்ச்சியைத் தரும் (சீ ஞா 5:13) என்பது பேச்சின் வலிமையை எடுத்துரைக்கும் இன்னொரு வாக்கு. “ஒரு வார்த்தை கொல்லும், ஒரு வார்த்தை வெல்லும்” என்னும் பழமொழியை நாம் அறிவோம். அதனையே சாவுக்கு ஒப்பிடக்கூடிய தீய சொற்கள் உண்டு (சீ. ஞா 23:12) என்கிறது திருமறை. பலர் வாள்முனையில் மடிந்திருக்கின்றனர். நாவால் மடிந்தோரே அவர்களைவிட மிகுதியானோர் (சீ. ஞா 28:18) சொற்களின் ஆற்றலை இதைவிட வலிமையாக எப்படி சொல்ல முடியும்?

**ஞானிகள் யார்?**

“ஞானிகள் யார்?” என்னும் கேள்விக்கு சொற்களைக் கொண்டே இந்நூல் விடை தருகிறது. மக்கள் தலைவர் தம் பேச்சைக் கொணடே ஞானியாய் மதிக்கப்படுகிறார். வாயாடியைக் கண்டு அவர்களின் நகரத்தார் அஞ்சுவர். உளறு வாயாரை ஊரார் வெறுப்பர் (சீ.ஞா 9:17-118) அமைதி காப்போர் ஞானியராக எண்ணப்படுகின்றனர். வாயாடிகள் வெறுப்புக்கு ஆளாகின்றனர் (சீ. ஞா 20:5) அறிவற்றோர் எளிதாகப் பிதற்றுவர். நுண்ணறிவு கொண்டோர் சொற்களை அளந்து பேசுவர் (சீ.ஞா 21:25). அறிவிலார் சிந்திக்கும் முன் பேசுவர். அறிஞர் பேசுமுன் சிந்திப்பர் (சீ. ஞா 21:26) எதைப் பேசுவது எனத் தெரியாமல் அமைதியாய் இருப்போரும் உண்டு. எப்போது பேசுவது எனத் தெரியாமல் அமைதியாய் இருப்போரும் உண்டு. எப்போது பேசுவது எனத் தெரிந்தவராய் அமைதி காப்போரும் உண்டு (சீ. ஞா 20:6)

**பேச்சில் தவிர்க்க வேண்டியவை**

திறந்த உள்ளத்துடன் எல்லாரிடமும் பேசாதே (சீ.ஞா 8:19). மற்றவருக்குச் செவிசாய்க்குமுன்பே, மறுமொழி சொல்லாதே. அடுத்தவர் பேசும்போது குறுக்கே பேசாதே (சீ. ஞா 5:12). உன்னிடம் கூறப்பட்டதை மற்றவர்களிடம் சொல்லாதே. சொல்லாவிடில், உனக்கு ஒன்றும் குறைந்துவிடாது (சீ.ஞா 19:7) பண்பற்ற பேச்சுக்கு உன் நாவைப் பழக்காதே. அது பாவத்துக்குரிய பேச்சு (சீ.ஞா 23:13). பேசவேண்டிய நேரத்தில் பேசாமல் இருந்துவிடாதே (சீ.ஞா 4:23). கொடைகள் வழங்கும்போது புண்படுத்தும் சொற்களைக் கூறாதே. ஒரு சொல் கொடையை விட மேலானது அன்றோ (சீ.ஞா 18:15-17). நாவால் தவறாதபடி எச்சரிக்கையாய் இரு. இல்லையேல், உனக்காய்ப் பதுங்கியிருப்போர் முன் நீ வீழ்ச்சியுறுவாய் (சீ.ஞா 28:26) எனவே, விரைந்து செவிசாய். பொறுத்திருந்து விடை கூறு (சீ.ஞா 4:23) என்று அறிவுறுத்துகிறது சீராக்கின் ஞானநூல்.

**இயேசுவின் பார்வையில் சொற்கள்.**

ஞானம் நிறைந்த இறைமகன் இயேசு சொற்களின் வலிமையை நன்கு உணர்ந்திருந்தார். எனவே, சொற்களைப் பற்றி அவர் தெளிவாகப் போதித்தார். மரத்தை அதன் கனியால் அறியலாம். உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும் (மத் 12:34). மனிதர் பேசும் ஒவ்வொரு வீண் வார்த்தைக்கும் தீர்ப்புநாளில் கணக்குக் கொடுக்க வேண்டும் (மத் 12:36) உங்கள் வார்த்தைகளைக் கொண்டே நீங்கள் குற்றமற்றவர்களாகக் கருதப்படுவீர்கள் குற்றவாளிகளாகவும் கருதப்படுவீர்கள் (மத் 12:37). எனவே நீங்கள் பேசும்போது ஆம் என்றால் ஆம் எனவும் இல்லை என்றால் இல்லை எனவும் சொல்லுங்கள். இதைவிட மிகுதியாகச் சொல்வது எதுவும் தீயோனிடமிருந்து வருகிறது (மத் 5:37). தாம் பிறருக்குப் போதித்ததை இயேசு வாழ்ந்து காட்டினார். நலம் தரும் சொற்களைப் மட்டுமே பேசினார். சில நேரங்களில் அமைதி காத்தார்.

**பவுலும், யாக்கோபும்**

இயேசுவின் அடிச்சுவட்டில் நடந்த பவுலடியாரும் சொற்களில் கவனம் கொள்ளுமாறு தொடக்கத் திருச்சபையினருக்கு அறிவுரை பகர்ந்தார். “மடத்தனமாக பேச்சு, பகடி பண்ணுதல் ஆகியலை தகாதவை” (எபே 5:4) என்றார். “கெட்ட வார்த்தை எதுவும் உங்கள் வாயினின்று வரக்கூடாது. கேட்போர் பயனடையும்படி தேவைக்கேற்றவாறு, அருள் வளர்ச்சிக்கேற்ற...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## XVIII ஊடக நோன்பிருப்போம்

செயல்பாடுகளில் கடவுளின் கட்டளைகள், திருச்சபைப் போதனைகளைவிட, தொலைக்காட்சியின் தாக்கமே அதிகமாக இருக்கிறது. இதனால், தொலைக்காட்சி ஓர் இக்காலச் சிலையாக மாறுகின்றது.

எனவே, தொலைக்காட்சியைப் பொறுப்புணர்வுடன் அணுக புதிய உத்திகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. அவற்றில் ஒன்றே ஊடக நோன்பு. தொலைக்காட்சிக்கு இணையாக இன்று அனைவர் மீதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள இன்னோர் ஊடகம் அலைபேசி. இதுவும் நன்மை, தீமைகள் நிறைந்து விளங்குகின்றது.

**அலைபேசியின் நன்மைகள்**

தொலைக்காட்சி போலவே அலைபேசியும் மிகப் பெரிய சமூக ஒருங்கிணைப்பாக உள்ளது.

1. தொலைவில் உள்ளோரோடு எப்போதும் தொடர்பு கொள்ள உதவுகிறது.
2. சிறந்த, விரைவான ஊடகம்
3. எங்கும் எளிதாக எடுத்துச்செல்லக்கூடிய சாதனம்.
4. வணிகர்கள், மருத்துவர்கள், பயணிகள் போன்றோரின் அவசரத் தேவைகளுக்கு ஆதரவாக இருக்கிறது.
5. பல்வேறு துணை ஊடகங்களை உள்ளடக்கியது.

ஆனாலும், பணித் தேவைகளைவிட, சமூக உறவுத் தேவைகளுக்கே பெரும்பாலானோர் அலைபேசியைப் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக, இளையோர், மாணவர் அலைபேசியினால் பல சிக்கல்களைச் சந்திக்கின்றனர்.

**அலைபேசியின் தீமைகள்**

1. அதிகப் பயன்பாட்டால் புற்றுநோய் போன்ற உயிர்க்கொல்லி நோய்கள் வந்து உயிருக்கே உலை வைக்கலாம்.
2. தோல் நோய்கள், ஆண்மைக் குறைவு போன்ற பல நோய்கள் வந்து உடல் நலனைக் கெடுக்கலாம்.
3. மின்காந்த அலைகள் மூலம் சிட்டுக்குருவி, வண்டுகள் போன்ற உயிரினங்கள் அழிகின்றன.
4. இளையோர் அதிகம் பேசி நேரத்தை வீணாக்குகின்றனர்.
5. வீட்டுக்கொரு தொலைபேசி போய், ஆளுக்கொரு அலைபேசி வந்ததால், பணம் விரையமாகிறது.
6. மாணவரின் படிப்பு பாழாகிறது
7. அலைபேசிக்கு அடிமையாகின்றனர் இளையோர்.
8. பொது இடங்கள், மருத்துவமனைகள், பேருந்து எங்கும் பிறரைப் பற்றிக் கவலைப்படாது, உரத்த குரலில் பேசும் பண்பாட்டுச் சீரழிவு பெருகுகிறது.
9. பேசிக்கொண்டே நடப்பதால், வாகனம் ஓட்டுவதால் விபத்துக்கள் நிகழ்கின்றன.
10. கொலை, கொள்ளை, விபச்சாரம், பெண்களைப் படம் எடுத்தல் போன்றவற்றுக்கு அலைபேசி பயன்படுத்தப்பட்டு ஒழுக்கவியல் தீமைகள் பரவுகின்றன.

இவை அனைத்துக்கும் மேலாக, அலைபேசி ஆன்மீகத் தீமைகளையும் உருவாக்குகிறது. கோவிலில் வழிபாடு நடக்கும்போதே அலைபேசியைப் பயன்படுத்தும் மக்களைக் காணமுடிகிறது. செப வேளையிலும் கூட அலைபேசி மணி ஒலித்தால் கண்டிப்பாக எடுத்துவிடுகிற கட்டாயப் பழக்கமாக பலருக்கு மாறிவிட்டது. இறையச்சம் குறைந்து, கைபேசி அச்சம் வளர்கிறது. இறைவனோடு பேச நேரமில்லை, ஆனால், அலைபேசியில் அரட்டை அடிக்க நேரமிருக்கிறது. இறைமொழியாம் விவிலியம் வாசிக்க ஆர்வமும், நேரமும் இல்லை. ஆனால், நண்பர்கள், தோழியரின் குரல் கேட்க ஆர்வமும், நேரமும் உண்டு. இவை அனைத்தையும் இணைத்துப் பார்த்தால், அலைபேசியும் பலருக்கு ஒரு நவீனச் சிலைதான் எனத் தோன்றுகிறது.

தொலைக்காட்சி, அலைபேசி இரண்டுமே வாழ்வின் தவிர்க்க முடியாத ஊடகங்களாக இருக்கின்றன. எனவே, அவற்றைப் பொறுப்புணர்வோடு பயன்படுத்த வேண்டும். அதேவேளையில், அவை தீமைகளுக்கும், பாவத்துக்கும் இட்டுச் செல்லாமல் காக்க வேண்டிய கடப்பாடும் நமக்கிருக்கிறது.

விதைப்பவர் உவமையில் முட்செடிகள் நடுவில் விழுந்து நெருக்கப்படுகின்ற விதைகளுக்கு இயேசு விளக்கம் தந்தபோது, முட்செடிகளுக்குள் விழுந்த விதைகள் வார்த்தையைக் கேட்டும் கவலை, செல்வம், வாழ்வில் வரும் இன்பங்கள் போன்றவற்றால் நெருக்கப்பட்டு முதிர்ச்சி அடையாதிருப்பவர்களைக் குறிக்கும் (லூக் 8:14) என்றார். நம் காலத்தில் வாழ்வில் வரும் இன்பங்களுக்கு தொலைக்காட்சியும், அலைபேசியும் அடக்கம் என்பதை நினைவில் கொள்வோம்.

நேரம் என்பது மதிப்பு மிக்கது. தொலைக்காட்சியிலும், அலைபேசியிலும் நம் நேரத்தை வீணாக்கக் கூடாது. ஏதென்சு நகரத்தார் புதிய செய்திகளைக் கேட்பதிலும், சொல்வதிலும் மட்டுமே தங்கள் நேரத்தைப் போக்கினர். (தி.ப 17:21) நாம் அவர்களைப் போன்றிருக்க வேண்டாம். ஒவ்வொன்றுக்கும் ஒரு நேரமுண்டு. உலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு காலமுண்டு (ச.உ 3:1) என்னும் இறைமொழிக்கேற்ப பொழுதுபோக்கிற்கும், சமூக உறவுகளுக்கும் தேவையான நேரத்தை ஒதுக்கிவிட்டு, இறைவனுக்கும் போதிய நேரம் கொடுக்க வேண்டும்.

உம் வாக்குறுதிகளைச் சிந்திப்பதற்காக, “இரவுச் சாம நேரங்களில் நான் கண்விழித்துள்ளேன்” (தி.பா 119:148) என்கிறார் திருப்பாடல் ஆசிரியர். இரவில் கண்விழித்துத் தொலைக்காட்சி பார்ப்பதும், அலைபேசியில் பேசுவதும் தவிர்க்கப்பட வேண்டியவை.

இவ்வுலக இன்பங்கள், பொழுதுபோக்குகள் இவற்றில் நாம் சிக்கிக்கொண்டால், நம் ஆன்மா மந்தமடையும் என எச்சரித்தார் ஆண்டவர் இயேசு. உங்கள் உள்ளங்கள் குடிவெறி, களியாட்டத்தாலும், இவ்வுலக வாழ்க்கைக்குரிய கவலையினாலும் மந்தமடையாதவாறும், அந்நாள் திடீரென வந்து ஒரு கண்ணியைப்போல் உங்களைச் சிக்க வைக்காதவாறும் எச்சரிக்கையாய் இருங்கள் (லூக் 21:34-35) என்பவை இயேசுவின் மொழிகள்.

பேதுருவும் இத்தகைய எச்சரிக்கை ஒன்றைத் தருகிறார். எல்லாவற்றிற்கும் முடிவு நெருங்கிவிட்டது. எனவே, இறைவனிடம் வேண்டுதல் செய்யுமாறு கட்டுப்பாடோடும், அறிவுத் தெளிவோடும் இருங்கள் (1பேது 4:7) என்னும் அறிவுரை நமக்குத் தன் கட்டுப்பாடு, விழிப்புணர்வு இரண்டையும் பரிந்துரைக்கிறது. இவை இரண்டும் உள்ளவர்கள் நிச்சயம் ஊடக நோன்பை ஏற்றுக்கொள்வார்கள்.

**ஊடக நோன்புக்காக பரிந்துரைகள்**

தொலைக்காட்சியே இல்லாமலும், அலைபேசியே சொந்தமாய் இல்லாமலும் மிகச் சிலர் நம் நடுவே வாழ்கின்றனர். அவர்களை ஏற்பிசைவு செய்வோம் இத்தவக்காலத்தில்.

வாரம் ஒரு நாள், வெள்ளிதோறும் முடிந்தால் தொலைக்காட்சி பாராமலும், அலைபேசியில் பேசாமலும் இருப்போம். அது இயலாவிட்டால், பார்க்கும், பேசும் நேரத்தை மிகவே குறைப்போம். அன்றைய நாளில் இறைவனுக்கும், உறவுகளுக்கும் அதிக நேரம் ஒதுக்குவோம். இறுதிக்காலம் இதுவே என அறிந்து கொள்ளுங்கள். உறக்கத்தினின்று விழித்தெழும் நேரம் ஏற்கனவே வந்துவிட்டது. நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை கொண்டபோது இருந்ததைவிட மீட்பு இப்பொழுது மிக அண்மையில் உள்ளது. (உரோ 13:11) என்னும் பவுலடியாரின் அறிவுரையை ஏற்று ஊடக நோன்பின் மூலம் இத்தவக்காலத்தில் இறைவனை நெருங்கி வருவோமாக! ஊடகங்களைப் பொறுப்புணர்வோடு பயன்படுத்துவோமாக!



# இம்மாத புனிதர்கள்





## மாத்தா புனித ஜோன்

### மாசி - 1

இவரது தந்தை இவரை பாரீசுக்கு படிக்க அனுப்பிவைத்தார். அவருக்கு பெற்றோர் அனுப்பி வைத்த பணத்தில் பெரும் பகுதியை ஏழைகளுக்கு செலவிட்டார். வெள்ளிக் கிழமைகளில் மருத்துவமனை சென்று நோயாளிகளை சந்திப்பார். குருவாகி முதல் திருப்பலி ஆற்றிய அன்று அடிமைகளை மீட்பதுபோன்று காட்சி அருளப்பட்டது. இவர் காட்டில் தவமியற்றி வந்த புனித பெலிக்ஸ் என்பவருடன் சென்று வசிக்கலானார். மீண்டும் ஒரு காட்சி அருளப்பட்டது. அதன்பின் புனித பெலிக்சின் உதவியுடன் தூய திருத்துவ சபை என்னும் துறவறசபையை கிறிஸ்துவ அடிமைகளை மீட்பதற்கென நிறுவினார். இதற்கு திருத்தந்தை 3ஆம் இன்னொசென்ட் 1198ல் அங்கீகாரமளித்தார். இவர் மரியன்னையை "அன்னை மரியா சிறந்த பரிகாரி" என அழைத்தார். 1666ல் திருத்தந்தை 7ஆம் அலெக்சாந்தர் இவரை புனிதராக அறிவித்தார்.

## புனித ஜோன் –தெ – பிரிட்டோ (அருளானந்தர்)

### மாசி - 4

போர்த்துக்கல் நாட்டிலுள்ள லிஸ்பன் நகரில் பங்குனி 1ம் திகதி 1647ல் பிறந்தவர். இயேசு சபையில் குருவாகி மறைபணி செய்ய இந்தியா வந்தார். தமிழைக் கற்று மறைபணி செய்ய ஆற்றல் பெற்றார். 1664ல் இராமநாதபுரத்தை ஆண்ட அரசனால் கைது செய்யப்பட்டு உடனே தாய்நாடு திரும்பினார். அங்கே அவருக்குக் கிடைக்கவிருந்த ஆயர் பதவியை துறந்து மீண்டும் தமிழகம் வந்து மறவநாட்டில் பணி செய்தார். அரசக் குடும்பத்தை சார்ந்த தடியத்தேவர் கிறிஸ்தவராக மாற விரும்பினார். அவர் பல பெண்களை மணந்து வாழ்ந்தவர். எனவே அவரது முதல் மனைவியைத் தவிர மற்ற மனைவிகளைத் தள்ளி வைத்துவிட்டார். அவ்வாறு தள்ளி வைக்கப்பட்ட பெண்களில் ஒருத்தியின் தூண்டுதலால் புனிதர் 1693 மாசி 4ஆம் நாள் ஓரியூரில் தலை வெட்டுண்டு மறைசாட்சி மரணமடைந்தார். இவரது திருத்தலம் ஓரியூரில் இருக்கிறது. அவர் வெட்டுண்ட இடத்திலுள்ள மண் இன்றும் செந்நிறத்தில் உள்ளது.

## புனிதர் கொன்சாலோ கார்சியா

### மாசி - 6

இத்தாலி, பொம்பேயி நகரில் பதசினில் பிறந்தவர். பிரான்சிஸ்கன் சபை துணை சகோதரராக இருந்தபோது அவர் சமையல் அறையிலும், உணவருந்தும் இடத்திலும் பணிகளை செய்தபோது அவர் அந்நகரில் வாழ்ந்துக் கொண்டிருந்த ஜப்பானியர்கள் சிலரை சந்திக்க நேர்ந்தது. அவர்களுடன் நட்புக்கொண்டு அவர்கள் நோயுற்று வருந்தியபோது மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்வார். மருத்துவமனைக்குச் சென்று சந்தித்து ஆறுதலளிப்பார். பிரான்சிஸ்கன் சபை குருக்கள் தங்கள் சபையை ஜப்பான் நாட்டில் நிறுவுவதற்காக கொன்சாலவையும் அனுப்பினர். ஜப்பானில் அவர் மறைபணி செய்தபோது அங்கு வேதகலகம் மூண்டது. புனிதரையும் அவருடன் மூன்று பிரான்சிஸ்கன் குருக்களையும் பிடித்து மரண தண்டனை விதித்தனர். 5-2-1597 அன்று இவர் சிலுவையில் அறையப்பட்டு மறைசாட்சியாக மரணமடைந்தார்.

## புனித பிளாசியு

### மாசி - 3

அர்மீனியாவிலுள்ள செபஸ்தே நகரில் பிறந்தவர். மறைசாட்சி இவர். மருத்துவமும், தத்துவ இயலும் பயின்றவர். மிகுந்த பக்திக் கொண்டவர். நற்குணங்கள் அனைத்தும் கொண்டவர். எனவே அவர் வாழ்ந்த நகரில் மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமானவராக விளங்கினார். அந்த நகரில் ஆயர் இறந்த பின்னர் மக்கள் புனித பிளாசியுவை ஆயராக வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டு அவரை ஆயராகத் தேர்ந்தெடுத்தனர். இவரது விழாவில் குருவானவர் மந்திரித்த இரு மெழுகுதிரிகளை X வடிவில் வைத்து "தொண்டை வலிகள், புண்கள், நோய்கள் அனைத்திலிருந்தும் புனித பிளாசியுவின் பரிந்துரையால் ஆண்டவர் உம்மை குணமாக்குவாராக" எனக்கூறி செபித்து சிலுவை அடையாளம் வரைவது வழக்கம்.

## புனிதை ஆகத்தா

### மாசி - 5

சிசிலியில் உயர் குடும்பத்தில் பிறந்தவர். தன்னை இயேசுவுக்கு அர்ப்பணித்து வாழ்ந்ததால் திருமணம் செய்துக் கொள்ள விரும்பவில்லை. ஆயினும் அந்நாட்டு ஆளுநன் குயிந்தானுஸ் ஆகத்தாவை மணந்துகொள்ள விரும்பி அவரை வற்புறுத்தினான். ஆனால் புனிதை அதற்கு சம்மதிக்கவில்லை. எனவே ஆளுநன் புனிதையின் மீது பொய்யான விபச்சார வழக்கு ஒன்றை பதிவு செய்து அவரை சிறையிலடைத்துத் துன்புறுத்தினான். கொடூரமான முறையில் புனிதையின் மார்பகங்களை வெட்டினான். ஆயினும் புனிதை மிகுந்தத் துணிவுடன் அவற்றை ஏற்றுக் கொண்டதுடன் புனித பேதுருவிடம் தனக்காகப் பரிந்துரைக்க செபித்ததால் அவர் நலமடைந்தார். ஆயினும் அவர் அனுபவித்த மிகக் கொடுமையான சித்திரவதைகளின் காரணமாக சிறையிலேயே அவர் மரணத்தைத் தழுவினார். மரணவேளையிலும் அவர் செபித்தவாறே மரணமடைந்தார்.

## புனித எரோணிமுஸ் எமிலியானி

### மாசி - 8

வெனிஸில் பிறந்தவர். இளமையில் தந்தையை இழந்தவர். 15ஆம் வயதில் இராணுவத்தில் சேர்ந்து முன்னேறி ஆளுநரானார். ஆயினும் இவர் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். அப்போது மரியன்னையிடம் வேண்டிக் கொண்டதால் அதிசயமாகத் தப்பித்தார். எனவே மரியன்னை திருத்தலத்திற்கு திருயாத்திரையாகச் சென்றார். பின் மாஜிஸ்டிரேட்டாக நியமிக்கப்பட்டார். பணிநேரம் தவிர மற்ற சமயங்களில் அறச்செயல்களை செய்வதிலும், இறையியல் படிப்பதிலும் செலவிட்டார். அநாதைப் பிள்ளைகளுக்கு உதவி செய்தார். 1528ல் பிளேக் நோய் பரவியபோது, வியாதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியும், அனாதையாகிவிட்ட பிள்ளைகளுக்கு ஆதரவாகவும் இருந்தார். அப்பிள்ளைகள் தங்கிட இல்லம் ஒன்றையும் கட்டினார். இவரது பணியின் காரணமாக புனித கெஜத்தானின் மருத்துவமனை பராமரிப்பு இவரது பொறுப்பில் விடப்பட்டது. வெரோணா, மிலான், பெர்காமோ போன்ற இடங்களில் பிள்ளைகளுக்கான அனாதை இல்லங்களைக் கட்டினார். இவருடன் பணி செய்ய இருகுருக்களும் இணைந்தனர் இறுதியில் நோயுற்று இறந்தார். திருத்தந்தை 15ஆம் கிளமென்டால் 1767ல் புனிதராக அறிவிக்கப்பட்டார்.

# வஹாக்கோட்டை தேசிய திருத்தலம்
## தவக்கால திருயாத்திரை நிகழ்ச்சி நிரல் – 2018

**திருநீற்றுப் புதன் திருப்பலிகள் :**
காலை 7.00 மணிக்கு மற்றும் மாலை 5.00 மணிக்கு

**வாராந்த விசேட திருவழிபாடுகள்**
**வெள்ளிக்கிழமைகளில் : கல்வாரியில்**
மாலை 4.00 மணிக்கு திருச்சிலுவைப்பாதை மற்றும் திருப்பலி
**ஞாயிறு திருப்பலிகள் : திருத்தலத்தில்**
காலை 7.00 மணி மற்றும், காலை 10.30 மணிக்கு

**யாத்திரிகர்களின் கவனத்திற்கு**

- திருயாத்திரைக்காக வரும் இறைமக்கள் உங்களது வசதிக்கேற்ப, திருச்சிலுவைப்பாதைத் தியானம் மற்றும் திருப்பலிகளை ஒழுங்கு செய்து கொள்ளலாம்.
- தங்குமிட வசதிகள் மற்றும் உணவு வசதிகளை, முன்கூட்டியே நீங்கள் அறிவித்தால், அவை ஒழுங்கு செய்து தரப்படும்.

### புனித வார நிகழ்வுகள்

**குருத்தோலை ஞாயிறு :** திருப்பலிகள் : காலை 7.00 மணி மற்றும் 10.30 மணிக்கு

**பெரிய வியாழன் (ஆண்டவரின் இராவுணவு)**
**பாதம் கழுவும் திருச்சடங்கு** மாலை 5.00 மணிக்கு, அதனைத் தொடர்ந்து **திவ்விய நற்கருணை ஆராதனை** நள்ளிரவு வரை

மேலதிக விபரங்களுக்கு :
அருட்தந்தை டொம் ஷன்சன வசார பு.ஆ.ச அடிகள்,
திருத்தல பரிபாலகர், புனித ஆசீர்வாதப்பர் சபை குருக்கள்,
புனித அந்தோனியார் தேசிய திருத்தலம், வஹாக்கோட்டை
தொ.பே இல 0775-515616 / 066-2289210

**பெரிய வெள்ளி : திறந்த வெளிச் சிலுவைப்பாதை** பகல் 2.00 மணிக்கு கல்வாரியில் ஆரம்பமாகி, அதனைத் தொடர்ந்து **ஆண்டவரின் திருப்பாடுகளின் திருவழிபாடு** இடம் பெறும்.

**அல்லேலூயா சனிக்கிழமை**
திருவிழிப்பு திருவழிபாடு இரவு 11.00 மணி முதல்

**உயிர்த்த ஆண்டவரின் பெருவிழா (பாஸ்கா) ஞாயிறு திருப்பலி காலை 8.00 மணிக்கு**

இறை அன்பை அனுபவிக்க உங்கள் அனைவரையும் அழைக்கின்றோம்!!!

(Q17N7487)

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் [ஓப்செட் முறையில்]
- நவீன பிரதியாக்கம் [டுப்ளோ],
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்



**திருமண சேவைகள்**

- திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உடம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.

பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.


**வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்**




| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |



| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |







**தொடர்புகொள்ளுங்கள்**
இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீபய மாவத்தை
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீபய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்